பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

செப்டம்பர் 2021

## “இமைப்பொழுதும் சோராது...”



## பாவலர் வையவன்

நேர்காணல்

### மேடுபள்ளங்கள் நிறைந்திட்ட சோலை

கவிஞர் லீ

### முருங்கை நடு! நோய்களை தடு!!

புதுவைத் தமிழ்நெஞ்சன்



## பாவலர் வள்ளிமுத்து நேர்காணல்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


பல்சுவை

# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | செப்டம்பர் 2021

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி


ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


மேலுள்ள அட்டைப்படத்தில் டச் அல்லது க்ளிக் செய்து ஹைக்கூ திண்ணை 7 இதழினை தவிறக்கம் download செய்யவும்.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்பவேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பானத் தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

மொழியென்பது ஓர் இனத்தின் அடையாளமாகும். அது மட்டுமல்லாமல், நம் பண்பாடு, கலாச்சாரம், மரபு இவற்றைப் பிரதிபலித்து, மற்றவர்களிடம் கொண்டு சேர்ப்பதுவும் மொழியே! இவற்றையெல்லாம் களஞ்சியப்படுத்தவும் ஏனையோருக்குக் கொண்டு சேர்க்கவும் இலக்கியங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஆதிஉலகில் இலக்கியத்துகாக முதலில் சங்கம் வளர்த்தவை பிரெஞ்சும் தமிழுமாகும். அன்று தொட்டு இன்றுவரை மொழிக்காக அதுவும் நம் தமிழ்மொழிக்காகத் தொண்டாற்றியவர்கள் தொகையும் கொஞ்சநஞ்சமல்ல. இன்றும் அவர்கள்தம் புகழ் மங்காமல் ஒளி வீச இலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன என்றும் சொல்லலாம்.

தமிழர்தம் வரலாறுகளை சுமந்த இலக்கியங்கள் பலவுண்டு. அவற்றின் வனப்புக்கும் பெருமைக்கும் எம் தமிழ்மொழியின் இனிமையும் ஒரு காரணம் எனக் கொள்ளலாம். தொன்மை வாய்ந்த எம் தமிழ், செம்மொழி அந்தஸ்து பெற அரும்பாடு பட்டவர் மறைந்த தலைவர் மு.கருணாநிதி என்பதையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருவோம்.

இலக்கியத்துக்காக என சர்வதேச ரீதியில் ஒருநாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.இருப்பினும் இலக்கியத்தாகம் கொண்டோர்க்கு, இலக்கியங்களைக் கொண்டாட ஒருநாள்தான் போதுமா என்ன? நாம் எம் ஆயுட்காலம் முழுக்க கொண்டாடி மகிழலாமே! எம் உயிரில், உணர்வில் ஒன்றிக் கலந்துவிட்ட பழந்தமிழையும், எம் கலாச்சார விழுமியங்களைப் பழுதுபடாமல் பேணும் இலக்கியங்களையும் பாதுகாத்து, எம் எதிர்கால தேசத்தின் விழுதுகளிடமும் கொண்டு சேர்ப்போம்.

அதுபோலவே, ஆரோக்கியத்தைப் போல் சிறந்த செல்வம் வேறேதுமில்லை.அதனால், எங்கிருந்தாலும் என்ன செய்தாலும் உரிய முறையில் தொற்றுநீக்கி, சுகாதாரமாய் பாதுகாப்புடன் இருப்போம்! சூழலையும் பாதுகாப்போம்!

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

**வழிவழி வந்து நம்மை**
**வள்மாக்கும் கவிதை வாழ**
**விழிவிழி கவிதை என்னும்**
**விளக்கேற்று நெஞ்ச வீட்டில்**



பேரறிஞர் ஆனைமுத்துவுடன்
பாவலர் வையவன்

# பாவலர் வையவன்

## நேர்காணல்

நேர்கண்டவர் : கவிஞர் அன்புவல்லி தங்கவேலன்

# “இமைப்பொழுதும் சோராது...”

“எமக்குத் தொழில் கவிதை;
இமைப்பொழுதும் சோராதிருத்தல்” என்பான் பாரதி. ஆசிரியப் பணி, ஆனைமுத்து ஐய்யாவுடன் இயக்கப் பணி என தீவிரமாக இயங்கிய வையவன் அப்பணிகளுக்கிடையே அதன் நடுவே பத்து கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். அறம் சார்ந்த நேர்மையான வாழ்வு என்பது இலட்சியம்.  எந்த வெளிச்சத்தையும் போலிமையையும் விரும்பாத பாவலர் வையவன் ‘மனத்துக்கண் மாசிலன்’ என்பதை தன் நெறியாகக் கொண்டவர். தமிழ் நெஞ்சம் இதழுக்காக அவரை நேர்காணல் செய்தபோது....

## 01. தங்களைப் பற்றிய ஒரு சிற்றறிமுகம் தாருங்கள்.

என் இயற்பெயர் லோகநாதன். லோகம் என்பதை வையகம் எனத் தமிழ்ப்படுத்தி, 2003ல் கவிஞர் தமிழேந்தி என்னை வையவனாக்கினார். ஐ.டி.ஐ. ஃபிட்டர் தான் என் அடிப்படைக் கல்வி. இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி, அடிசன், எம்.ஆர் எஃப் டயர் ஆகிய தொழிற் சாலைகளில் பணியாற்றியுள்ளேன். பிறகு ஓவிய ஆசிரியராக அரசுப் பணியில் சேர்ந்து தமிழாசிரியர், பொருளியல் ஆசிரியர் எனப் பதவி உயர்வுகள் பெற்று முப்பத்தோரு ஆண்டுகள் முடித்து பணிநிறைவும் பெற்று விட்டேன். பத்து கவிதை நூல்கள் எழுதி யுள்ளேன். தமிழ் இனம், மொழி, நாடு எனும் வேட்கை உடையவன். அது சார்ந்த பணிகளைச் செய்ய கிடைத்த வாய்ப்புகளில் பங்காற்றியுள்ளேன்.

## 02. எழுதுவதன் நோக்கமாகவும் எய்தப் படும் பயனாகவும் தாங்கள் கருதுவதைக் கூறுங்கள்.

தமிழில் ‘நுதலிப் புகுதல்’ என்பது நீங்கள் அறிந்ததுதான். ஒரு நூலை செய் வதற்கு படைப்பாளி ‘அதன் தேவையான’ ஒரு காரணத்தைச் சொல்லவேண்டும். மூன்று அறங்களைச் சொல்வதற்காக கண்ணகி காப்பியத்தை எழுதுவதாக இளங்கோவடிகள் சொல்வார். இப்போதுள்ள நூல்களுக்கு அந்த மரபு இல்லை. நான் உட்படவே சொல்கிறேன். துண்டுதுண்டு கவிதைகளாகவும், பலதரப்பட்டவையாகவும், பெரும்பாலும் காதல் கவிதையாகவும் எழுதுவோர்க்கு ‘நுதலிப் புகுதல்’ வாய்க் காது. என்னுடைய ‘தமிழ்க்காடு’, ‘மெய் பேசுகிறேன்’, ‘மின்னல் நரசிங்கபுரம்’ ஆகிய நூல்கள் நுதலிப் புகுந்தவை; ஒரு குறிப்பிட்ட நோக்கமுடையவை. எல்லா நூல்களுக்குமே, கவிதைகளுக்குமே எதேனும் ஒரு நோக்கமிருக்கலாம். பயன் குறித்து காலம் முடிவு செய்துகொள்ளும். பாரதியின் கவிதைகளுக்கு விடுதலை நோக்கமும் பாவேந்தனின் பாடல்களுக்குத் தமிழ் நோக்கமும் இருந்தது. பயன்பாடும் இருந்தது; இருக்கிறது. மற்றபடி எழுத்துகளின் பயனை அதுவே முடிவுசெய்துகொள்ளும். உயிருள்ள எழுத்து வாழும்; பயன்படும்.

## 03. பெரியார் கொள்கைகளோடு தங் களுக்கு ஏற்பட்ட ஈர்ப்புப் பற்றியும் பெருந் தொண்டர் ஐயா வே.ஆனைமுத்து அவர்க ளோடு தங்கள் தொடர்பும் பயனும் குறித்துச் சொல்லுங்கள்.

1999 ல் கவிஞர் தமிழேந்தி எனக்கு சிந்தனையாளன் ஏட்டை அறிமுகப் படுத்தினார். அதன்மூலம் ஐயா ஆனைமுத்து அறிமுகமானார். பெரியாரால் ஈர்க்கப்பட்டு நான் ஆனைமுத்துவிடம் செல்லவில்லை. ஆனைமுத்துவால் ஈர்க்கப்பட்டு பெரியாரைத் தெரிந்து கொண்டேன். நான் ஏற்கெனவே படித்துவைத்திருந்த பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் ஆகியோரை ஐயா ஆனைமுத்து வழியாகத்தான் விளங்கிக்கொண்டேன். இந்தத் தலைவர்களைப் படிப்பதென்பது

‘மின்னல் நரசிங்கபுரம்’ நூல் வெளியீட்டில் நூலைப் பெற்றுக்கொண்டு வாழ்த்தும் அண்ணன் திரு.வீ.வி.தீனதயாளன்.



வேறு; விளங்கிக்கொள்வதென்பது வேறு; நடைமுறைப் படுத்துவதென்பது வேறு. ஆனைமுத்து, தமிழேந்தி இருவரும் என் இரண்டு கண்களுக்கு ஒளியூட்டிய விளக்குகள்.

### 04. இயற்கையோடியைந்த வாழ்வியல் பற்றிய அழுத்தமான பதிவுகளை உங்கள் நூல்களில் காண்கிறோம். இயற்கையோடு ஒப்ப வாழ்வது எப்படி?

திரைப்பட இயக்குநர் அகத்தியன் எழுதிய காலந்தோறும் காவிரி நூலை தலையில் சுமந்தபோது...



இயற்கையோடு இயைந்து வாழ்வது குறித்து எழுதமுடிந்த அளவுக்கு முற்றிலும் எவராலும் வாழ முடிவதில்லை. சமூக, பண்பாட்டு, அரசியல், வணிகச் சூழல்கள் அப்படியாக மாறிவிட்டன. முடிந்த அளவுக்கு வாழலாம். அடுக்கு மாடிகளிலும் நகரச் சூழல்களிலும் வாழ்பவர்க்கு இயற்கை வரம் இல்லாமலே போய்விட்டது. நகரமோ கிராமமோ எங்கிருந்தாலும் கடைபிடிக்க முடிந்த ஒன்றிரண்டு சொல்கிறேன். எப்படி தமிழர் வாழ்வின் அடிப்படை இலக்கணமாக 'நிலமும் பொழுதும்' இருக்கிறதோ, அது போல மனித உடம்பின் அடிப்படை இலக்கணம் 'உறக்கமும் விழிப்பும்'. இரவு ஒன்பது மணிக்குத் தூங்கப் போகவேண்டும். விடியல் நாலு முதல் ஐந்து மணிக்குள் எழுந்துகொள்ளவேண்டும். சூரிய உதயத்திற்குப் பின்னும் தூங்குவது என்பது முதல்கேடு. இரண்டாவது சீரான உணவு நேரம். மூன்றாவது கண்டகண்ட நொறுக்குத் தீனிகளைக் கண்ட நேரத்தில் தின்னக்கூடாது. மலம் சிறுநீர் ஆகியவற்றின் சீரான கழிவை அவதானித்துக்கொள்ளவேண்டும். ஆறு மாதத்திற்கொருமுறை பேதிக்குச் சாப்பிட வேண்டும்.

### 05. சித்த மருத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடும் பயிற்சியும் உண்டா?

இல்லை. சிறுவயதில் கிராமங்களில் பார்த்த பாட்டி வைத்தியங்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்டன. அதனால் அதன்மீது ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. தமிழ் சார்ந்த நூல்களைப் படிக்கப்படிக்க தமிழ் மண்ணுக்கான மருத்துவம் 'சித்த மருத்தும்' என்பதைஉணரமுடிந்தது.அதனால்அதன்மீது ஈடுபாடுவந்தது.வேலையில்லாமலா சித்தர்கள் அத்தனை நூல்களை எழுதிவைத்துள்ளார்கள். நஞ்சில்லா வேளாண்மையை நம்மாழ்வார் முன்னெடுத்தது போல நஞ்சில்லா மருத்துவம் நம் இயற்கை மருத்துவம். வாய்த்த வழிகளில் முடிந்த அளவு அதைக் கடைபிடிக்கலாம்.

### 06. பாவேந்தர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், உணர்ச்சிப் பாவலர் காசி. ஆனந்தன் இவர்களின் தாக்கம் உங்கள்

எழுத்துகளில் ஓங்கி ஒலிக்கிறது எப்படி?

தமிழ் மொழி, இனம், நாடு என்ற சிந்தனையோடு எழுதும் எந்த கவிஞரின் பாக்களிலுமே இந்தத் தாக்கம் இருக்கும். காரணம் மேற்சொன்ன மூன்று பாவலர்களுமே அந்த உரிமைகளுக்காகவும் அதன் விடுதலைக்காகவும் ஓங்கிக் குரல் கொடுத்தவர்கள். மேலும் அவர்களின் நூல் களைப் படித்து உள்வாங்குவதும் ஒரு காரணம். பாவேந்தரையும் பெருஞ்சித்திரனாரையும் பார்த்ததில்லை. ஆனால் காசி. ஆனந்தன் அவர்களோடு சமகாலத்தில் வாழும் வாய்ப்பு கிடைத்துவிட்டது. இந்த மூவரையும் உள்வாங்கிய ஒருவரைச் சொல்லவேண்டுமானால் அது கவிஞர் தமிழேந்திதான். என் கவிதைகளின் தாக்கம் அவர்தான்.

07. டாக்டர் மு.வ. மேடைப் பேச்சுகளை விரும்பாதவர்; அவர் போலவே மேடைப் பொழிவுகளைப் பற்றிய அங்கதம் விரவிய தங்கள் நறுக்குகள் அம்புகள்போல் பாய்கின்றன. இஃது எங்ஙனம்?

நல்ல பேச்சை எவரும் வெறுக்க மாட்டார். மு.வ.வும் வெறுத்திருக்க மாட்டார். நானும் வெறுக்கமாட்டேன். திருமுருககிருபானந்தவாரியார்,கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் ஆகியோரின் பேச்சுகளை நான் விரும்பிக் கேட்பேன். ஏன், அண்ணா கலைஞரின் பேச்சுகளை எவர்தான் வெறுக்க முடியும்?. கேளாரும் வேட்ப மொழிந்தவர்களாயிற்றே அவர்கள். நாம் பகடி செய்வதெல்லாம் மேடை நேரத்தை வீணாக்கி வந்தமர்ந்தோரை வாட்டிவதைக்கும்மேடைவாசிகளைத்தான். இந்த மேடைத் தின்னிகளின் பேச்சுகளில் நன்னூல் சொல்லும் ‘குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், உலகமலைதல், வேறொன்று உரைத்தல், சென்று தேய்ந்திருதல், நின்று பயனின்மை போன்ற பத்து குற்றங்களுக்கு மேலும் பார்க்கலாம். எத்தனையோ லட்சக்கணக்கான மணி நேரங்கள் இவர்களால் வீணாகியிருக்கிறது.



கேரளச் சுற்றுலாவின் போது ‘எடக்கல் குகை’யில் மனைவி செல்வியுடன்.

புற்றுநோயைவிட மோசமானது புகழ் நோய். இதெல்லாமும்கூட சொல்லப்பட வேண்டியவைதானே?. எனவே அவற்றைப் பாடுபொருளாக்கு கிறேன். என் பாணியில்.

08. மின்னல் நரசிங்கபுரத்துத் தலை முறையாகிய நீங்கள் கலைகளில் ஆர்வலராக இருப்பதில் வியப்பில்லை. கலைத் துறைக்கு தங்களின் பங்களிப்புகள் என்ன?

உண்மைதான். எல்லாருக்குள்ளும் ஒரு கலைஞன் உள்ளான். அது மரபின் வழி வருவது. அதேபோல திரைத்துறைக்குப் போகவேண்டுமென்னும் ஆசை எல்லா இளைஞர்களின் மனதிலும் எழுந்து அடங்கும். எனக்கும் அது வந்தது. 1988ல் சண்முகப்பிரியன் அவர்களிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தேன். அதே நேரம் ஆசிரியர் வேலையும் வந்தது. நண்பர் நடிகர் நாசரின் ஆலோசனைப்படி ஆசிரியர் வேலைக்கு வந்துவிட்டேன். சில ஆண்டுகள்



‘மின்னல் நரசிங்கபுரம்’ நூலை அப்பா சோ.கோ.ஏகாம்பரம் வெளிடுகிறார். வீ.வி. தீனதயாளன் பெற்றுக்கொள்கிறார்.



அப்பா ஏகாம்பரம் அம்மா மங்கையம்மாளுடன்.

கழித்து, இயக்குநர் ஈ.இராமதாஸ் அவர்கள் இயக்கிய ‘வாழ்க ஜனநாயகம்’ படத்தில் உதவி இயக்குநராகப் பணியாற்றினேன். ஆர்.கே.செல்வமணி, கே.எஸ்.ரவிகுமார், வ.கௌதமன் போன்றோர் இயக்குநர் இராமதாசின்பட்டறையிலிருந்தவந்தவர்கள். வ.கௌதமன் இயக்கிய ஜெயகாந்தனின் ‘சினிமாவுக்குப் போன சித்தாளு’ படத்திலும் பணியாற்றியுள்ளேன். கலைத்துறைக்கு என் பங்களிப்பு எதுவும் இல்லை. பத்து கவிதை நூல்கள் எழுதியுள்ளேன். அவ்வளவுதான்.

09. பொதுவாக உழவர்களின் வாழ்க்கை குறித்தும், விவசாயம் பற்றிய தரவுகளோடும் நூல்கள் மிகுதியும் உள்ளன. நெசவாளர் பற்றிய பதிவுகள் குறைவே என்பது என் எண்ணம். உங்களது ‘மின்னல் நரசிங்கபுரம்’ நூல் அந்தக் குறையைத் தீர்த்தது. என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

உண்மைதான். தமிழகத்தின் எல்லா தொழில்கள் சார்ந்தும், மண்சார்ந்தும், மக்களைச் சார்ந்தும் பல்வேறு நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கவிதை நூல்கள் ஆகியன நிறைய தோன்றியுள்ளன. ஆனால் காஞ்சிபுரத்தைத் தொட்டு திருவள்ளூர், அரக்கோணம், திருத்தணி, சோளிங்கர், பள்ளிப்பட்டு, நகரி, புத்தூர் போன்ற குறிப்பாக கொற்றலை ஆற்றங்கரைக்குச் சொந்தமான மக்களின் வாழ்வியல் குறித்து நானறிந்து எந்த நூலும் இல்லை. இப் பகுதிகளில் வாழ்கின்ற லட்சக்கணக்கான கைக்கோள நெசவாளர்களுக்கான வாழ்வியலைப் பேசும் முதன்முதலான ஒரு எளிய அறிமுக நூல்தான் எனது ”மின்னல் நரசிங்கபுரம்’ கவிதைத் தொகுப்பு. இன்னும் விரிவாக எழுதவேண்டிய கூறுகள் எவ்வளவோ இருக்கின்றன. காலம் அனுமதித்தால் அதையும் செய்வேன்.

10. நம் இளைஞர்களுக்கு கவிதை எழுதுவது குறித்து என்ன உரைப்பீர்கள்?

கவிதை எழுதுவது குறித்து எதையும் எவருக்கும்சொல்லவேண்டியதில்லைஎன்றே நினைக்கிறேன். அவர்களே எழுதுவார்கள். ஏதோ ஒரு காரணத்தால் எழுத வருகிறார்கள். பிறகு எப்படி எழுதவேண்டுமென அறிந்து சிலர் சரியான பாதைக்கு வந்துவிடுகிறார்கள். பலர் சறுக்கிவிடுகிறார்கள். எது சரியானது? என்பதில்கூடபல்வேறுகருத்துவேறுபாடுகள் உள்ளன. எனவே அவர்களின் மொழியை, நடையை, வடிவத்தை, பாடுபொருளை அவர்களே முடிவுசெய்துகொள்வார்கள். கவிதை எழுதுவது குறித்து எல்லாருக்குமான பொதுக்கருத்து ஒன்று இல்லை. காரணம், எழுதுகிற எல்லாருமே கவிஞர்களில்லை. கவிஞராயிருப்பதென்பது வரம்.

11. இனமானம், மொழிக் காப்பு, சாதி மறுப்பு போன்றவை கால ஓட்டத்தில் பின் தள்ளப்படுவதாக என்போன்ற முதியவர் வருந்திக் கொண்டிருக்கிறோம். பாவலர்கள் என்ன செய்யவிருக்கிறீர்கள்?

ஆம். இதற்கு உலகமயமும் வணிக மயமும்தான் முதன்மையான காரணங்கள். அடுத்ததாக இந்திய அரசமைப்பு. பாவலர்கள் மட்டும் கூடிப்பேசி முடி வெடுக்கிற செய்தியல்ல இது. பாவலர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அரசியல் போராளிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இக் களத்தில் உள்ளனர். போதுமான வெற்றி இல்லை என்பதில் எனக்கும் வருத்தம்தான். இன்று இன, மொழி, நாட்டு உணர்வோடு ஏராளமான இளைஞர்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர். ஆனால் அவர்களின் ஆற்றல் ஊடகங்களால் கொச்சை படுத்தப்படுகிறது. வணிக அரசியல்வாதிகளால் வேட்டையாடப்படுகிறது. மேலும் சட்டபூர்வமான ஆதரவும் பாதுகாப்பும் இல்லை. தமிழுக்கு மட்டுமல்ல இந்திய ஒன்றியத்தில் இருக்கும் அனைத்து வகையான மொழிவழி தேசிய இனங்களுக்கும் 'பொது எதிரி' இந்திய அரசமைப்புச் சட்டம்தான்.

## 12. தாங்கள் பழகிய பெருந் தமிழ்ச் சான்றோர்களை எங்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

அந்த வகையில் சிந்தித்தாலும் தமிழேந்தியும் ஆனைமுத்துவுமே முன் வரிசையில் வந்து நிற்கிறார்கள். அய்யா ஆனைமுத்துவை பெரும்பாலும் வெறும் இடஒதுக்கீட்டுப் போராளி என்றே அறிந்திருக்கின்றனர். அவர் ஒரு சிறந்த தமிழறிஞரும்கூட. தொல்காப்பியம் முதல் புறப்பொருள் வெண்பாமாலை இலக்கணம் பேசுவார்.சமகாலகவிதைகள்வரைஎன்னுடன் பேசியிருக்கிறார். கவிஞர் தமிழேந்தி மரபுக்கவிதை எழுதவும் அதன் பாடுபொருள் குறித்தும் நிறைய சொல்லியிருக்கிறார். இவர்கள் மூலமாக தமிழ்த்தேசிய பேரியக்கத் தலைவர் பெ.மணியரசன், எழுத்தாளர் இராசேந்திர சோழன், சு.ப.வீரபாண்டியன், புலவர் கி.த.பச்சையப்பன், இன்குலாப், ம.லெ. தங்கப்பா ஆகியோருடன் பழகியிருக்கிறேன். திருவண்ணாமலையில் வாழ்ந்த புலவர் அ.பாண்டுரங்கனார் அவர்கள் வழியே திருக்குறளையும் சைவத்தையும் உரிய நோக்கில் புரிந்துகொண்டேன். செங்கத்தை அடுத்த வளையாம்பட்டில் வாழ்ந்த தமிழர் கணக்கியல் மேதை கு.வெங்கடாசலம் அய்யாவிடம் தமிழரின் ஒட்டுமொத்த வாழ்வும், இழப்பும், வலியும் தெரிந்துகொள்ள முடிந்தது.

## 13. கவிதைகளில் சொல் விரயம் பற்றி உங்கள் கருத்தென்ன?

விரயம் விரயம்தான். அதில் மாற்றுக் கருத்தே இல்லை. பத்து அழகுகளைச் சொல்லும் தமிழ் இலக்கணம் அதில் முதலில் குறிப்பிடுவதே 'சுருங்கச் சொல்லல்'தான். அதனால்தான் சுருங்கச் சொல்லிய வடிவிலிருக்கும் திருக்குறள் மற்ற யாவற்றையும் வென்றுநிற்கிறது. எனது 'ஞானத்திலிருந்து' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசிய கவிஞர் இன்குலாப், "சொற்களைத் தட்டிப் பார்த்துப் போடவேண்டும். வீடுகட்டும் கொத்தனார் செங்கற்களைத் தட்டித்தட்டிதான் வைப்பார். அவர் அதைத் தட்டுவதன் நோக்கம் அது வெந்த கல்லா? வேகாத கல்லா? என்று தெரிந்து கொள்வதற்குதான். நாமும் வெந்த சொல்லா? வேகாத சொல்லா? என பார்த்து வைக்கவேண்டும்.

இயக்குநர் அகத்தியன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து அவரது மகளுக்கு திருமண வாழ்த்தைப் பரிசளித்தபோது...





‘சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் ம.லெ. தங்கப்பா, கவிஞர் தமிழேந்தி, பாவலர் வையவன், அறிஞர் ஆனைமுத்து.



சென்னை அண்ணா அரங்கில் எனது ‘சொல்வெளி’ நூலை இயக்குநர் களஞ்சியத்திடம் வழங்குகிறார் தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ.மணியரசன்.



நாம் தமிழர் கட்சித் தலைவர் தம்பி சீமானிடம் எனது ‘சதுரங்கக் காய்கள்’ வழங்குயபோது. உடன் ம.தி.மு.க தலைமைக்குழு உறுப்பினர் தம்பி சீனி. கார்த்திகேயன்.

வேகாத சொல்லை நீக்கிவிடவேண்டும்” என்றார். நீங்கள் படித்திருக்கக்கூடும். ஒரு நெடுங்கவிதையால் சொல்ல முடியாததை ஒரு சிறிய ‘ஹைக்கூ’ சொல்லிவிடும். கவிதையின் முதற்கூறே சொற்சிக்கனம்தான்.

**14. ஆரவாரமற்ற, நேர்மையான, அழுத்தமானநூல்களைவழங்கியிருக்கிறீர்கள். உங்களை எப்படி அடையாளப் படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள்?**

என் அடையாளம் என் நூல்கள் தான். எவ்வளவு காலமானாலும் எனக்கான அடையாளத்தை அது ஏற்படுத்தித்தரும் என்றே நம்புகிறேன். முடிந்தவரை சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடில்லாமல் வாழ்கிறேன். நான்வேறு என் எழுத்துவேறல்ல. நான் சிறந்த கவிஞனாக இருக்கவேண்டு மென்பதைவிட ‘அறம் சார்ந்த’ மனிதனாக வாழவேண்டு மென்பதை நோக்கியே பயணிக்கிறேன்.

**15 உங்கள் நூற்பட்டியல் ஒன்று தாருங்கள்.**

என் மனைவியின் கவிதை (1998), ஞானத்திலிருந்து... (2000), மனசு சுற்றிய மாவளி (2005), சதுரங்கக் காய்கள் (2015), கிறுக்கும் நறுக்கும் (2017), சொல் வெளி (2017), தமிழ்க் காடு (2018), மெய் பேசுகிறேன் (2019), மின்னல் நரசிங்கபுரம் (2021), கதவுகள் (2021). பத்தும் கவிதை வகைமைகள்தான்.

**16. இல்லம் பற்றிக் கூறுங்கள்.**

மனைவி செல்வி. ஆசிரியராகப் பணியாற்றுகிறார். மூத்தமகன் செந்தமிழன் பொறியாளர். மருமகள் ரஞ்சனி, பெயரன் நவிரன். மூவரும் தற்போது ஜெர்மனியில் உள்ளார்கள். இளையமகன் பேரன்பு முதுகலை மருத்துவம் (சர்ஜன்) படித்துக்கொண்டிருக்கிறார். அம்மா மங்கையம்மாள் 2019ல் இயற்கை எய்தினார். அப்பா ஏகாம்பரம் (98)

இருக்கிறார். என்னுடைய தமிழ்க்காடு, மின்னல் நரசிங்கபுரம் நூல்களை அவர்தான் வெளியிட்டு சிறப்பித்தார். இப்போது வாழிடம் திருவண்ணாமலை.

## 17. மின்னல் நரசிங்கபுரம் இப்போது எப்படியிருக்கிறது?

நீங்கள் ஊரைக் கேட்கிறீர்களா? நூலைக் கேட்கிறீர்களா? இரண்டுக்கும் சொல்கிறேன். நூலைப் பொறுத்தவரை எனக்கு மிகுந்த பெருமையை இது சேர்த்திருக்கிறது. வெளியிட்ட நாளிலிருந்து இன்று வரை அதிகமாக என்னை தொலைபேசியில் தினமும் எவரேனும் ஒருவர் அழைத்துப் பாராட்டும்படி இந் நூல் செய்திருக்கிறது. இந் நூலின் தன்மை அப்படி. மண்சார்ந்த வட்டாரம் சார்ந்த மற்றவர்களின் கவனத்திற்கு வராத ஒரு வாழ்வியலைப் பேசும் முதல் நூலிது. ஊர் நரசிங்கபுரத்தைச் சொல்லவேண்டுமானால் என் நூலிலிருக்கும் ஊர் இப்போது இல்லை. நரசிங்கபுரம் மட்டுமல்ல; எந்த ஊரும் பழைய மாதிரி இல்லை. எல்லாம் நகர நாகரிகத்தின் விளைவு. ஆனால் அதே மக்கள், அதே அறம், அதே அன்பு இன்னும் இருக்கிறது. முதல்சுற்று கொரோனா நரசிங்கபுரத்தை அண்டவேயில்லை. ஆனால், இரண்டாம் சுற்றில் பத்து பேருக்கு மேல் காவுவாங்கிவிட்டது.

## 18. உங்களுடைய ஆசிரியப் பணி எப்படி யிருந்தது?

என் வேலையை நான் ஒழுங்காகச் செய்தேன். ஆசிரியருக்கான அனைத்துப் பண்புகளையும் போராடிக் கடைபிடித்தேன். என் சம்பளத்தின் ஒரு பகுதியை மாணவர் நலன் மற்றும் பொதுவாழ்வுக்குச் செலவு செய்தேன். பள்ளிக்குப் போய்வருவதில் நேரம் தவறாமையைத் துல்லியமாகக் கடைபிடித்தேன். தேவையில்லாமல் விடுப்பு எடுத்ததில்லை. எந்த ஆசிரியருடனும் சண்டையோ, குற்றச் செயல்களிலோ, ஃபைனான்ஸ் வேலையிலோ ஈடுபட்ட தில்லை. ஒரு கண்டிப்பான ஆசிரியராக இருந்தாலும் என் வகுப்பறை எப்போதுமே கலகலப்பாக இருக்கும். பாடவேளைக்கான நாற்பத்தைந்து நிமிடத்தையும் பயனுள்ளதாகச் செய்வேன். கடன்படா வாழ்க்கை. என் தேவைகளைச் சுருக்கிக்கொள்வேனே ஒழிய கடன்வாங்கமாட்டேன்.முப்பத்தோறு ஆண்டு களில் ‘கவர்மென்ட் லோன் கூட’ ஒருபைசா வாங்கியதில்லை. ‘அறத்தான் வருவதே இன்பம்’. அதுவே என் நோக்கம். மற்றவர்க்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதும் அதுதான். உங்களுக்கும் தமிழ்நெஞ்சம் இதழுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நரசிங்கபுரம் பிள்ளையார் கோவில் வளாகத்தில் எனது ‘மின்னல் நரசிங்கபுரம்’ நூல் வெளியீடு.



# தமிழ் - இன்று...

( நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா )

கார்மேக ஊற்றுக்கண் அடைபட்டால் மண்ணின்மேல்
கார்மேகம் பொழியாது; மண்ணுயிரும் மாய்ந்திடுமே!
சீர்மிகுந்த சிந்தனையாம் இதுபோலத் செந்தமிழின்
பேர்வளர்ச்சிக் குன்றியதால் பிறமொழிகள் ஆதிக்கம்!

பருவமழைப் பொய்த்துவிட்டப் பாரினைப்போல் பைந்தமிழர்
அருகியேதான் தமிழ்மறந்து மாற்றுமொழி மாந்துவதால்,
தருவான மண்மூத்தத் தமிழுமின்று தத்தளித்துத்
தரைதோறும் நிலைநிறுத்தத் தாங்கிடாத துயர்நிலையே!

ஆறுவற்றி விளைநிலங்கள் அருகிவிட்டப் பாங்காக
ஊறுவிளை வித்தேதான் உயர்தமிழை உதறிவிட்டார்;
நாறுகின்ற நிலைத்தமிழின் நடப்பாகி சிறுத்திடுச்சே!
வீறுகொண்ட வளத்தமிழும் கலப்படமாய் மாறிடுச்சே!

பண்பாடு அடையாளம் நல்லொழுக்கம் மறந்துவிட்டு,
கண்விற்று ஓவியத்தை வாங்குதலாய்த் தமிழ்விற்று
புண்ணான பிறமொழியில் திளைப்பதாலே தமிழ்மொழியும்
மண்முழுதும் கட்டெறும்பும் சிற்றெறும்பாய் ஆனதுவே!

இந்தியத்தில் வேறுபாடு பாகுபாடு இருந்தபோதும்
இந்தியத்திற் கொருதீங்கு என்றாலே ஒன்றிணைந்து,
இந்தியத்தைக் காப்பதுபோல் தமிழின்று பாதுகாப்பாய்
இந்நிலத்தில் எங்கெங்கும் இருப்பதுவே உயர்நிலைதான்!

**நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்,**
பெங்களூரு.

# முருங்கை நடு! நோய்களை தடு!!



புதுவைத் தமிழ்நெஞ்சன்

முருங்கை கீரை உணவாய் கொண்டால்
பித்த மயக்கம் தீருமடா - நம்
இருவிழி நோயை இல்லா தாக்கும்
கபத்தைக் காணா தாக்குமடா

விளக்கெண்ணெயில் வதக்கி கொண்டால்
வாதவலி மூட்டுவலி யோடுமடா - அட
இலக்காய் இருக்கும் இடுப்பு வலியும்
ஒத்த டத்தால் போகுமடா

பூவை பருப்புடன் சமைத்தே உண்டால்
போகும் கண்ணின் எரிச்சலடா - இருக்கும்
நோவை தீர்க்கும் வாய்க் கசப்பு
வாய்நீர் ஊறல் தீருமடா

காலை அளவாய் சாப்பிட்டு வர
கபம் தீர்ந்து போகுமடா - அட
வேலை யோடு மார்பு சளியும்
விடை பெற்றே ஓடுமடா

பட்டையை இடித்து சாறு பிழிந்து
காதில் ஓரிரு துளிகளடா - நீ
விட்டு வந்தால் வலியும் தீர்ந்து
விரைந்தே காதில் போகுமடா

இரும்பு சத்து இதிலே அதிகம்
இனிதே அறிந்து கொள்ளடா - நீ
விரும்பி அதனை விருந்தாய் ஆக்கி
வாழ்வில் நலத்தை பேணடா

ஒவ்வொரு வீட்டின் முன்னே முருங்கை
உற்றத் துணையாய் இருக்குமடா - அது
எவ்வளவு பயனாய் இருக்கும் என்பதை
எண்ணி பார்த்து வளர்த்திடடா

# லிமர்புன்

நீலகிரி மலைப் பிரதேசத்தில் தொலைதூரத்தில் வசிக்கும் மக்களுக்கு நோய் ஏற்பட்டால் அவசர காலத்தில் மருத்துவ உதவி கிடைப்பது மிகவும் அரிதான ஒன்றாகும். மிகவும் சிரமமான அவர்களின் சூழலைக் கண்டார் குன்னூரில் உணவகத்தை நடத்தி வரும் ராதிகா சாஸ்திரி.

உடனே தனது நண்பர்களிடம் நிதியுதவி பெற்று "ஆம்புரெக்ஸ்" என்ற அவசர ஊர்தி சேவையை தொடங்கி நடத்தி வருகிறார். ஆட்டோவில் படுக்கை, பிராணவாயு குடுவை, முதலுதவிப் பெட்டியுடன் கூடிய இந்த "ஆம்புரெக்ஸ்" வாகனம் மலைவாழ் மக்களுக்கு மிகவும் உதவிகரமாக உள்ளது.

**மலைவாழ் மக்களின் வேதனை
தீர்க்கும் ஆம்புரெக்ஸ் அவசரவூர்தி சேவை
தாய்மையின் தனியொரு சாதனை**

— அன்புச்செல்வி சுப்புராஜு





# சேமிப்பு

**- சப்ரா**

தன் இருளுக்குள் வசப்படுத்தி வைத்திருந்த உலகை கொஞ்சம் கொஞ்சமாய் கதிரவனின் ஒளி துரத்திக் கொண்டிருக்க, நேரங்காலத்துடன் எழ வேண்டும் என்பதற்காக தொலைபேசியில் வைக்கப் பட்ட அலாரம் ஓய்வின்றி அடிக்க ஆரம்பித்தது.

பல்லைக் கடித்தவாறு தூக்கக் கலக்கத்தில் இருந்தவன் வேகமாக அதனை நிறுத்தி விட்டு மறுபக்கம் புரண்டு கொள்ள, அவனது போர்வையும் அவன் அசைவுகளுக்கு கட்டுப்பட்டு அவன் பக்கமே நகர்ந்தது.

இவ்வாறு மேலதிக தூக்கத்தின் இனிமையை அவன் ரசித்து சுவைக்கும் முன்னமே வழமையாக அவன் காதில் விழும் அதே வரவேற்புப் பேச்சுகள் மேலும் அவனை தூங்க விடாது தடுக்க, அமைதியாய் எழுந்து உட்கார்ந்துக் கொண்டான்.

கதவின் அருகிலிருந்து தாயின் திட்டல்... நாற்காலியில் அமர்ந்திருந்த தந்தையின் ஏச்சுக்களோ வேறு விதமாக இருந்தது.

இருப்பினும் தாய் என்னதான் சொன்னாலும், “லவ் யூ மா..” என்று தாயைக் கொஞ்சிவிட்டுதந்தையின்மூக்குக்கண்ணாடி இடைவெளிக்குள் தான் அகப்பட்டு விடும் முன்னரே குளியலறைக்குள் மறைந்துவிடும் அவன் தான் ஆனந்த்.

சுமார் இருபத்தைந்து வயதைத் தாண்டிய ஆனந்த் பற்றி தெரியாத யாராவது அவனது தாய் சர்மிளாவிடம், ‘‘உங்க மகன் என்ன செய்கின்றார்?’’ என்று வினவினால் போதும்...

அதை மட்டும் கேட்காதீங்க... 25 வயதாகியும் இன்னும் சின்னப் பையன் மாதிரி வீட்டுக்குள்ளயே இருக்கான். எல்லாம் தகப்பன் சம்பாதிக்கிற தைரியம் தான்» என்று அங்கலாய்ப்பாள் அவள்.

‘‘என்னுடைய மகன் கவின் படிப்பிலும், மற்ற எல்லாவற்றிலும் அவனை மிஞ்ச ஆளில்லை சர்மிளா.’’ வீட்டில் மகனை உருட்டி எடுப்பதனை மறைத்து மேலதிகமாகப் பூசி மெழுகி பெருமையடிக்கும் லட்சுமியைப் போன்று சர்மிளாவுக்குப் பொய் எல்லாம் பேச வராது

அவ்வளவு இலகுவாக...

மேல் வகுப்பில் நினைத்த அளவிற்கு மதிப்பெண்கள் கிடைக்காததை எண்ணி முதல் தடவையிலேயே மனமுடைந்த ஆனந்த் மறுமுறை படிக்கவும் விருப்பமின்றி வெளிநாட்டு வாழ்க்கையை ஏனையோரின் விருப்பப்படியே தெரிவு செய்து, தாயாரின் அழுகை கலந்த விசும்பலுக்கிடையில் வெளிநாடு பயணமானான்.

''மகன் உன்ன பாக்காம இருக்க முடியலையே.'' என்ற தாயின் ஏக்கம் மனதைப் பிழிய, முதன் முறையாக பெற்றோரையும் உறவினர்களையும் ஊரையும் பிரிந்த ஏக்கம் அவனை ஒரு புறம் வாட்டியெடுக்க இயல்பாகவே தனிமையை விரும்பாதவன் அங்கே இயல்பாக இருக்க முடியாத திண்டாட்டத்தில் ஒரு கிழமைக்கு மேலதிகமாக அங்கே நின்றிட விருப்பமில்லாது ஊரையடைந்ததில் ஊரவர்களின் வாயெல்லாம் அவன்தான் தலைப்புச் செய்தியாகினான். அதிலும் அவனுக்கு ஒரு பெருமை...

நண்பர்களுக்கெல்லாம் அவன் கூட விருக்கும் நேரங்களில் குதூகலம் தான். எல்லோருக்குமாக சேர்த்து எதையாவது ஆர்டர் செய்து அனைவருக்கும் தனித் தனியாக வாங்கிக் கொடுத்தாலும் அதிலும் சண்டை பிடித்து பறித்துத் திண்ணும் அவன் நண்பர்கள் தான் அவனுக்கு உலகம்..

''ஊதாரித்தனமா பணத்தை செல வழிக்காதே. அப்பா இல்லாட்டி தெரியும் பணத்தின் அருமை'' காதுகளுக்குள் அடிக்கடி ஒலித்திடும் தாயின் கண்டிப்பான பேச்சுக்களே இவை.

''அம்மா நானும் பணம் சேமித்து வெச்சிருக்கேன்.''

''எங்கடா? வயித்துக்குள்ளயா?''

''இல்லம்மா... பேங்க்ல.''

''நீயாவது பணம் சேர்க்கிறதாவது'' சிரிப்பை அடக்கியவாறே நகர்ந்த சர்மிளா வின் சிரிப்போ, நாற்காலியில் அமர்ந் திருந்த அவளது கணவனைக் கண்டவுடன் நின்று போனது.

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தரையில் கிடந்தவரை மகனின் உதவியைக் கொண்டு தாங்கிப்பிடித்து டாக்டரிடம் அழைத்துச் சென்றனர்.

இதயத்தில் ஏற்பட்டிருக்கும் அரி தான நோயொன்றை டாக்டர்... தாய், மகன் இருவரிடமும் கூற, இதுவரை கேள்விப்பட்டிராத அந்த நோயை உடனே தொலைபேசியில் தேடி அறிந்து கொண்டவனுக்கு வைத்தியர் கூறிய விளக்கமும் நோயின் வீரியத்தை அப்பட்ட மாக அறிவித்தது.

உடனடியாக சிகிச்சை செய்ய பெரு ந்தொகை தேவைப்பட்டது,

கணவனின் உழைப்பில் அவள் சேமித்து வைத்திருந்ததை விட இன்னும் அதிகமான பணம் தேவைப்பட்ட போது, தாமதமின்றி பணத்துடன் வந்து நின்றான் ஆனந்த்.

"எங்க இருந்துடா இவ்வளவு பணம்?"

தான் சிறுக சிறுக சேமித்து வைத் ததை தாயிடம் கூறுவது இப்போதைக்கு அவசியமில்லை என நினைத்தவனின் கவ னமெல்லாம் தந்தையை குணப்படுத்துவதில் மட்டுமாக இருந்தது.

மறுநாள் வெள்ளை பனியனுடன் கட்டிலில் மூச்சிறைக்க படுத்திருந்தவரை தாயும், மகனும் பார்த்து நிற்க, ''என்ன நடந்துச்சு எனக்கு?'' எனக்கேட்டார் மனைவியிடம்.

அவள் நோயின் பெயரை மறந் திருக்க, ஆனந்த் உடனே அதனைக் கூற, ''ஆபரேஷன் பண்ண நிறைய பணம் செலவாகியிருக்குமே?'' என புருவங்களை சுருக்கியவரிடம், ''நம்ம பையன் தான் அதை சரி செய்தான்'' என்றவளைப் பார்த்து நோயிலும் சிரித்தவர்,

''இவனுக்கு ஏது பணம்?'' எனக்கேட்க,

«போங்க உங்களுக்கு எப்பவுமே விளையாட்டுதான். என்னுடைய மகன் தங்கம்'' என்றவாறே கலங்கியவளிடம்,

''சரி... நான் தான் உன்னை தேவையில்லாம ஏசிட்டேன். மன்னிச்சிடு'' என்றவரது கைகள் ஆனந்த்தின் நினைவு தெரிந்த காலத்திற்கு முதன்முறையாக அன்றே அவனை பிடித்து அணைத்துக் கொண்டது இறுக்கமாக...

■




# பூவிதழே இவள்

பரணி சுப சேகர்

இதயச்சிறகு படபடக்க இதழ்களின் நடனமோ,
உதயசூரியனாய் உள்ளுள் உன்னத பிரகாசமோ!
இதம் தரும் இதழோசை இன்னிசை கீதமோ?
நிதமாகும் பொழுதெல்லாம்... நீங்காத நினைவுகளோ.

மேனியெங்கும் மின்சாரம் மெதுவாகப் பாய்கிறதோ?
நாணி இவள் நிற்கையிலே நறுமலர்கள் பூக்கிறதோ?
தேனினிய இவள் எண்ணம் தீங்கரும்புச் சுவையமுதோ,
வானில் வரும் நிலவுமுகம் வஞ்சியிவள் சாயல் தானோ?

இதயத்தாமரையோ... இனிதான தேவதையோ,
உதயத்துள் உணர்வாகும் உயிரான வழித்தடமோ?
மிதமான வெப்பத்து மின்னல் கனவுக்குள்,
இதமான கற்பனையோ.. இவளிங்கு திருமகளோ..

பூமேடை இவள் மனமோ.. பூத்ததிங்கே பொன்னெழிலோ,
நாமேடை நவில்கின்ற நல்மொழியும் நற்றமிழோ,
பாமேடை நானேற பக்குவமாய் ஆக்கினாளோ..
மாமேடை நின்றாடும் மங்கையிவள் என்னுயிரோ!

நின்றாடும் தமிழ் இவளோ.. நிலையான வழி தானோ,
வென்றாடும் விசைமனதுள் வியப்பாகும் நறுமுகையோ,
என்றென்றும் அகத்துள்ளே எழிலோடு நிறைந்திருக்கும்,
புன்னகைக்கு பொருள் சொல்லும் பூவிதழே இவள் மனமோ.

# நீமதுரம்... நான்மதுரம்...!

கவித்திலகம் வெற்றிப்பேரொளி

கரைமீறிப் பாய்கின்ற காதல் ஆறு!
கணுவேறி இனிக்கின்ற கரும்பின் சாறு!
இரையாகி இரையுண்ணும் அணுவின் கூறு!
இலையாகி இருக்கின்ற மகிழ்வின் ஈறு!

நரைகூடிப் பழுத்தாலும் அடங்காக் காமம்!
நானூன்றிச் செபிக்கின்ற தேவ நாமம்!
திரையாடி அழைக்கின்ற கடலின் ஆழம்!
தித்திப்புத் தீப்பிடியில் கருகும் யாலம்!*

பூமதுரம் மழையாகி நனைக்கும் கோடை!
பொன்மேனி மிதக்குமந்த வியர்வை ஓடை!
தேமதுர மொழியங்கே மௌனக் காடு!
திருத்தமிக்க உதடுகளோ தேனின் கூடு!

வாமதுர வழிப்பாதை பயணம் செய்வோம்!
வசந்தத்தின் கூடைதனில் பூவாய்ப் பெய்வோம்!
நீமதுரம் நான்மதுரம் கவிதை நெய்வோம்!
நீள்கூந்தல் பாய்விரித்துக் கனவாய்க் கொய்வோம்!

* யாலம்... இரவு

# குதித்தாடும் குழந்தை மனம்

## கார்கவி சேகா
நாகப்பட்டினம்



நினைவுகள் அலாதி...

அந்த நிகழ்வை நினைத்து பார்க்கையில், இப்பொழுது என்னை அறியாது ஒரு இன்ப மழை மனதில் கொட்டி தீர்த்து விடும்.

அந்த இன்பத்தை அறிய சற்று பதினெட்டு ஆண்டுகள் பின்னோக்கி செல்வோம்.

அன்று ஓர் அற்புதமான நாள். ஆம், எனது குடும்பத்தின் இளவரசன் பிறந்தநாள். ஆனால் நாங்கள் வைத்த பெயரோ விக்னேஷ் குமார்.

அவனுக்கு முன்னே பிறந்த மூத்த இளவரசி நான் (வினி) என்பதில் பெருமை கொள்கிறேன்.

கதையின் கரு மகள் அடுத்ததாய் என் சகோதரி... திவி

அவளின் அற்புத அறியாமையே இந்த கதையின் கரு.

கதைக்கு செல்வோமா...

பதினெட்டுவருடம்முன்புசெப்டம்பர் மாதம் 28 ம் நாள் வந்து குதித்தான் என் தம்பி விக்கி.

அவன் பிறந்து இரண்டாம் நாள்.. அம்மாவின் வலி மெல்ல மெல்ல குறைய, அப்பாவின் ஆறுதலில் தேடி வருகிறாள் என் அம்மா.

தம்பியை பார்க்கும் ஆசையில் துள்ளலும் துடிப்புமாக மருத்துவமனை விரைந்தோம்.. அப்பாவின் கைப்பிடித்து.

கட்டிலில் அம்மாவையும் தம்பியையும் கண்டு, ஆசை தீர கொஞ்சி தீர்த்தோம்.

அங்கு நடந்த சம்பவமோ. நினைத்தாலே சிரிப்புதான்.

தம்பியை கண்ட தங்கையின் மனம்... அவன் கைப்பிடித்து "என் விரல் பிடி" வா ஓடி விளையாடலாம் என்று விளையாட்டாய் பேசினால்... சிறிது நேரத்தில் அவள் அடம் பிடிக்க ஆரம்பித்து விட்டாள்.

இப்பொழுதே தம்பி எழ வேண்டும், என் விரல் பிடித்து நடக்க வேண்டும். என்று அசட்டுத்தனமான விளையாட்டில் அடம் பிடித்தாள்.

இதை பார்த்த எங்களுக்கு சொல்ல முடியாத புன்னகை. சிரித்து சிரித்து வயிறு புண்ணாகி போனது.

அப்பா வாங்கி கொடுத்த அனைத்து தீனிகளும் சாக்கடைக்கு விருந்தானது.

அடிப்பாவி என்னிடமாவது தரலாமே

என அந்நாளில் என் மனம் ஏங்கியது.

தம்பியின் பிறந்தநாள் வந்தாலே இந்த சம்பவம் எங்களுக்கு புன்னகை விருந்து.

அழகான குடும்பத்தில் நான் கடந்து வந்த அற்புதமான இன்ப தருணமிது.

யதார்த்தமாக நினைத்து பார்த்த பொழுது பகிர்ந்து விட்டேன் தாங்களுடன். புன்னகை வரிகளாய்.

கரு -1

குழந்தைகள் அறியாமை மிக்கவர்கள். அவர்கள் விரும்பும் எதுவும் நடைபெறுமா என யோசிக்க இயலாத வயதினை உடையவர்கள், நினைத்தது நடக்க வேண்டும் எனும் எண்ணம் கொண்டு செயல்படுபவர்கள்.

குறிப்பாக சொன்னால்...

‘‘யானையை கூட பானையில் அடைக்கும் ஆசையும் அறியாமையையும் கொண்டவர்கள்’’

அதை சரி செய்து சாதாரண நிலைக்கு கொண்டு வருவது என்பது பெற்றோருக்கு உரிய திறமை.

அதையே என் பெற்றோர் கையாண்டனர்.

மேற் சொன்ன கருவில் பிள்ளைகளின் அறியாமை புலப்பட்டது.

அதையும் தாண்டி அற்புதமான நிகழ்வை நாம் உணரவேண்டும்...

கரு - 2

‘‘*அந்த சின்னஞ்சிறு வயதிலேயே தம்பியின் மீது அக்காள் கொண்ட விலையில்லா, கணக்கில்லா, எல்லையில்லா அன்பின் உச்சத்தை இந்த நிகழ்வு அவ்வப்போது நினைவு கூறுகிறது*’’

‘‘அக்கா அம்மாவின் மறுரூபமே... தம்பி தந்தையின் பிம்பமே’’

குழந்தைகள் மனம் அறிவோம்... மகிழ்வாக வைத்திருப்போம்...

என் வாழ்வில் கடந்து வந்த அனுபவ புன்னகை வரிகள்...

தாங்களுக்காக... இதோ...



# உனக்கு கவிதை வரவில்லையா

உனக்கு
கவிதை வரவில்லையானால்
எதையேனும் எடுத்துப்படி
ஞாயிறுகளில் சினிமாக்குப்போ
நல்லப்பாடல்களை தேர்ந்தெடுத்துக்கேள்
புதிதாக எதையேனும் சமைத்துப்பழகு
தோட்டத்தில் ஒரு செடியை நடு
காலாற எங்கேனும் நடந்துவிட்டு வா
கலைந்திருக்கும் அறையினை ஒழுங்குப்படுத்து
காதலில் தோற்ற தோழியிடம் நலம் விசாரி
கண்களை மூடிக்கொண்டு கனவுகள் காண்
ஜன்னல் திறந்து வைத்து காற்று வாங்கு
சுவரோவியங்களை இடம் மாற்றிவை
மொட்டைமாடி மீதேறி வானம் பார்த்துக்கொண்டிரு
எதிர்வீட்டு வாண்டுகளை வம்புக்கிழு
அழைப்பெடுத்து நண்பர்களுடன் அரட்டையடி
அல்லது
இந்த உலகம் ஏன் உருண்டையாய் இருக்கிறதென
யோசித்துக்கொண்டேனும் இரு

உனக்கு
கவிதை வரவில்லையானால்
அதில்
வருத்தப்பட ஒன்றுமில்லை

போகட்டும் விட்டு விடு!!!

– ரிஸ்கா முக்தார்

# இருளில் தனிமையில் ஒரு குழந்தை

- பெண்ணியம் செல்வக்குமாரி



அவள் கண்களால் அதை நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடிய வில்லை; அதை பார்த்த பின் நெஞ்சு படபடவென அடிக்க ஆரம்பித்து, மூச்சு வாங்கியது, ஆற்றில் வெள்ளம் பாய்ந்து ஓடுவது போல உடம்பிலுள்ள எல்லா நரம்புகளிலும் இரத்தம் ஓடியது,

இரவு 10:00 மணியளவில் அந்த தூரத்து நடைபாதையில் ஒரு சிறு குழந்தை படுத்து இருந்தது, தூத்துக்குடி பேருக்குத்தான் மாநகரம் ஆனால் 10 மணிக்கு ஆள் நடமாட்டமே இல்லாத இந்த தெரு பகுதி. மேகங்கள் சூழ்ந்திருந்த வானத்தில் ஆங்காங்கு சில நட்சத்திரங்கள் சுடர்விட்டு எரிந்தது போல இந்த தெருவில் மின் விளக்குகள் எரிந்தன, அவள் சில நிமிடங்கள் காரில் இருந்து பார்த்தாள்.., அந்த காரை நிறுத்திவிட்டு, குழந்தை இருந்த இடத்தை நோக்கி நடை பாதையில் அவசரமாக நடக்க ஆரம்பித்தாள்.

அவள் மனதில் எல்லா வகையான எண்ண ஓட்டம் தாமிரபரணி ஆறு போல ஓடியது. ஒருவேளை தனக்கு வைத்த பொறியாக இருந்தாலும் இருக்குமோ? அப்படி இருந்தால் தனக்கு ஏற்படக்கூடிய அனைத்து வகையான பின் விளைவுகளை நினைத்து ஆறு கடலில் சேருவது போல மூளை யிலிருந்து இதயத்திற்கு எண்ண அலைகள் சேர்ந்தது. பூக்கள் வண்டுகளை சுற்றி வலம் வருவது மாதிரி அவள் கண்கள் எல்லா திசைகளிலும் பார்த்துக்கொண்டே அருகில் போனாள், இடி தாக்கும் உணர்ச்சியை ஆத்தி ரம், பயம் மற்றும் கவலை உணர்ந்தாள்.

“ஐயோ கடவுளே.. என்ன விசித்தி ரம் ? இது யார்? மனிதநேயம் இறந்து விட்டதா…! இது போன்ற செயல்கள் செய்தது யார்? இப்படி ஒரு குழந்தையை நடுரோட்டில் விட்டுவிடுகிறார்களே?”

அந்த குழந்தை உயிரோடு தான் இருக் கிறது; எந்த ஒரு காயமில்லை என்று அவள் வேண்டிக் கொண்டே அருகில் செல்ல செல்ல மலர்கின்ற தாமரையைப் போல மனதில் ஓர் உணர்வு எழுந்தது. சிந்திக்கக் கூட விரும்பாத ஒன்று இன்னும் ஒவ்வொரு நாளும் செய்தித் தாள்களில் நடக்கும் தீமைகளை எண்ணி மனம் குமுறியது. மோசமான சம்பவங்கள் எதுவும் நடக்காது என்று தனக்குள் சொல்லிக் கொண்டே பாதையை அடைந்தாள். குழந்தை நன்றாக இருந்தது. அவளுக்கு கண்களில் நீர்ப் படலங்கள் கண் பார்வையை மூடி மறைக்க முயன்றது.

இனி எந்த அசம்பாவிதமும் நடக்காது எண்ணிக்கொண்டாள்,அவள்பார்க்கவிரும்பாத கண்களில் பார்த்தாள். மனிதநேயத்தின் சார்பாக அவள் வெட்கப்பட்டாள். குழந்தையை எடுத்துக் கொண்டுவீட்டிற்குச்செல்லசிறிதுதயங்கினாள். இந்த சமூகம் என்னும் கூண்டுக்குள் இருப்பதை நினைத்து வருந்தினாள்.

“ஆகாஷ்”..! தன் காதலன் ஆகாஷுக்கு போன் செய்தாள், அவள் அவசரம் அவசரமாக அவன் எண்ணை டயல் செய்ய ஆரம்பித்தாள்.

“ஆகாஷ், ஆகாஷ்.. ஆகாஷ்.., சாலையில் ஒரு குழந்தை கிடக்குதுடா ! நீ கொஞ்சம் சீக்கிரம் இங்கு வர முடியுமா? ”

“சரி சரி. அமைதியா இரு. பொறு மையா இரு. நீ சரியா எங்க இருக்க?”

“இங்கேயே ஆகாஷ், எழில் நகர்

தெருவுக்கு எதிரே”

"நான் ஒரு பத்து நிமிடத்தில் வருவேன், நீ எதுவும் செய்ய வேண்டாம். தயவு செய்து கவனமாக இரு..! தைரியமாக இரு. நான் இப்போது அங்கு வரேன். கவலைப்பட வேண்டாம். நீ அங்கேயே இரு. உடனே போலீசுக்கு கால் பண்ணு நடந்ததை சொல்லு...''

''சரி. சரி?''

''நான் போலீஸை கூப்பிடுறேன். சரி. ஆகாஷ் தயவுசெய்து சீக்கிரம் வந்துரு எனக்கு பயமா இருக்கு ..!''

''வருகிறேன்!''

அவள் கொஞ்சம் நிம்மதியடைந்தாள். அவள் இப்போது குழந்தையின் அருகில் அமர்ந்து குழந்தையின் நெற்றியில் தன் நடுங்கிய கையை வைத்து பார்த்து, இறுதி யாக குழந்தையை தூக்கினாள்.குழந்தை அழவில்லை. ஆனால் குழந்தையின் கண்கள் அவளை பார்த்து கொண்டிருந்தது.

தாயை போல அவள் குழந்தையை மடியில் வைத்து 1 - 0 - 0 என்ற எண்ணில் டயல் செய்தாள். பதில் இல்லை.

அவள் மீண்டும் டயல் செய்தாள்.

இப்போது போனை எடுத்தார்கள் ..

''வணக்கம். நான் எழில் நகர் தெருவில் இருந்து பேசுறேன். என்னுடைய வீட்டுக்கு போற வழியில ஒரு குழந்தையை பார்த்தேன். இந்த தெருவை சுற்றி யாரும் இல்லை.”

''வணக்கம். மேடம், உங்கள் பெயரை என்னிடம் சொல்ல முடியுமா?”

“ராதா”

''நீங்க இருக்கிற சரியான ஒரு லாண்ட்மார்க் என்ன?''

“எழில் நகர். வலது அருள்மிகு ஸ்ரீசக்தி முனிஸ்வரர் கோயில் பக்கத்தில. தயவுசெய்து யாரையாவது அனுப்ப முடியுமா? தயவு செய்து!”

“மேடம், வேறு யாராவது பக்கத்தில இருக்கிறார்களா? குழந்தைக்கு எதுவும் அடிபட்டு இருக்கா? ”

''இல்லை. இல்லை. குழந்தைக்கு அடிபடல. என்னை சுற்றி யாரும் இல்லை.”

“மேடம், தயவுசெய்து கவனமாக இருங்கள். நாங்கள் எங்கள் ஆட்களை உடனே அனுப்புகிறோம். தயவுசெய்து யாராவது வாராங்களா பாருங்க...”

''சரி?''

''தயவுசெய்து இணைப்பில் இருங்கள்.”

“ஆம், ஆமாம் நான் அந்த பக்கம் போய் பார்க்கிறேன். மேடம் இங்கேயும் யாரும் இல்லை. ”

குழந்தை இப்போது தொடர்ந்து கத்திக் கொண்டு அழ ஆரம்பித்திருந்தது. அவள் குழந்தையின் மார்பில் தட்டவும் அதை அமைதிப்படுத்தவும் முயன்றாள். அது ஒரு துணியால் மூடப்பட்டிருந்ததால் அது ஒரு பெண்ணா அல்லது பையனா என்று அவளால் சொல்ல முடியவில்லை.

துணியை அவிழ்க்க தைரியம் அவளுக்கு இல்லை. அவள் குழந்தையை தலையையும் மார்பையும் தன்னால் முடிந்தவரை மெதுவாகத் தட்டிக் கொண்டே இருந்தாள்.

“மேடம், நீங்கள் தொடர்புல இருக்கிறீர்களா? ஹலோ.., ஹலோ...''

“ஆமா, ஆமா, நான் இங்கே தான் இருக்கிறேன். குழந்தை அழுகிறது. நான்

- நாலுகால்கள் உண்டு
  நடக்க வழியின்றி முடக்கம்
  கட்டில்

- மழைக்கென்று வாங்கிய குடை
  மழையில் நனையவே இல்லை
  வாங்கியவர் படுக்கையில்

**தமிழ்நெஞ்சம் அமின்**



ஹைக்கூ

என்ன செய்ய வேண்டும்?"

"மேடம், தயவுசெய்து குழந்தையை அமைதிப்படுத்த முயற்சி செய்யுங்கள். குழந்தைக்கு தண்ணீர் கொடுக்க ஏதாவது வழி இருக்கிறதா?"

"இருக்கு மேடம் என்னுடைய காரில் வைத்திருக்கிறேன். அந்த தெருவின் தொடக்கத்திலே நிறுத்தி வச்சிருக்கேன். நான் குழந்தையை அங்கே கொண்டு செல்ல வேண்டுமா?

''வேண்டாம்.. அது சரியா படலை மேடம்."

''அதற்கு அவசியமில்லை மேடம் இதோ என்னுடைய காதலன் இங்கே வந்து விட்டான், என்னால் அவனுடைய காரை பார்க்க முடிகிறது, உங்கள் அதிகாரிகள் வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகும்?"

"சில நிமிடங்கள், மேடம். தயவு செய்து இணைப்பில் இருங்கள்.''

"ஆகாஷ்! ஆகாஷ்! உன்னுடைய காரில் தண்ணீர் இருக்கிறதா?" என்று கத்தினாள் .

அவனோ தூரத்தில் இருந்து..! ''இருக்கு! இருக்கு!'', என்றவாறு காரை நிறுத்தினான்.

அவன் காரில் இருந்து இறங்கி அவளை நோக்கி நடக்க ஆரம்பித்தான். திடீரென்று ஒரு பையன் கையில் கத்தியுடன் ஆகாஷை நோக்கி ஓடினான்.

"ஆகாஷ்! ஆகாஷ்! அய்யோ!" அந்த பையன் அவனைத் தாக்க போகிறான் என்று தன்னால் நம்ப முடியாமல், அவள் குழந்தையை விட்டுவிட்டு அவனை நோக்கி ஓடினாள்.

அவன் அவள் அருகில்... அடுத்த கணத்தில் கத்தி அவள் முகத்தில் இறங்கியது. இரத்தமும் கண்ணீரும் சேர்ந்து வழிந்தது.

இது எப்படி சாத்தியமானது? என்று எண்ணுவதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது போல தோன்றியது, மறுபடியும் கத்தி நெற்றியை நோக்கி வந்தது.

அவள் ஒரு அதிர்ச்சியுடன் எழுந் தாள். இது மிகவும் உண்மையானதாக போலவேத் தோன்றியது. அது ஒரு விசித் திரமான கனவு என்று அவள் உடனே உணர்ந்தாள்.

''அட கடவுளே! கடவுளே! என்ன இப்படி ஒரு கனவு! ஓ இல்லை!"

அப்போ குழந்தை, குழந்தை! கடவு ளுக்கு நன்றி! அது ஒரு கனவு. ஆனால் குழந்தையின் முகம், எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. அந்த முகத்துடன் ஒரு குழந்தை இருக்கிறதா?

இறைவனே! அந்த முகத்தை என்னால் மறக்க முடியாமல் இருக்குதே. "

"ஆகாஷ் யார்? அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு? அந்த பெயரில் யாரையும் எனக்குத் தெரியாது "

"கனவு வித்தியாசமானது. அதன் நினைவு விசித்திரமாயிருக்கிறதே..! அவள் உடம்பு மீண்டும் சோர்வு போர்வையாக ஆட்கொண்டது. அந்த அதிகாலையில். "

எப்படி இப்படி ஒரு கனவு? அந்த நபர் யார்? எப்படி போலீசை கூப்பிட்டேன்? அந்த தெருவை என்னால் நினைவில் கொள்ள முடியவில்லை. அது என்னது? அதை நினைத்துக் கொண்டே அவள் இப்போது விழித்திருந்தாள்.

அவள் மனதில் ஏதோ தவறாக பட்டது. கனவைப் பற்றி ஏதோ விசித்திர மாகத் தெரிந்தது. அதுவே அவளை குழப்பத்தில் ஆழ்த்தியது.

"இந்த நாட்டில் சோத்துக்கும் தண் ணிக்கு பஞ்சம் மாதிரி கவலைக்கு பஞ்ச மில்லை" என்று தன் கவலையை உணர்ந்தாள்.

கனவு முடிந்துவிட்டதை உணர்ந்து அவள் இதயம் இப்போது சிந்தனையில் மூழ்கத் தொடங்கியது, ஆனால் உண்மையில் அவளுக்கு ஏதோ ஒன்று நடக்க போகுது? என்று ஆழ்மனதில் சூரியன் உதித்தான்.

ராதா கண்களை கசக்கிக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்து செய்தித்தாளை எடுக்க வாசலுக்கு நடந்தாள். ஏற்கனவே மந்தமான கண்களில், அவள் தலைப்பைப் பார்த்தபோது ராதாவுக்கு துக்கமாய் பொங் கும் உணர்வின் சுமையொன்று மனதை அழுத்தியது. கண்கள் கலங்கி ஈரம் கசிந்து கண்ணீர் மழையாக கொட்ட தொடங்கியது.

''**கண்ணீர் அஞ்சலி திரு.ஆகாஷ் மறைவு: ஜூன் 13, 1996**''. பலித்தது. கழியும் எமது நொடிகளை சந்தோஷமானதாக கடத்துவோம். ■

# சொந்த நாட்டு அகதிகள்



கருப்பட்டி காப்பியும்
காதறுந்த செருப்பும்
கையிருப்பில் மிச்சம்

கஞ்சி தண்ணிக்கும்
கழனி தண்ணிக்கும்
கடந்த தூரத்தில் பசி

ஆவாரம் காட்டு மேய்ச்சலும்
அடைக்கப்பட்ட பட்டியும்
ஆடுகளுக்கு தோதாச்சி

மேய்ச்சலில் கொஞ்சமும்
மேற்கால தொழுவத்தில் கொஞ்சமும்
மாடுகளுக்கு தோதாச்சி

ஓலைகுடிசையும்
ஒட்டுத்திண்ணை படுக்கையும்
ஒரு வேளை கஞ்சியோட - எம்
பொழப்பாச்சி

ஆடிப்பட்டம்
ஆடிக்காத்தோடு போச்சுன்னு
ஆண்டவனிடம் சொல்லி வச்சேன்

தை பட்டத்தில
தாளம்தட்டி நில்லுன்னு
தரமா சொல்லிட்டான்

வடக்கத்தி மூலையில
வந்திருச்சு கத்திருட்டுன்னு
வயிறு குளிர்ந்து நின்னேன்

பொட்டலில் கொஞ்சம்
புழுதியில் கொஞ்சமா
போனதெசை தெரியல

நிலத்தை மாத்தி விதைச்சேன்
விதையமாத்தியும் விதைச்சேன்
நெனைப்பு மட்டுமே
நெருஞ்சி முள்ளா குத்துது

விளைச்சத கொடுத்திட்டு
வீதியில் நிக்கிறோம்
விதியை நெனைச்சிக்கிட்டு

மண்ணும் கண்டுக்கல
மண்ணாளும் ராசனும் கண்டுக்கல
மண்ண நம்பியே நிக்கிறோம்
சொந்த நாட்டில் அகதிகளா

**- சங்கத் தமிழன்**
சவுதி அரேபியா

# நீரா அழுக்கு?

ஜே.வஹாப்தீன்

குட்டைக்குள் குழம்பிக்கிடக்கும்
அழுக்கு நீரை ஆனந்தமாய்
அருந்திப்போன கறவை மாடு
மருந்து மாத்திரை இல்லாமலேயே
மடிசுரந்து நிற்கிறது.

தண்ணீரைச் சூடுகாட்டி
குடிக்கும் மனிதன் இவனோ
சோகமாய் இன்னும்
மருந்துக் கடையில்
கை கால் நடுங்கி.

கரிய நிறத்து மடியில்
வெண்ணிறப் பால் ஒழுகும்
எருமை
வெண்ணிறத் தோலான்
கரிய மனதில்
விஷம் கசிவானுக்கும்
பசும்பால் வழங்கும்.

இரு கொம்பும்
புனல் உதிரும் வாயும்
மானம் காக்கும் வாலும்
அம்மணத்தோற்றமும்
கறவை மாட்டை
அஃறிணை ஆக்கியதா?

அடிக்கும் போதும்
கறக்கும் போதும்
அடங்கிப்போகும் பணிவு
மானிடனில் உண்டா?

எதிர்த்துப்பேசாத
மௌனமும்
பாலூட்டிப் பசிதீர்க்கும்
தாய்மையும்
மாட்டின் மகோன்னத தியாகங்களே.

வார்த்தைகளால்
மனப்பூங்கா எரிக்கும்
மனிதக்குரங்கிலும்
மௌனமான மாடு
மேலான உயர்திணையே.

மற்றவனுக்கு குழி
வெட்டத்தெரியாத
மாடு மனசால்
அருந்தும் அழுக்கு நீரையும்
தூய்மை செய்கிறது.

மனிதனின் கர்வ மனசு
அருந்திய தூய வெந்நீரையும்
அழுக்காக்கி விஷமாக்கி
அவனுக்கே குழி தோண்டுகிறது.

மாடு என்று திட்டுவதை விட்டுவிட்டு
அதனிடமும்
அறிவைப் படிக்கவேண்டும்;
தூய்மையை அதுவும்
சொல்லித்தரும்.

# ஆடவர் விடுதி

ஆடவர் விடுதிக்கு அவன் புதியவன்
வளாகத்தில் எப்போதும் வலம் வருபவன்
கையிருப்பு வாரங்களைச்
சமச்சீர் செய்யும்
கையேந்தி யாசிக்க யோசிப்பவன்
எப்போதாவது ஊரிலிருந்து அழைப்பு வரும்
குளிக்கச் சென்றவன்
திரும்பாவிட்டாலும் கேட்பாரில்லை

தலையை கையில் ஏந்தி விற்கும்
நிலையைக்கூட
பகிர்ந்து கொள்ள விரும்பாதவன்
வாரங்களையும் மாதங்களையும்
பட்டினியால் கொல்பவன்
காலம் கடைசி வரை
வேடிக்கை பார்க்கிறது

ஏதோ ஓர் நாளின் நடுவில்
நினைவை இழந்து
சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்.
இப்போது கிடைத்திருப்பது
ஒரு வேளை உணவும்
கனக்கில் கொள்ளாத நண்பர்களும்!

**நல முத்துகருப்பசாமி**



# மகிழ்ந்து நின்றேன்..!

நெடுநாளைக்கு
பிறகு-ஓர்
ஆழ்ந்த தூக்கத்தின்
அகவெளிக்குள்
இன்பம் கண்டேன்…!

புதிதாக பிறந்தேன்.

பிறப்பின் அர்த்தம்
தெளிவாக புரிந்தது..!

பார்க்கும்
வானம் புதிது..!

பேசும்
சொல்லில்
புதிது…!

காடு,
மலை,
நதி.
கடல்,
சமவெளியென.

எங்கும் நிறைந்த
இயற்கையோடு
சஞ்சரிக்கவே மனம்
விரும்புகிறது…!

இப்போது
எனக்குள்
யாருமில்லை…!

வானம் பார்த்து
பறக்கும்-ஒரு
பறவையின் சிறகையின் போல
எடையற்றதாக
இருக்கிறது…!

மனம்…!

**அ. செல்வராஜ்**. க. நா. ஊர்.
உடுமலைப்பேட்டை.

# மணிமேகலா தெய்வம் உணர்த்தும் வாழ்வியல் அறம்




## இரா.மாணிக்கவல்லி

இலக்கிய ஆர்வலர்

நாமக்கல்


தனிமனிதனோ அல்லது சமுதாயமோ எந்தவொரு நிலையிலும் அவனால் செய்யப்படும் அறச்செயல்கள் அனைத்துக்கும் வித்தாக அமைவது அகத்தே தோன்றும் அன்புணர்ச்சியேயாகும். தமிழர்தம் வாழ்வியல் அறங்களில் முதன்மையாகப் பொற்றி செயல்படுத்தியது உணவளிக்கும் அறமாகும். அறமாவது தனிமனித வாழ்வையும், சமூக வாழ்வையும், வரையறுக்கும் ஒழுக்க நெறியாகும். தனிமனித ஒழுக்கமும், நற்செயலும் ஓரு சமுதாயத்தையே சீர்செய்யும்.

### ஆசிரியர் குறிப்பு :-

இந்நூலின் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவரது தோழரான இளங்கோவடிகள் இவரைத் தண்டமிழாசான் என்று பாராட்டியுரைத்து கண்ணகியின் வரலாற்றை இளங்கோவடிகளுக்கு விளக்கியுரைத்து ‘அடிகள் நீரே யருளக’ - என்று கூறிச் சிலப்பதிகாரத்தை இயற்றச் செய்து அங்கிருந்து கேட்டு மகிழ்ந்த சாத்தனார் அச்சிலம்பின் தொடர்ச்சியாக இம்மணிமேகலைக் காப்பியத்தைப் படைத்து. அதைத் தன் நண்பரான இளங்கோவடிகளின் முன்னிலையில் அரங்கேற்றினார் என்பது.

‘இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமேகலைத் துறவு
ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்’ (பதிகம்95) -1

எனவரும் இந்நூற்பதிகத்தால் அறியப்படுகின்றது.

இதன் காலம் சிலம்பின் காலமான கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். இது சிலம்பின் தொடர்ச்சியாகத் திகழ்வதாலும். புகாரின் ஒரு பகுதியைக் கடல் கொண்டதைப் பாடுவதாலும் இது சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் தோன்றிய காப்பியம் என்று கூறப்படுகின்றது.

**நூலின் சிறப்பு : -**

இது ஒரு பௌத்த நூலாகும். கதைத் தலைவியின் பெயரால் பெயர் பெற்ற முதற்காப்பியம். தமிழில் தோன்றிய இரண்டாவது பெருங்காப்பியம். இந்நூல் பல கிளைக்கதைகளையுடையது. இது அகவலோசையுடன் ஆசிரியப்பாவில் அமைந்தவை. முப்பது காதைகள் பெற்றுத்திகழ்கிள்றன. இந்திர வழிபாடு மணிமேகலா தெய்வம் பற்றி கூறுகின்றன.

"சிலப்பதிகாரம் கோவலனின் முன்னோர் கடலில் விழுந்து துன்புற்றபோது. அவனது துன்பம் துடைத்து உதவியது அவர்களின் குலதெய்வமான மணிமேகலா தெய்வம். எனவே அக்குல தெய்வத்தின் பெயரையே தன் மகளுக்குக் கோவலன் வைத்தான் என்று மணிமேகலா தெய்வம் பற்றிக் குறிப்பிடுகின்றது" - 2

வாழ்வில் அறத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதற்கான சிறந்த காப்பியக்கதை மணிமேகலை, டாக்டர் உ.வெ.சா. அவர்கள் "சமய சம்பந்தமான பல சொற்களையும் தொடர்களையும் வேறு சிலவற்றையும் இவர் (சாத்தனார்) இடத்திற்கேற்ப மொழி பெயர்த்து அமைத்திருத்தல் மிகப் பாராட்டிற்குரியதொன்றாம்" -3

**காப்பியங்கள் : -**

ஐம்பெருங்காப்பியங்கள்

சிலப்பதிகாரம். மணிமேகலை. சீவகசிந்தாமணி. வளையாபதி. குண்டலகேசி இவை ஐந்தும் ஐம்பெருங்காப்பியமாகும்.

ஐஞ்சிறுகாப்பியங்கள்

உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி இவை ஐந்தும் ஐஞ்சிறுகாப்பியங்களாகும்.

இதில் சிலப்பதிகாரம். மணிமேகலை இரட்டைக் காப்பியங்களாகச் சொல்லப்படுகிறது. இதில் புகார் நகர வருணனை. அழகிய உவமைகள் இடம்பெற்று காப்பிய நலன் சிறக்கச் செய்துள்ளன. இதன் இலக்கியச் சிறப்பை சைவப் பெரியாரான துறைமங்கலம் சிவப்பிரகாசரும், அம்பிகாபதிக்கோவை

ஆசிரியரும் பாராட்டியுள்ளனர். மேலும் கவியோகி சுத்தானந்த பாரதி அவர்கள்...

## காப்பியங்கள் :

''காதொளிரும் குண்டலமும் கைக்குவளையாபதியும்
கருணைமார்பின் மீ தொளிர் சிந்தாமணியும்
மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்போது
ஒளிரும் திருவடியும்.'' - 4

என்று நடுநாயகமாகத் தமிழ்த்தாயின் இடையை அணி செய்வது மேகலையே என வருணித்துப் பாராட்டிள்ளார்.

## அறச்செல்வி மணிமேகலை :

மணிமேகலையும் அவளது தோழி சுதமதியும் அரசகுமாரனான உதயகுமாரனுக்கு அஞ்சி பளிக்கறையில் ஒளிந்திருந்த போது மணிமேகலையைப் பாதுகாக்க வேண்டி மணிமேகலா தெய்வம் அவளை மயக்கமடையச் செய்து மணிபல்லவத்தீவில் கொண்டு செலுத்தியது. அங்கு அவள் மயக்கம் தெளிந்து பௌத்த மதம் தொழுது பழம்பிறப்புணர்ந்து தாம் ஆற்ற வேண்டிய கடமைகளை அறிந்து செயல்படுத்தினாள். இதன் வாயிலாக அட்சய பாத்திரம் பெற்று அறச் செல்வியாக சிறப்புற்றாள்.

## கற்பு நெறி :

மாதவி கோவலனுடன் வாழ்ந்த காலத்தில் மணிமேகலையைப் பெற்றெடுத்தாள். பிறகு அவன் அவளை பிரிந்த நிலையில் தான் கற்பு நெறி தவறாமல் கோவலன் இறந்த பிறகு துறவறம் மேற்கொள்கிறாள். மணிமேகலையையும் பல கலைகளில் சிறந்தவளாக வளர்க்கிறாள். இதன் வாயிலாக மாதவியின் கற்பு நெறி அறியப்படுகிறது. வள்ளுவரும் கற்புடைய பெண்ணைப் பற்றி தம் குறளில்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை" என்கிறார். - 5

அஃதாவது காலையில் துயில் எழும்போது. பிறிதொரு தெய்வத்தைக் தொழாமல் கணவனையே தெய்வமாகக் கருதித்தொழுது எழுகின்ற பத்தினி, பெய் என்றால்

மழை பெய்யும் என்கிறார்.

## வாழ்வியல் அறம் :

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' - 6

எனும் கருத்தை நிலைநாட்டும் மணிமேகலை ஆசிரியர் பசியின் கொடுமையையும். பசிவந்திடப் பத்தும் பறந்து போகும் தன்மையையும்.

'குடிப்பிறப் பழிக்கும். விழுப்பங் கொல்லும்
பிழத்த கல்விப் பெரும்புனை விடும்,
நாண் அணிகளையும் மாண் எழில் சிதைக்கும்
பூண் அணி மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி' - 7

என்பதன் முலம் விளக்குகின்றார்.

## மணிமேகலா தெய்வம் தோன்றியது :

"இந்திர கோடனை விழாவணி விரும்பி
வந்துகாண் குறூஉம் மணிமேகலா தெய்வம்
பதியகத் துறையுமோர் பைந்தொடி யாகி
மணியறைப் பீடிகை வலங்கொண் டோங்கி" - 8

இந்திர விழாவின் அழகினைக் காண விரும்பி பூம்புகார் நகரில் வாழுகின்ற ஒரு பசுந்தொடியணிந்த பெண்ணைப் போன்ற உருவினை உடையவளாக புத்தபிரானின் பீடிகையை வலஞ்செய்தாள் என்றார்.

## பசிதீர்க்கும் மந்திரம் வழங்கல் :

நீ இப்போது முற்பிறப்பின் தன்மையை அறிந்தாய். அறத்தின் தோற்றத் தன்மையையும் அறிந்தாய். இனி பிற சமயத்தவர்களின் அறம் பற்றியும். பல்வெறு சமயங்களின் பொய்யுரைகளையெல்லாம் நீ கேட்க நேரும். ஆகையால் அந்நாளில் 'இவள் இளையவள் வளையணிந்த பெண்' என்று நினைக்கும் யாவரும் தத்தம் சமயங்களின் விளைபொருட்களைச் சொல்வர். அதனால் வெற்று உருவத்தினை அடையவும். வானத்தே சென்று வரவும் உதவும் அரிய ஆற்றல் பொருந்திய மந்திரங்களைக் கொள்வாயாக என்று

மணிமேகலா தெய்வம் சொல்லி. வாய்மையோடு அவற்றை மணிமேகலைக்கு ஓதியும் அருளச் செய்தது.

“மண்பெரும் பீடிகை வணங்கினை ஏத்தி
நின்பதிப் புகுவாய் என்றெழுந் தோங்கி”
“மறந்ததும் உண்டிடென மறித்தாங்கு இழிந்து
சிறந்த கொள்கைச் சேயிழை! கேளாய்.”
“மக்கள் யாக்கை உணவின் பிண்டம்
இப்டிபெரு மந்திரம் இரும்பசி அறுக்கு” - 9

அதாவது மிக்க பெருமையுடைய பீடிகையை வணங்கித் துதித்து விட்டு நின் நகரத்திற்குச் செல்வாயாக என்று சொல்லி வானத்து உயரே எழுந்தது தெய்வம்.

மீண்டும் நான் மறந்தது ஒன்றுண்டு எனக்கூறி “சிறந்த கொள்கையினையுடைய மணிமேகலையே! கேட்பாயாக. மக்களுடைய உடல் உணவிலாகிய ஒரு தொகுதியேயாகும். இந்தப் பெரிய மந்திரம் நினைக்குறும் பெரும் பசியையும் போக்கும்”. என்று சொல்லி அதனையும் அவளுக்கு அருளியது.

**ஆய்வுச் சுருக்கம் : -**

உதயகுமாரன் மணிமேகலையின் மீது காதல் கொள்கிறான். ஆனால் அவளோ தான் சிறுவயதிலிருந்து துறவறம் மேற்கொள்ள வேண்டுமென்பதே என் ஆசை. ஆகையால் என்னை வற்புறுத்த வேண்டாம் என்கிறாள். இருந்தும் உதயகுமாரன் பின் தொடர்கிறான். இதனால் மணிமேகலா தெய்வம் அவளுக்கு துணைபுரிந்து தன் முற்பிறப்புணந்து அறம் போற்றும் செல்வியாக மாறுகிறாள்.

மணிபல்லவத்தீவில் புத்தர் பாதம் தொட்டு பழம் பிறப்புணர்ந்த மணிமேகலை தன் முற்பிறப்பிலும் தன் கணவனாக உதயகுமாரன் இருந்ததை அறிகிறாள். முற்பிறப்பில் கொடுங்கோல் ஆட்சியும் அரசனாக தோன்றினான். அப்பிறப்பில் ஒரு புத்த துறவியை கொன்றதனால் பெரும்பாவம் ஏற்பட்டது. அப்பாவம் போக்க என்ன வழி என்று ஒரு புத்த துறவியிடம் மணிமேகலை வினவினாள். அப்பொழுது தான் தானம். தர்மம் செய்ய வெண்டும் என துறவி அவளுக்கு அறிவுறுத்தினார்.

அதன் வாயிலாகத்தான் ஆபுத்திரனின் பிச்சைப்பாத்திரம் கோமுகி குளத்தில் வைகாசி பௌர்ணமி அன்று மேலெழும்பும் போது காத்திருந்து

மணிமேகலை அதை பெற்றுக் கொண்டு பூம்புகார் செல்கிறாள். அங்கு ஆதிரை என்ற பெண் முதன் முதலில் உணவிடுகிறாள். அப்பாத்திரம் அள்ள அள்ள குறையாத அமுத சுரபியாக மாறுகிறது. பசித்தோர்க்கெல்லாம் உணவிடுகிறாள்.

திருவள்ளுவர் பசிதீர்த்தல் பற்றி இவ்வாறு கூறுகிறார்...

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப்பு உழி"

அதாவது வறியவரின் கடும்பசிப் போக்க வேண்டும். அச்செயலே பொருள் பெற்ற ஒருவன் தான் தேடிய டிசெல்வத்தை மறுமையில் தனக்கு உதவுமாறு சேமித்து வைக்கும் இடமாகும் என்றார் வள்ளுவர்.

## முடிவுரை : -

நம் தமிழர்ச் சமுதாயம் இன்னின்னார்க்குரிய ஒழுக்க விதிகள் இவையிவை என்று வரையறுக்கப்பட்டு அதை தொடர்ந்து கடைபிடித்து காலம்காலமாக அம்மரபு பின்பற்றப்பட்டு வருவதால்தான் இந்நாளில் தனக்கென நன்மதிப்பைக் பெபற்றிருக்கிறது என்றே கூறலாம்.

ஒவ்வொரு தனிமனிதனும் அறவழியில் நடப்பது மிக அவசியம். நல்ல பண்பை உணர்த்தக்கூய செயல்களை நம்முன்னோர்கள் செய்தனால்தான் நாம் இன்றளவும் இப்பேறப்பட்ட வாழ்வை மேற்கொண்டுள்ளோம். "பழமையை போற்றுவொம் பகைமையை மாற்றுவோம்" பழங்காப்பியங்களிலும். இதிகாசங்களிலும். நீதிநூல்களிலும் பல அறிய பெரிய நல்ல கருத்துக்கள் பொதித்து கிடக்கின்றன. அவற்றைப் பேணி பாதுகாப்போம். போற்றி நாமும் கடைபிடிப்போம் அறம் வளர்ப்போம்.

---

பார்வை நூல்கள்


- ''தமிழ் இலக்கிய வரலாறு'' - ஆசிரியர் ஜெயம் - பக்கங்கள் - 111, 112, 114
- ''திருக்குறள்'' - ஆசிரியர் பேராசிரியர் மு. பெரி. மு. இராமசாமி - பக்கங்கள் -13, 47
- ''மணிமேகலை மூலமும் உரையும்'' - புலியூர் கேசிகன் - பக்கங்கள் - 82, 106, 107, 113,114



நேர்கண்டவர் :
வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

# பாவலர் வள்ளிமுத்து நேர்காணல்

1. ஐயா வணக்கம்?

வணக்கம் ஐயா

.

2. எல்லோரும் கொரானா தொற்று காலத்தில் உள்ளோம். அதனால் உங்களுக்கே உள்ள தொனியில் கவித்துவத்தோடு மக்களுக்கு ஒரு அறிவுரை வழங்குங்களேன்.?

வல்லவனுக்கு வல்லவனை இயற்கை உருவாக்கிக் கொண்டே இருக்கும்...ஆம் பெரிய உயிருக்கும் சிற்றுயிருக்கும் இடையேயான போராட்டமே உலகியல்..

அளவு மீறிப் பெருகும் உயிர்களை இயற்கையே அழித்துச் சமநிலைப் படுத்திவிடும்.. இந்த வைரஸ், பாக்டீரியா, பூஞ்சை போன்ற நுண்ணியிரிகளுக்கும் மனிதனுக்குமான போராட்டம் இப்போதல்ல காலகாலமாக நடப்பதுதான்..

ஒரு காலத்தில் காலரா என்ற பாக்டீரிய நோயால் கொத்துக் கொத்தாய்ச் செத் தோம். நுண்ணுயிரியைப் பற்றிய ஆய்வு மிகுந்தபின் பாக்டீரிய நோய்கள் பலவற்றி லிருந்து மனித இனம் இன்று விடு பட்டுள்ளது.. குறிப்பாக காலரா என்ற கொள்ளை நோயிலிருந்து மருத்துவ விஞ்ஞானம் மனித குலத்தையே மீட்டெடுத் துள்ளது

இப்போதோ பெருந்தொற்று என்னும் கொரோனா வைரசுக்கு எதிராக மனித நுண்ணறிவு போராடிக் கொண்டிருக்கின்றது..! அந்த மருந்துவ அறிவு நமக்காகத் தற்போது பரிந்துரைக்கும் ஒரே ஆறுதல் மற்றும் ஆயுதம் தடுப்பூசிதான்..

“அடுத்தடுத்து அலைகள் வந்த போதும் துடுப்பையே ஆயுதமாக யோசித்த மனிதன் கடலையே கடந்தான்.. நாம் இப்போது தடுப்பை ‘ஊசியாக நேசிப்போம்’ அலைகள் என்ன செய்துவிடும்...!”

3. நானும் கவிஞன் எனும் அடிப் படையில் உங்களிடம் ஒரு கேள்வியை முன்வைக்கிறேன். இது பழைய கேள்விதான். ஆயினும் ஒரே ஈற்றடிக்கு பற்பல கோணத்தில் கற்பனை முளைக்கு மல்லவா? அதுபோல் இந்த கேள்விக்கும் சற்று வித்தியாசமான பதிலை எதிர்பார்க்கிறேன் இதோ கேள்வி. புதுக் கவிதை மரபுக்கவிதை இரண்டுக்கும் இலக்கணத்தைத் தாண்டி உள்ள வேறுபாடு என்ன?

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே”

என்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் கவிதையின் வடிவத்தில் நடக்கப் போகும் புரட்சியை நுட்பமாக ஆய்ந்து, அதை ஏற்றுக்கொள்வது வழுவல்ல அது காலத்தின் கட்டாயம் என்று நமக்கு வழிகாட்டிச் சென்றிருக்கின்றார் நன்னூலின் இறுதிச் சூத்திரத்தில் பவணந்தி முனிவர்..

கவிதை என்பது அழகான குழந்தை.. அதைப் பார்த்தவுடன் அனைவருக்கும் பிடிக்கும்..

அதற்கும் பூ வைத்து பட்டாடை உடுத்தி மைதீட்டிப் பின்னலிட்டு பார்த்தாலும் அழகாய்த்தான் இருக்கும்..

கிராப் வெட்டி பவுடர் பூசி ஜிகினாப் போட்டு சுடியணிவித்துப் பார்த்தாலும் அழகாய்த்தான் இருக்கும்..

மொத்தத்தில் குழந்தை என்பது உணர்வுப் பூர்வமாக அனைவருக்கும் ஒன்றுதான்.. அதை அழகுபடுத்தும் (கவித்துவப்படுத்தும்) முறைகள்தான் வேறு வேறு

எல்லா மரபுகவிதையும் வெற்றி பெற்றது மில்லை. எல்லாப் புதுக் கவிதையும் தோற்றதுமில்லை. படைப்பாளியின் கவித் துவப் படுத்தும் உத்திகளால் (Technic) வாசகனின் உள்ளத்தைத் தட்டியெழுப்பும் கவிதைகள் காலம் கடந்து வாழ்கின்றன..

4. புதுக்கவிதையில் சொல்லும் ஒருசில கற்பனை கலந்த செய்திகளை அதே அழகோடு மரபில் சொல்ல இயலாது என்கிறார் களே அதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

அவர்களின் இந்தக் கருத்தை முழுவது மாக ஏற்றுக்கொள்ள மனம் மறுத்தாலும், அவர்கள் பக்க நியாயத்தைக் மறுத்து விட்டுக் கடந்து செல்ல முடியாது.

இலக்கணத் தடைகளும் முன்னோர் கட்டிவைத்த மரபுகளும் வழக்கொழிந்த சொற்களும் ஒருவித இயலாமையை உள்ளுக்குள் புகுத்தியதாக உணர்ந்தனர். சொல்ல வந்த உணர்வை துல்லியமாகச் சொல்ல அவையே தடைக்கல்லாக உணர்ந்ததனால் அதை உடைத்துவிட்டு வெளியேறத் துடித்த கவிஞர் பலருக்கும் புதுக்கவிதை வடிகாலாக அமைந்தது..

இலக்கணம் படிக்காமலும் இலக்கியம் படிக்காமலும், பேனா எடுத்தவனெல்லாம் கவிஞனாக மாறிவிட்ட காலத்தின் கோலத்தில் சிலர் இவ்வாறு பிதற்றுவதை யும் காணத்தான் முடிகிறது..

சிலை செதுக்குபவனால் அம்மி கொத்த முடியாதா என்ன.? மரபாய்ந்த புலவருக்கு உணர்வும், சந்தமும், உவமையும், கற்பனை யும் கடலலையாய் வந்துவிழும்..! அதை உள்வாங்கும் அளவிற்குத் தன்னைத் தகுதி படுத்திக் கொள்ளாதவர்களின் புலம் பலைக் கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதே சரியாக இருக்கும் என நினைக்கின்றேன்.

5. நால்வகை பாக்களில் உங்களுக்கு பிடித்த பாவகை எது? ஏன்? அந்த பாவகையை அழகாகக் கையாண்ட பழம்பெரும் புலவர் யார்? அவர் எழுதிய செய்யுளில் உங்கள் மனங்கவர்ந்த கற்பனையில் அமைந்த செய்யுள் ஒன்றை சொல்லுங்களேன்?

இலக்கணத் தடை அதிகம் இல்லாத பா என்றால் அது ஆசிரியப் பா தான்.. சொல்லவந்த கருத்தை எளிமையாகச் சொல்லிவிடலாம் என்றதானால் சங்க இலக்கியத்தின் 95 விழுக்காடு இதே பா வகையால் நிரம்பிக் கிடக்கின்றது..

இலக்கணத் தடை அதிகம் உள்ள பாவென் றால் அது வெண்பாதான்.. அதனால் அதைச் சவாலாக ஏற்றுப் புலவர்கள் அனைவரும் புலியை அடக்கும் வீரம்போல் கருதி வெண்பாவில் வித்தகம் காட்டினர்...!

வடிவத்தால் தோல்வியடைந்த பா என்றால் அது கலிப்பாதான்... சொல்வடிவத்தால் தோல்வியடைந்த பா என்றால் அது வஞ்சிப்பாதான்..

ஆனாலும் நான்கு வகைப்பாவின் இனங்க ளான தாழிசை, துறை, விருத்த மென பாவின் வடிவங்கள் பல்கிப் பெருகியப் பின் விருத்தம் என்னும் பாவகை பேரிலக்கியங்களையும், காப்பியங்களை யும் புராணங்களையும் ஒருசில சிற்றிலக் கியங்களையும் தனது ஒழுகிய ஓசையாலும் விதவிதமான வடிவங்க ளாலும் ஆளத் தொடங்கியதை மறுக்க முடியாது. மற்றபடி...

நால்வகைப் பாவில் புலவருக்குப் புலி வெண்பா என்பதனால் புலியை அடக்குவதே எல்லாப் புலவருக்கும் விருப்பமாக இருக்கும் என்பதனாலும் நானும் விதிவிலக்கல்ல என்பதனால் வெண்பாவே எனக்குக் கூடுதல் விருப்பம்.

அந்த வகையில் வெண்பாவில் வித்தகம் மட்டுமல்ல புரட்சியும் செய்த ஆதிகவி ஐயன் வள்ளுவரே முதல்விருப்பம்.. அறத்துப் பாலிலும் பொருட்பாலிலும் தத்துவ ஞானியாக விளங்கும் வள்ளுவன் காமத்துப் பாலில் மாபெரும் கவிஞனாக மாறிப் புகுந்து விளையாடியிருப்பார்.

மதியும் மடந்தை முகனும் அறியாப்
பதியின் கலங்கிய மீன் - குறள் 1115

வானத்தில் இரவு நேரத்தில் விண்மீன்கள் மின்னுவது, அதாவது அவை அசைந்து நடுங்கிக் கொண்டே இருப்பதுபோல்

தில்லை தமிழ்சங்கத்தில் இரட்டுற மொழிதல் நூல் வெளியீட்டு விழா.



தெரிவது இயல்பு, அதுவும் முழுநிலவு நாட்களில் இன்னும் மங்கலாகத் தெரியும்...

வள்ளுவர் இக்காட்சியைப் பார்க்கிறார் உற்று நோக்குகிறார். தன்கற்பனையை இரவுக் குறியில் நடுயாமத்தில் தன் காதலியைச் சந்திக்கும்போது பார்த்த அவள் முகத்தோடு நிலவையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார், உடனே இரண்டையும் ஒப் பிட்டுத் தன் கற்பனையையும் ஏற்றி இரண்டு வரியில் தனது குறளில் அடக்கு கிறார். இப்படி இந்த விண்மீன்கள் இருக்கின் றனவே இவை ஏன் இப்படித் தடுமாறி தடுமாறி அசைந்து அசைந்து ஒளிர்கின்றன. என்ன காரணமாக இருக்கும்..!

நள்ளிரவில் வானத்தில் நிலவும் ஒளிர் கின்றது.. அதே இரவில் பூமியிலோ என்காதலியின் முகமும் நிலவைப்போல் இரவில் ஒளிர்கின்றது. பாவம் எது உண்மையான நிலவென்று தெரியாமல் வானத்தையும் பூமியையும் பார்த்துப் பார்த்துக் கலங்கித்தான் விண்மீன் மின்னு வதாகக் காட்டியிருப்பார் வள்ளுவரின் எத்தனை அழகான கற்பனை.. இதைப் போலவே

1114 வது பாடலிலும் 1120, 1145 வது பாடலிலும்

கற்பனையில் கொடிகட்டிப்
பறந்திருப்பார்..
வெண்பாவில் அழகியலைத்
தொடங்கிவைத்தவர்
வள்ளுவரே என்பதால் வள்ளுவரை
அதிகம் பிடிக்கும்.

6. சில பாடல்களை நாம் படிக்கும் போது இது கற்பனையின் உச்சம் என புகழ்வதுண்டு. அந்த உச்சம் என்பது மற்ற பாடல்களில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் எப்போதும் அதிசயம்தான். பெண்களின் பேரழகை அணுஅணுவாக உற்றுநோக்கிப் பாடாத கவிஞர் எப்படிக் கவிஞராக



விரைகவி வாணர் விருது பெற்றபோது

இருக்கமுடியும். பாதாதி கேசம் என்றும் கேசாதி பாதம் என்றும் முடிமுதல் அடிவரையும் அடிமுதல் முடிவரையும் வரிசைமுறைப்படி அடுக்கிப்பாடும் தனிச் சிற்றிலக்கியமே படைக்கும் முறையைப் பழம்புலவர்கள் வகுத்திருந்தனர் என்றால் புரிந்து கொள்ளலாம் அவ்வகையில்...

பெண்களின் கண்களை மீனாகவும், வண்டா கவும், தாமரை மலராகவும், கணை யாகவும் வாளாகவும் தமிழிலக்கியம் முழுவதும் காட்டியிருப்பர், அவ்வாறே முகத்தை நிலவாகக் காட்டி மயங்கியும் இருப்பர்.. கைகளை தாமரை மலரோடும் ஒப்பிட்டிருப்பர்..

அவை அனைத்தையும் தொகுத்துக் கூறிக் கற்பனையின் உச்சத்தில் கொண்டு வைத்திருக்கும் பாடலொன்றை விவேக சிந்தாமணியில் படித்துள்ளேன்..

அழகான பெண் ஒருத்தி குளக்கரையில் நடந்து வருகின்றாள்.. அவள் காதல் மயக்கத்தில் வேறு உள்ளாள்.. குளத்தில் நிறைந்து கிடக்கும் தாமரைப்பூவில் தேனைக் குடித்துவிட்டுப் போதையில் கரை யோரத்தில் மயக்கிக் கிடக்கின்றது வண்டு.. கரையிலிருந்த நாவல் மரத்திலிருந்து விழுந்த பழம்தான் கீழே விழுந்து கிடக்கின்றதோ என்று கையில் எடுத்துப் பார்க்கின்றாள் அவள்...

போதையில் கிடந்த வண்டு லேசாக விழித்துப் பார்க்கின்றது... அவள் முகம் நிலவைப் போல் தெரிகின்றது..




மதுரை தமிழ்சங்க நூல் அரங்கேற்ற விழாவில்...

அவளின் கைகள் தாமரைப் பூவை நினை வூட்டுகின்றது..

அடடா நிலவு வந்துவிட்டதே.. இரவாகி விட்டால் தாமரை கூம்பிவிடுமே.. ஒருவேளை கூம்பிவிட்டால் தாமரைப் பூவுக்குள் இரவெல்லாம் சிக்கிவிடுவோமே எனப் பதறியடித்துப் பறக்கின்றது..

அதைப் பார்த்ததும் அந்தப் பெண்ணான வள் என்னடா இது..! என்ன அதிசயம் இது..! பழம் பறக்கிறதே பழம் பறக்கிறதே..! என்று பின்னால் ஓடுவதாகக் காட்டும் இப்பாடலில் மயக்க அணி தற்குறிப்பேற்ற அணி என அணிநயமும் நல்ல நகைச்சுவைத் தன்மையும், புலவர் தனது கற்பனையில் ஏற்றிக் காட்டியிருக்கும் பாங்கு வியக்கத் தக்கது.. இதோ அந்தப்பாடல்

"தேனுகர் வண்டு மதுதனை யுண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்புவின் கனியென்று
தடங்கையா லெடுத்துமுன் பார்த்தாள்,
வானுற்றமதியும் வந்ததென் றெண்ணி
மலர்க்கரங் குவியுமென் றஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்..!
புதுமையோ விதுமெனப் புகன்றாள்.!"

இப்படி வியந்து மகிழ்ந்த பாடல்கள் பலவுண்டு. விரிவு கருதி இந்த ஒருபாடலே இப்போதைக்குப் போதுமென நினைக்கின் றேன்..

7. தாங்கள் சிலேடைச் செம்மல் விருது பெற்றதை நான் அறிவேன். அதற்கான வாழ்த்துகள் சொல்லிக் கொள்கிறேன். தாங்கள் எழுதிய சிலேடையில் தங்க ளுக்குப் பிடித்த பாடல் எது?

நன்றி ஐயா... சிலேடை என்னும் வித்தகம் அவ்வப்போது செய்யுளின் இடை யிடையே பாடப்பட்டு வந்தாலும் அதனைத் தனி இலக்கியமாக்கி உலகறியச் செய்தவர். காளமேகப் புலவரே என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்திருக்க முடியாது. அவருக்குப் பின்னர் நானூறு ஆண்டுகால வரலாற்றில் பலரும் முயற்சி செய்து பல பாடல்களை இயற்றினாலும் அது தோல்வியாகவே முடிந்திருந்தது.. அதன் பயன் படித்து மகிழ்தல் என்னும் உணர்வினைத் தாண்டி வேறொரு பயனும் இல்லாததும் காரணமாக இருக்கலாம்.

சொல்லாட்சியால் செய்யும், இரட்டுற மொழிதல் என்னும் சிலேடை முயற்சியைப் பைந்தமிழ்ச் சோலை முகநூல் குழுமத்தில் சிறுமுயற்சியாகச் செய்துபார்த்தேன். பல புலவர்கள் தந்த ஊக்கத்தால் வாரம் ஒரு சிலேடை வெண்பா எனத் திட்டமிட்டு இரண்டாண்டு கால உழைப்பில் நூறு சிலேடை வெண்பாக்கள் கொண்ட நூலை இயற்றி வெளியிட்டேன்..

காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்பதுபோல் நூறும் பிடித்திருந்தாலும் நீங்கள் கேட்டதற்காக குதிரைக்கும் மத்தளத்துக்குமாக நானெழுதிய சிலேடை

"வார்பிடிப்பர் வாகாகத்
தோள்சுமக்க வைத்தடிப்பர்
போர்தொடுக்கும் முன்னால்
புகுத்திடுவர் - நேரிழையே..
கொட்டில் அடக்கிடுவர்
கொள்க குதிரையுடன்
மட்டும்நல் மத்தளம்நே
ரென்று..!"

குதிரையில் செல்லும்போது வாரைப் பிடிப்பர், வாகாக நம்மைத் தோளில் சுமந்து செல்வதற்காக அதனை அடிப்பர், போரில் குதிரைப்படையையே முன்னால் செல்ல வைப்பர்.. கொட்டிலில் அடைத்துப் போடுவர் என்று குதிரைக்கும் மத்தளத்துக்கு வார் அடிப்பர், தோளில் சுமந்து கொண்டு வாகாக அடிப்பர், போருக்கு செல்லும் முன் மத்தளம் முழக்குவர், கொட்டும் மேள வகைகளுள் ஒன்றாக மத்தளத்தை அடக்கிக் காட்டுவர்..

இந்தச் சிலேடை நானெழுதி எனைக்குப் பிடித்த சிலேடைகளில் ஒன்று

சிலேடை வகை என்பது வாசகர்களுக்கு எந்த விதத்தில் பயன்படுகிறது.?

சிலேடையின் வாழ்வியல் பயன் அறநெறிப் பொருளியல் பயன் என்று ஏதுமில்லை. இப்பாவகை தோல்வி யடைந்ததற்கு அதுவும் கூடக் காரணமாக இருக்கலாம்..

படித்துச் சுவைக்கும் இன்பத்துப் பயன் என்பதைத்தாண்டி பெரிதாக ஒன்று மில்லை. என்றாலும் புலவருக்குச் உற்று நோக்கும் பண்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றலையும் சொற்களஞ்சியப் பெருக்கத் திற்கும் துணையாக நிற்பதுடன்.. சொல் ஆளுமை மிக்க புலவர்களாலேயே இது சாத்தியப்படும் என்பதே உண்மை..

இதைப்பற்றி விரிவு காணவேண்டுமாயின் vallamai.com ல் படித்தேன் சுவைத்தேன் பகிர்ந்தேன்-2 ல் முனைவர் சுப்பிரமணியம் அவர்கள் எனது சிலேடையை விரிவாக ஆய்வு செய்து கட்டுரை வெளியிட்டுள்ளார் அங்குப் பார்க்கலாம்..

8. மரபிலக்கணம் கற்றவுடன் தாங்கள் எழுதி ரசித்த பாடல் ஞாபகம் இருப்பின் பகிரலாம்,

பைந்தமிழ்ச் சோலையில் பாட்டியற்றுக பயிற்சியில் மரபிலக்கணம் அடிப்படை விதிகளைக் கற்று 2015 ஆண்டு நானெழுதிய முதல் மரபு பாவே வெண்பா தான்.. பாட்டியற்றுக பயிற்சி எண் இரண்டில்.. பட்டாம்பூச்சியைப் பற்றி எழுதியிருந்தேன்..

"காற்றில் மிதக்கும்
        கவியாய்ச் சிறகடிக்கும்
சேற்று மலரிலும்
        தேன்குடிக்கும் - போற்றும்
புகழுடைய வண்ணத்துப்
        பூச்சி மலத்தில்
இகழவே வாய்வைக்கா
        தே..!"

இந்த வெண்பாதான் மரபில் எழுதிய முதற்பாட்டு.

9. மொழியாளுமை, சொல்லாளுமை இவைகள் அழகாகப் பிரதிபலிப்பது கவிதையிலா? உரைநடையிலா? காரணம் என்ன?

உரைநடையோ கவிதையோ எந்தத் துறையாக இருந்தாலும் ஆளுமைகள் எழுத்தை ஆளும்போது அவர்கள் வெற்றி யடைந்தே காட்டுவர்..

அலங்காரமும், கவிநயமும், கற்பனையும் சொல்லடுக்கும் கொண்டு சிறப்பதே கவிதை..! கவியழகோடு கருத்தை நெய்வதே புலவர்தொழில்..

வீறு கவியரசர் முடியரசனார் ப்ட்டம் பெற்றாபோது....



சுருங்கக் கூறின் சொல்லுக்குள் வித்தை செய்வதே கவிதை பொருளை எளிதில் புலப்படுத்த பயன்படுத்தப் படும் ஆயுதமே உரைநடை.. எனவே மொழிநடையோ சொல்லழகோ பேரழகாகப் பிரதிபலிப்பது கவிதையில்தான் என்பது எனது பார்வை.

10. ஒரு தனிப்பட்ட கேள்வி... நிச்சயம் நீங்கள் காதல் வயப்படாமல் இருக்க வாய்ப்பில்லை. காதலிக்கும் போது எழுதிய வரிகள் சில...?

பத்துவயதில்காதலென்றால்என்னவென்றே தெரியாமல் சில திரைப்படங்களைப் பார்த்த பூரிப்பில், பூவரசம் இலையில் பந்துமுனைப் பேனாவால் I LOVE YOU ன்னு அந்தப் பொண்ணு பேரப் போட்டு எழுதியதைப் பக்கத்திலிருந்த நண்பன் சிரித்துக் காட்டி விட. ஐந்தாம் வகுப்பு தலைமையாசிரியரிடம் பட்ட அடிகள்.. பத்தாம் வகுப்பைத் தாண்டும் வரைப் பெண்களென்றால் அருச்சுனன் பேர் பத்து என்று தலைதெறிக்க ஓடுமாறு பாதுகாத்தது..

பதினொன்றாம் வகுப்பில் கூடப்படிக்கும் ஒரு பெண்ணின் மீது ஒருதலையாகக் காதல் இருந்தது.. கிட்டத்தட்ட என்னைக் கவிதைக்கடலில் தள்ளிவிட்டது அவளுடைய கண்களாகத்தான் இருக்கும்.. என் செய்முறைப் பதிவேட்டின் பல பக்கங்களில் காதல் கவிதைகள் பட்டாம் பூச்சியாய்ச் சிறகடித்ததும் அந்தக் காலங்கள்தான்..

சேரவும் முடியாமல்
பிரியவும் முடியாமல்
தண்டவாளத்தைப் போலவே நாம்..!

இப்படியே
ஓடிப்போகுமோ
இறுதிவரை நம்காதல்..!

என்ற எனது கவிதையைப் போலவே அந்தக் காதலும் பன்னிரண்டாம் வகுப்போடு ஒருதலைக் காதலாகவே முடிந்து போனது..

11. தலைப்புக்கு எழுதுவது, ஈற்றடிக்கு எழுதுவது, நடப்புச் செய்திக்கு எழுதுவது, இவைகள் மாறி தற்பொழுது ஒரு ஓவியத்தையோஅல்லதுபுகைப்படத்தையோ பார்த்து எழுதும் வழக்கம் மேலோங்கி உள்ளது. இது சரியா தவறா?

என்னைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல கவிதை என்பது கவிஞனால் கவிதை எழுதப்படும் என்பதைத் தாண்டிக் கவிதை தான் தானாய் வந்து கவிஞனை எழுதும் படித் தட்டி எழுப்பும் அப்படிப்பட்ட கவிதைதான் தானும் வாழும்.. தன்னால் அந்தக் கவிஞனையும் வாழவைக்கும்..

மற்றபடி தலைப்புக்கு எழுதுவதென்பது ஏற்கனவே நமக்குள் புதைந்து கிடக்கும் மொழியறிவை வார்த்தை கோலங்களால் நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்தி.. கவிதை யாக ஒப்பனை செய்து காட்டுவதேயன்றி வேறல்ல..

படத்தைப் பார்த்துப் பாட்டெழுதுவ தென்பது அதனினும் கூடுதலாகப் படத்தைப் பார்த்தவுடன் ஏதோ ஒன்று உள்ளுக்குள் பொறிதட்டுவதால் ஏற்படும் உணர்வால் எழுதுவதால் கொஞ்சம் கூடுதல் கவித்துவம் பெறும்..

ஈற்றடிக்குப் பாட்டெழுதுதல் என்பதெல் லாம் பட்டறிவும் படிப்பறிவும் மொழிப் பயிற்சியும் நிரம்பப் பெற்ற புலவர் களுக்கே உரித்தானது அதில் நுட்பத்தை விரைவை ஆற்றலை நோக்க முடியுமே தவிர கவித்துவத்தைப் பெரிதாகக் காணமுடியாது..

மொழிவளத்தைக் கற்பனையைச் சொல் லாட்சியைப், புதிய கோணத்தில் சிந்திக்கக் கிடைக்கும் வாய்ப்பை இவை கூட்டு வதால் இப்படிப்பட்ட கவிதைகள் எழுதுவதில் தவறில்லை என்பதே எனது நோக்கு..

12. இதற்குப்பேர் தானா இறை? எனும் ஈற்றடிக்கு ஒரு நேரிசை வெண்பா பாடுங்கள்.

கூக்குரல் ஓலம்
கொடுந்தொற்றால் காதொலிக்கக்
காக்கும் மருத்துவரைக்
கண்டுநின்றோம் - யார்க்கும்
உதவாமல் வாய்மூடி
ஊரோரம் நின்ற
இதற்குப் பெயரா
இறை...!?

13. தமிழில் பா வகைகள் சிறப்பான இலக்கணத்தில் அமைந்துள்ளது. ஆனால் ஹைக்கூ, சென்றியூ, கஸல் போன்ற அந்நிய மொழிப் பாவகைகளை தேடிச் செல்லும் கவிஞர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

கம்மங்கஞ்சியும் சோளக் கஞ்சியும் குடித்து விட்டு மாட்டைக் கலப்பையிலேற்றிக் காடு உழுத இனம் டிராக்டரில் உழுது விட்டு சொமேட்டோவில் ஆர்டர் செய்து பீஸாவையும் பர்க்கரையும் சாப்பிடுவதைப் போன்றதுதான். இவ் விதமான புதிய தேடுலும் புதிய சுவையும்..

அது அவர்களின் குற்றமில்லை, காலச் சூழலுக்கு ஏற்ப புதிய பயணத்தைச் செய்கிறார்கள். செய்யட்டும் தவறில்லை.. ஆனாலும் நம் மொழி காப்பற்றப்பட வேண்டும் அதற்குப் புதிய புதிய கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்கி அதைப் புதிய பாடல்களில் ஏற்றி அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதன் மூலம் நமது மொழியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உள்ளதை நினைவில் வைத்துக் கொண்டால் நலம்..

புதுவை உலகப்பாவலர் தமிழன்னைத் தமிழ்ப் பேரவையில் சிலேடைச் செம்மல் பட்டம் பெற்றபோது....




14. என்ன வறுத்தி நீ கவிசெயினும் முன்னோர்கள் செயததன்றி நூதனம் ஒன்றுமில்லை... இந்த சொற்றொடரை தாங்கள் நிச்சயமாக கேட்டிருப்பீர். ஏன்? தற்போது உள்ள கவிஞர்களால் அந்த இடத்தைப் பிடிக்க முடியாதா? அல்லது இது உளவியல் ரீதியான சொற்றொடரா?

எல்லாக் காலத்திலும் வல்லவனுக்கு வல்லவன் தோன்றிக் கொண்டே இருப்பான்.. அதைத் தவிர்க்க முடியாது.. ஆனாலும் அவனது திறமையைத் தீர்மானிப்பது காலமும் அவன் வாழும் சூழலுமே என்பதை மறுத்துவிட முடியாது..

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

என்ற ஐயனின் வரிகளைத்தான் சான்று காட்ட வேண்டியுள்ளது.. தான் வாழும் காலச்சூழலை மக்கள் வாழ்வியலை அறத் தோடு கூற வேண்டியதும்.. மொழியைத் தொடர்ந்து காக்க வேண்டி யதும் உள்ளதால் எழுத்தாளர்கள் பெருகிக் கொண்டே இருத்தல் வேண்டும்.. அவர்களின் முயற்சிக்குத் தக்க உயரம் உறுதியாய் கிடைக்கும்..

முன்னோர் எழுதாதையா நாம் எழுதி விடுவோம்.. ஆம் முன்னோர்கள் கனணியைப் பற்றியோ.. மின்சாரத்தைப் பற்றியோ தொடுதிரை செல்லிடப் பேசியைப் பற்றியோ எழுதியதில்லையே..

அப்படித்தான் அவன் வாழும் காலத்தை அழகாகப் பதிவு செய்வதே கவிஞனின் கடமை..




பழந்தமிழ்ச் செம்மல் பட்டம் பெற்றபோது....

15. கடைசி கேள்வி. எது கவிதை?

வாசகனின் உள்ளத்தில் படித்தவுடன் உள்ளுக்குள் ஏதோ ஒன்று செய்ய வியந்து பார்க்கின்றானே அதுவே கவிதை..

நீங்கள் எழுதும் ஒவ்வொரு கவிதையும் படித்துப் பார்க்கும் யாரோ ஒருவரின் உள்ளத்தை ஏதோ ஒரு கவிதை ஈர்த்துவிடும்..! எனவே கவிதை என்று எழுதும் அத்தனையும் யாரோ ஒருவருக்குக் கவிதையாக அமைந்துவிடுவதால்.. எது கவிதை என்னும் வினாவிற்குக் இதுதான் கவிதை என்று கவிதையைத் தீர்மானிக்கும் உரிமையை வாசகர் வசம் விட்டுவிடுவதே சரி..

தங்களுக்கான வினாக்கள்

தங்கள் பெயர் மற்றும் புனைப்பெயர்.!?

புனைப்பெயர் வைத்துக் கொள்வதில் பொதுவாக எனக்கு விருப்பமில்லை. ஏனெனில்ஒருகுழந்தைக்குப்பெயர்வைக்கும் முன்னம் அவனது தந்தையும், தாயும் எத்தனை எத்தனை பெயர்கள் நினைவுகள் கனவுகள்..! எத்தனை தேடல்கள் எத்தனை ஆசைகளால் அந்தப் பெயரை வைத்திருப்பர்.. வெறும் போலிப் புகழுக்காக தாய்தந்தையர் வைத்த கனவுப் பெயருக்குக் கல்லறை கட்ட நான் விரும்பவில்லை...

என்பெயர்வள்ளிமுத்து...எனதுதந்தைவழிப் பாட்டி இறந்தபின்பே., எனது தந்தையின் திருமணம்.. நான் முதல்குழந்தை அதுவும் ஆண் குழந்தை யாகப் பிறந்திருந்தாலும் குலதெய்வப் பெயரையெல்லாம் வைக்காமல் எனது பாட்டி வள்ளியம்மாள் பெயரால் வள்ளிமுத்து எனக்குப் பெயர்வைத்துப் பார்த்த என் தந்தைக்கு..! அவரது அம்மாமேல் எத்தனை பெரிய காதல் இருந்திருக்கும் என்பதை என்பெயர்வைத்த காரணத்தை இப்போதுதான் உணர முடிகின்றது..

அத்தக்காதலை அந்த அன்பை அந்தக் கனவைபுனைப்பெயரால்நான்புதைத்துவிட என் மனம் ஏற்று கொள்ளவில்லை.. எனவே வள்ளிமுத்து என்ற இயற்பெயரை மாற்ற ஒருபோதும் மனம் நினைத்ததில்லை..

மனைவி குழந்தைகள் பற்றி ..?

மனைவி பெயர் கௌசல்யா காதலுக்குப் பின்னர் பெற்றோர் சம்மதத்துடன் நடந்த திருமணம்..

முகில் என்ற மகனும் மகிழ்மதி என்ற மகளும் எங்கள் காதல் என்னும் தவத்துக்குக் கிடைத்த வரங்கள்..

பெற்றோர்கள் பற்றி

தந்தை பெயர் பேச்சிமுத்து அன்பும் கண்டிப்பும் சரிசமமாகக் கலந்து என்னை வளர்த்தெடுத்ததில் அவரது பங்கு அளவில்லாதது.

தாயார் பெயர் ராமுத்தாய் அவரின் உழைப்பின்றி நான் ஒரு கவிஞாக ஒருபோதும் வளர்ந்திருக்க முடியாது..

தங்கள் பள்ளி மற்றும் கல்லூரி..!?

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கரடிகுளத்தில் ஐந்தாம் வகுப்புவரையும் அரசுமேல்நிலைப்பள்ளி கழுகுமலையில் ஆறுமுதல்பன்னிரண்டாம்வகுப்புவரையும் படித்தபின்னர்.. மாவட்ட அரசு ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் இடைநிலை ஆசிரியப் பயிற்சி முடித்தேன். இடைநிலை ஆசிரியராக 2009 ல் பணியில்சேர்ந்து பின்னர் தமிழாசிரியராகத் தேர்வு பெற்றுத் தற்போது அப்பணியைச் செய்கின்றேன்

கல்லூரிக்குச் நேரில் சென்று படிக்கும் வாய்ப்பு கிடைக்கவே இல்லை.. அண்ணா மலை பல்கலைக் கழகத்தில் பி.லிட் அஞ்சல்வழியிலும் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ முதுகலையும், இந்திராகாந்தி திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் பி.எட் படிப்பும்.. பெரியார் பல்கலைக் கழகத்தில் எம்.பில் படிப்பும் என்று கல்லூரிப் படிப்பு முழுவதும் தொலைதூரப் படிப்பாகவே முடிந்துவிட்டது..

தங்கள் படைப்புகள் பற்றி சில சுவாரஸ்யங்கள்..!

ஒரு விபத்தாக கவிதை உலகத்திற்குள் வந்தேன்..

எங்கள் ஊரின் அவேக் டியூசன் சென்டரில் நடந்த சரசுவதி பூஜை விழாவில் நானெழுதிய போதை என்ற கவிதையைக் கேட்டு மகிழ்ந்த ஆசிரியர் மாரியப்பன் அவர்கள்தான் அந்தக் கவிதையை தைப் பொங்கல் விழாவில் மேடையிலேற்றி ஒலிப்பெருக்கியில் ஊர்மக்கள் முன் என்னைப் படிக்கவைத்துக் கவிஞனாக எமது ஊர்மக்களுக்கு என்னை அடையாளம் காட்டினார்...

எங்கள் ஊர் தீப்பெட்டி ஆலையைப் பற்றிப் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் போது நானெழுதிய காதல் கவிதை எங்கள் ஊரில் மிகப்பெரிய அதிர் வலையை ஏற்படுத்தியது..! எனக்கு எங்களூர் படிப்பறிவில்லா மக்களிடத்தில் மிகச் சிறந்த வரவேற்பையும் ஊக்கத்தையும் தந்த கவிதை அதுவென்றால் மறக்கவே முடியாது.

புதுக்கவிதையில் ஆரம்பித்து பைந்தமிழ்ச் சோலையின் பயிற்சியால் மரபுகவிதையில் தற்போது பயணப்பட்டுக் கொண்டிருக்கும் நான்.. நானெழுதிய "காக்கைவிடு தூது" என்னும் சிற்றிலக்கியத்தை மிகவிரும்பி விரும்பிப் படைத்தேன்...!

தாங்கள் பெற்ற விருதுகள் பற்றி சொல்லுங்கள்..!?

பைந்தமிழ்ச் செம்மல், பைந்தமிழ்ச்சுடர், ஆசுகவி, விரைகவிவாணர் போன்ற விருதுகளைப் பைந்தமிழ்ச் சோலையிலும், சிலேடைசெம்மல், மற்றும் கவிக்காளமேகம் என்னும்விருதுகளைப்புதுவைஉலகப்பாவலர் தமிழன்னை தமிழ்ப்பேரவையாலும், முடியரச னார் நூற்றாண்டு விழா விருதினையும் இன்னும்பல விருதுகளைப் பெற்றுள்ளேன்.

எமது கவிப்பயணத்தில் என்னையும் ஒரு பொருட்டாகத் தேர்ந்தெடுத்து எமது இலக்கிய உலகத்தின் பழம்நினைவுகளை மீட்டெடுக்க வாய்புத்தந்த தங்களுக்கும் தமிழ்நெஞ்சம் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்வதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

நன்றி வணக்கம்...

உலக தமிழ்ச்சங்கத்தில் இரட்டுற மொழிதல் சிறந்த நூலாகத் தேரவு செய்தபோது



# பிரிதலின் இனிமை

நீ விட்டுச் சென்ற
இடத்திலேதான் நான்
இன்னும் நிற்கிறேன்
நீ திரும்பி வருவாய்
என்றே
விடிந்தும் விடியாத
சில இரவுகள்
உச்சி சூரியன் மலைக்குள்
மறைய வந்தேதீரும்
இங்கே கால்நனைக்கையில்
நாம் பொறுக்கி சேர்த்த
சிப்பிகளை சிரித்தவாரே
இறைத்துச் செல்கிறது
நதி
ஒரு மழைநாளில்
ஒதுங்கிய மகிழ
மரத்தில் என் பெயர்
செதுக்கி முத்தமிடுகையில்
உன் மீசையில் ஒட்டிய
பாசிகளோடு நான்
காத்திருக்கிறேன் நீ
மீண்டும் செதுக்க
வருவாயென

**பிரேம்ராசு**





# காதல்

ஆழ்மனதில் அரும்பும்   காதல்
அழகானது ! குறும்பானது!
கரும்பாய் இனிக்கும் !
சில சமயம் இரும்பாய் கனக்கும் !

உண்பதிலும் உறக்கத்திலும்
அந்த  முகம் மட்டுமே தெரியும் !
இன்பத்திலும் துன்பத்திலும்
அருகமர்ந்து தோள் சாய
ஆசைக் கொள்ளும் !

மனம் வந்த காதலை சொல்லி
முடிப்பதற்குள் மனதுக்குள் ஏனோ
பேரிடி முழக்கம் எழும் !
சொல்லி முடித்த பின்
கொள்ளை ஆசை மனதில் வந்து

ஏதோ ஒரு உணர்வு
ஏதோ ஒரு தாகம்
ஏதோ ஒரு வேகம்
ஏதோ ஒரு மோகம்

இன்ப வலி தந்து ஏக்கத்தில்
தூக்கமின்றி அலைய செய்யும் !
எப்படியாவது பார்க்க
வேண்டுமென ஏங்கி தவிக்கும் !
எங்கிருந்தாலும் பார்ப்பதாகவே
கண்கள் தூக்கம் தொலைக்கும் !

ஊரே கூடியிருந்தாலும்
கண்களில் தெரிவதென்னவோ
அந்த ஒற்றை முகமே !
உறவெல்லாம் ஒன்றாய் நின்றாலும்
உறவில்லா அந்த முகமொன்றே
உறவென எண்ணும் !

தனிமையில் சுகம் தேடும் !
தனிமையின் இன்பம் சுவைக்கும் !
தனிமையே தவமென எண்ணி
தனக்குள்ளே வாழ்ந்து தவிக்கும் !

தினமொரு முறை தூக்கத்தில்
திருமணம் நடக்கும்!
தினமொரு குழந்தை பிறந்து
தூளியில் தத்தி தவழும் !

காண்பதற்கு காரணம் தேடும் !
கண்டவுடன் கண்கள் படபடக்கும் !
பேச நினைத்த வார்த்தைகள்
மறந்து போகும் !
காரணமின்றி மெய்சிலிர்க்கும் !

கவிழ்ந்த தலை நிமிர்ந்து பார்ப்பதற்குள்
காலம் கடந்திருக்கும்
காணும் நேரம் முடிந்திருக்கும் !
விடை பெற நினைக்கையிலே ஏனோ
கண்கள் கண்ணீர் சொட்டும் !


தானாய் சோகம் வரும் !
வீணாய் கோபம் வரும் !
தேனாய் இனிக்கும் சில நேரம் !
வேம்பாய் கசக்கும் மறு நேரம் !

இரண்டும் கானல் நீரே
என்றறிந்த இதயம்
இரண்டுக்கும் ஏனோ
ஏங்கி தவிக்கும் !

உண்மை காதல்
உடைந்து போவதில்லை !
உயிரில் கலந்த காதல்
களைந்து போவதில்லை !

உண்மையாய் காதலிக்க
உள்ளத்தில் துணிவு வேண்டும் !
உயிருள்ளவரை காதல்
நிலைத்திருக்க காதலில்
உண்மை வேண்டும்!
வாழ்க காதல் !

**பி. ஆரோக்கிய செல்வி,**
M.A., B.Ed.,
மாவட்ட முதன்மைப் பயிற்றுநர்,
ஊர வளர்ச்சித் துறை, கடலூர்.




# இனியும் தேடப்பட மாட்டோம்...

இங்கு யாருக்குமே ,
எம்முடன் பேச நேரமுமில்லை..

இங்கு யாருக்குமே,
நாம் தேவையுமில்லை..

நாம் அவர்களுக்கு,
அந்தளவுக்கு முக்கியமும் இல்லை..

நாம் அவர்களுக்கு,
என்ன தான் செய்து விட்டோம்..



உங்கள்; பணமோ, சொத்து சுகமோ
எனக்குத் தேவையில்லை..

அன்பான,
ஓரிரு வார்த்தைகள்..

ஒரு தேவையின் போது,
சிறு உதவி..

ஒரு கவலையின் போது,
சிறு ஆறுதல்..
அப்படியும் இல்லையா??.
சந்திக்கும் போது,
ஒரு மெல்லிய புன்னகை,
ஒரு சிறிய நலன் விசாரிப்பு..

இதுவுமில்லையா??.

இப்போது தானே
எல்லாமே வாட்ஸ்அப் இல்...
அப்போ, ஒரு புன்னகை இமோஜி,
ஹாய் எனும் ஸ்டிக்கர்,
நலமா??. எனும் ஸ்டிக்கர்,
எங்கே இவை எல்லாம்???..

எப்படித் தான் நாம் இவர்களுக்கு
முக்கியமானவராக முடியும்???..

ஆசை தான்;
எல்லோரையும் விட்டு,
அனைத்தையும் விட்டு,
தொலைந்து போகனும் என்று...
ஆனாலும்,
தேடப்படமாட்டோம் என்பது தான் இங்கு
யதார்த்தம் என்றும் தெரியும்!!!..

நாம் தான் சிதறிய முத்துக்கள்...
இனியும் யாராலும்
தேடப்பட மாட்டோம்...

**இளம்தாரகை**
**[ஷஹ்னா ஸப்வான்]**

**தர்கா நகர், இலங்கை**

# மேடுபள்ளங்கள் நிறைந்திட்ட சோலை

தென்னையில் தேள்கொட்ட
பனையில் நெறிகட்டுமா?

கட்டியதே கற்பனை வளம் கொட்டியதே!
கவிதையாய் வந்து சொட்டியதே!

குன்றதை கண்டு நின்றதை ரசித்தேன்
படைப்பதன் பிரமிப்பில் மூழ்குகிறேன்!

சாராயம் குடித்தும் ஏறாத போதையை
தோராயமாகவே உணருகிறேன்!

சிலையினை பார்த்து கலையினில் வேர்த்து
இடையினில் இடையே தேடுகிறேன்!

மேடுபள்ளங்கள் நிறைந்திட்ட சோலையில்
மயங்கி கவியாய் மாறுகிறேன்!

விடுகதை போடும் வெள்ளி ரதமே
விடையினை அறிய நாடுகிறேன்!

விரியும் குடையின் பின்னால் தொடரும்
படையில் ஒருவனாய் ஓடுகிறேன்!

சிந்தாமணியின் சாய்ந்திட்ட நடையில்
சிந்துபைரவி பாடுகிறேன்

மலைகளில் நெளியும் வளைவுகள் கண்டு
சிலிர்த்து சிதைந்தே காணுகிறேன்!

திடமான உள்ளத்தை தடுமாறச் செய்யும்
வண்ணத்தின் எண்ணத்தில் நாணுகிறேன்!

விளைவுகள் தரும் விபரீதம் அறிந்தும்
வர்ணனையாக பேசுகிறேன்!

அலுப்புத் தெரியாமல் துடுப்பு போடும்
மடிப்பில் என்னை பூசுகிறேன்!

சிந்தனை துளியையும் செதுக்கிய உளியையும்
சிற்பியின் கரத்தையும் வாழ்த்துகிறேன்!!



**கவிஞர் லீ**

தொடர் - 02

# மஹ்ஜபின்

## ஏரூர் நிலாத்தோழி



எப்படியாவது தனது மனதில் உள்ள மூன்றாண்டுக் கால காதலை மஹ்ஜபினிடம் சொல்லி விட வேண்டும் என்ற முடிவுடன் அன்றொரு நாள் அவளைச் சந்தித்து தனது காதலையும் நேசத்தையும் காத்திருப்பையும் சொல்லி முடித்தான் கஷ்வின். உடனே முடியாதென சொல்லிவிட வாயெடுத்த மஹ்ஜபினை ஒரு வருடத்திற்குள் தனக்கு எந்த முடிவும் சொல்ல வேண்டாம் என ஒரு கோட்டுக்குள் நிறுத்தி வைத்தான்.

மார்க்கத்தை மீறி காதலை ஹராமாய்த் தொடர அவனுக்கு விருப்பமும் இல்லை. மஹ்ஜபினை அவன் வற்புறுத்தப் போவதுமில்லை.

அவள் அவனது மூச்சுக்காற்றில் நிறைந்திருந்தாலும் அவளை விட்டு அவன் விலகியே இருந்தான்.

விலகி இருப்பதால் நேசத்தில் குறைவு உண்டானதென எந்த வரலாறும் சொன்னதில்லை.

அவளது முகம் அறியாத காலத்தில் அவள் தான் தன் மனைவியாக வரவேண்டும் என பிரார்த்திக்க ஆரம்பித்து காத்திருந்தவன் அவன்.

இன்னும் ஒரு வருடம் காத்திருப்பது என்பது அவனுக்கு அத்தனை சுமையில்லை. இறைவனிடம் பாரத்தை போட்டுவிட்டு அவள் சொல்லப்போகும் ஒரு வார்த்தைக்காக காத்திருந்தான்.

பட்டென ஒரு நொடியில் முடியாதென சொல்லி விட முடியாமலே இந்த ஒரு வருடமும் ஒரு வித அச்சத்தோடு கழிந்து சென்றது மஹ்ஜபினுக்கு

அவர்களது பல்கலைக்கழக வாழ்க்கை நிறைவுறும் தருணம் நெருங்க, நெருங்க மஹ்ஜபின் என்ன சொல்லப் போகிறாள்...

என்னிதயம் துடி துடிக்க இல்லையென்று சொல்லிப் போவாளோ என படபடத்தது கஷ்வினின் உள்ளம்.

சொல்ல வந்த விடயத்தை சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இதயச் சுமையினை யாரிடமும் இறக்கி வைக்கவும் முடியாமல் இந்த ஓரிரு நாட்களுக்குள் பாவப்பட்டு போய் நின்றாள் மஹ்ஜபின் .

பிரியாவிடை விழா ஆரம்பமானது.

சக மாணவர்களும் அவரவர் பங்கிற்கு ஏதோ ஒவ்வொரு நிகழ்ச்சிகளை நிகழ்த்திச் சென்றார்கள்..

சிலர் தங்களுடைய வாழ்க்கையை யும் கடந்து வந்த பாதையில் சந்தித்த தடைகளையும் தாண்டி சாதித்து நிற்பதை புன்னகையும் கண்ணீரும் மல்க கொட்டித் தீர்த்தார்கள்.. அடுத்து கஷ்வினுக்கான வாய்ப்பு வழங்கப்பட மேடை ஏறிய கஷ்வின் மஹ்ஜபின் சொல்லப் போகும் அந்த ஒற்றை வார்த்தையிலேயே நின்று தள்ளாடினான்.

''மஹ்ஜபின் உயிர் குடிக்கும்...
தேவதை..!!
என் ஆன்மாக்குள் ஒளிரும்
அசரீரி... மஹ்ஜபின்...!!!

புரியாத மொழியால்
என் புலன்களில் ஊடுருவிய
காற்று... மஹ்ஜபின்...!!!

ஏலேலங் காற்றில்
எழுத்து வைத்து செய்த...
குரலோ...?

வெட்டும் பார்வை...
என்னைத் தொட்டுச் செல்லும் .
சொட்டு மொழி கேளடி...

தரை மீது நிழல் தொடரக் கேளடி
விழியும் வழியும் மொழியும்
வேதாந்தம் மஹ்ஜபின்....!!!

என் தேசத் காற்றில்
விசாலித்து சுவாசிக்கும்...
இதயமே... மஹ்ஜபின்...!!!

இன்றேனும் சொல்லு கண்ணே...!!!
கண்ணிரண்டில் நான் தவழும்
கன்னி மொழிக் காதலை...
உன்னிரு உதடுகளால்...

''ஷாலினி... என்ன பழசெல்லாம் ஞாபகம் வந்திருச்சா...''

''இருக்காதா. எட்டு வருசத்துக்கு பிறகு இன்னைக்குத் தான நாம எல்லாரும் ஒன்னா கூடியிருக்கம்...''

திடீரென ரேணுகாவின் குரல் கேட்டதும், சுய உணர்வுகளுக்குள் மீண்டு வந்த ஷாலினிக்கு எல்லாம் இன்று நடந்தது போல் தான் இருந்தது. வருடங்கள் ஓடியதே தெரியவில்லை.

''யெஸ்... இங்க தான் நான் ரீஸாவையும்கடைசியாமீட்பண்ணினன்... எங்க இருக்கா... என்ன ஆனான்னு எதுவுமே தெரியாமலே இந்த எட்டு வருசமும் ஓடிட்டு... இன்னைக்காவது எனக்கு ஏன்ட ரீஸா திரும்ப கிடச்சிட மாட்டாளான்னு இருக்கு...''

எட்டு வருட ஏக்கம் எதிர்பார்ப்பு மஹ்ஜபின் என்ற கேள்விக்கு விடை தெரிய அவள் துடிக்கும் துடிப்பு அந்தந்தப் பொழுதுகளுக்குத்தானே தெரியும்.

''மெக்ஸிமம் நம்ம பெட்ச்ல எல்லா ரும் வாரதாத்தான் இன்பர்மேஷன் வந்திச்சு...சம்டைம்ரீஸாக்கும்மெஸ்ஸேஜ் போய் இருந்தா அவளால வராம இருக்க முடியாது... கண்டிப்பா வருவாள்...''

ரேணுகா எவ்வளவுதான் உறுதி யாக ரீஸா வருவாள் என நம்பினாலும் ஷாலினியின்மனமோ அவள்வரமாட்டாள் என அடித்துக் கொண்டது...

இன்று அக்கல்லூரியின் பவள விழாக் கோலம் காண, பழைய மாணவர்கள் அனைவரும் அழைப்பு விடுக்கப் பட்டி ருந்தார்கள். .அதன்படி ஒவ்வொரு வராக கல்லூரிக்கு வருகை தந்த வண்ணமே இருந்து கொண்டிருந்தார்கள்.

இந்த எட்டு வருடத்தில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும்

ஒவ்வொரு விதமாக மாறி இருந்தது. சிலர் குடும்பத்துடனும் சிலர் தனியாகவும் சில பெரிய தொழிலதிபர்களாகவும் உயர் அதிகாரிகளாகவும்... வெளிநாடுகளில் இருந்தும் பல பழைய மாணவர்கள் வருகை தந்திருந்தார்கள். ஆனாலும் ரீஸாவினுடையதும் கஷ்வினுடையதுமான வாழ்க்கையின் சுவாரஸ்யத்தை அறிந்து கொள்வதே விழாவுக்கான பலருடைய வருகையாகவும் இருந்தது.

ரீஸாவை அந்த டைரியை வாசிக்க விட்டிருக்கவே கூடாது அந்த டயரிதான் அவளுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றி விட்டது என்ற ஒரு வித உணர்வு ஷாலினியை விட்டு விலகாமல் இன்று வரை அப்படியே அவளுடைய உள்ளத்தைத் துளைத்துக் கொண்டே இருந்தது.

என்னதான் கஷ்வின் தன் மீது கொண்ட கபடமில்லாத தூய அன்பையும் நேசத்தையும் (ரீஸா) மஹ்ஜபின் புரிந்து கொண்டாலும் அவளுக்கு அந்த காதலில் நம்பிக்கை இல்லை .தனது திருமணத்தை பொறுத்த வரை அதை தனது பெற்றோரின் விருப்பத்திற்கே விட்டிருந்தாள்

இலைமறைக் காயாக இத்தனை நாட்களும் அவளை ஒளிந்திருந்து பார்த்த டயரி அப்போதுதான் அவளுக்கு முகம் காட்டுகிறது. பொருட்களோடு பொருட்களாக ஒதுங்கி கிடந்த டயரி அவள் கண்களுக்கு தென்பட்டது.

இதுவரை அவள் அந்த டயரியை திறந்தது கூட கிடையாது. தனது தாயின் ஞாபகமாக அந்த டயரியினை பல வருடங்களாக தன்னோடு பத்திரப் படுத்தி கொண்டு இருக்கிறாள்.

இதுவரை அதை திறந்து பார்க்கும் எண்ணம் அவளுக்கு வந்ததும் இல்லை. அதை அவள் பத்திரப்படுத்தியதோடு நின்று விட்டாள். இன்றுதானா அவளுக்கு அதைப் படிக்கும் எண்ணம் தோன்ற வேண்டும். விதி விளையாட ஆரம்பித்து விட்டால் யாரால் தான் என்ன செய்ய முடியும்.

டயரியை திறக்கிறாள் புன்னகை மாறாத தாயின் புகைப்படம் கண்டு முத்தமிட்டவள் முழுவதாய் அதற்குள் தொலைகிறாள். அவள் எந்த காதலில் நம்பிக்கை இழந்திருந்தாளோ அந்த காதலை மார்க்க வரையறைகளை கடக்காமல் அனுமதிக்கப்பட்ட அடிப்படை யில் இரு வீட்டாரின் சம்மதத்துடனும் தொடர்ந்த தாயின் கடந்த கால வாழ்க்கைக்குள் நுழைகிறாள்.

முகம் காணாமல் குரல் கேளாமல் தொடர்ந்த அந்த நேசத்தில் தன்னையும் அறியாமல் பறிபோனாள் மஹ்ஜபின். ‘அவர்... அவர்..’ என ஆரம்பான ஒவ்வொரு பக்கத்திலும் அளவில்லாத அன்பையும் ஈடு இல்லாத அக்கறைகளையும் கொட்டி தீர்த்த வரிகளை மனம் உவந்து ரசித்தாள்...

இந்தளவுக்கு அன்பால, தான் உம்மாவும் வாப்பாவும் எப்பவுமே சண்ட பிடிச்சுக் கூட பார்த்ததில்ல...

“ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சிகிட்டு விட்டுக் கொடுத்து வாழ்றாங்க... ரியலி க்ரேட்...” எண்ணிக் கொண்டவாறே பெருமூச்சிட்டாள்...

டயரியின் மிச்சம் மீதி உள்ள பக்கங்களை தொடர்ந்து புரட்டினாள். மகிழ்ச்சியால் அச்சிடப் பட்ட பக்கங்களில் சிறிதே கண்ணீரும் நிரப்பப்பட்டிருந்தது. அவளது தாய்க்குத் திருமணம் நிச்சயிக்கப் பட்டதால் அவளது உயர் தரப் படிப்பும் இடை நிறுத்தப்பட்டு வீட்டோடு அடை பட்டிருந்த அவளது தாய்க்கும் குடும்பத்தினருக்கும் பேரிடியாக வந்திறங்கியது அந்த செய்தி

தொடரும்

# வெற்றியை நோக்கி முயற்சி செய்

வெற்றியை நாம் ஒவ்வொருவரும் இலகுவில் அடைந்துகொள்ள முடியாது. ஆனால் உற்சாகத்துடன் தன்னம்பிக்கையோடு போராடி முயற்சி செய்தால் நிச்சயம் அதன் விடை வெற்றியாக தான் இருக்கும்.

தோல்வி கிடைத்தாலும் மனம் தளர்ந்து விடாதே! ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு வெற்றியின் முதல் கட்டம்.

வெற்றிக்கான முயற்சியில் நீ காலடி வைக்கும் அக்கணம் தான் பல தடைகள் நம்மை நோக்கி வீறு கொண்டு தாக்க முயற்சிக்கும்.

அதையெல்லாம் பொருட்படுத்தி நம் மனம் தளர்ந்தால் இப்போது பல்வேறு சாதனையாளர்கள் தோன்றி இருக்கவே முடியாது.

தோல்வி கிடைத்ததால் அதை முழுமனதுடன் ஏற்றுக் கொள்.

என்னுடைய முயற்சி போதாது என்று ஏற்றுக் கொள்.

இன்னும் நான் முயற்சி செய்யவேண்டும் என்ற மனநிலையை உருவாக்கிக் கொள்.

தன்னம்பிக்கை தான் என்னுடைய ஆயுதம் என்று உன் மனதுக்கு புரியவை.

தோல்வி என்பது முடிவல்ல வெற்றி என்பது இலகுவில் கிடைக்கப் போவதுமல்ல.

நீ முன்னேறும் போது தான் உன்னை குறை சொல்வதற்கு ஆயிரம் பேர் வருவார்கள் அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டு நம்முடைய வளர்ச்சியை அழித்து விடக்கூடாது .

போராடி தன்னம்பிக்கையோடு அவர்கள் முன் ஜெயித்துக் காட்டுவது தான் உண்மையான வெற்றி.

நீ வெற்றியை நோக்கி முயற்சி செய்கின்றாய் என்றால் உன்னுடைய அந்தப் பயணம் முடியும் போது நீ வெற்றி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் நீ அந்தப் பயணத்தை முடித்து விடக்கூடாது.

உன்னிடம் இருக்கும் திறமைகளை கொண்டு நீ முயற்சி செய் உனக்கான வெற்றி உன்னை தேடி வரும்.

ஒவ்வொரு தோல்வியும் ஒவ்வொரு வெற்றிக்கான தன்னம்பிக்கையே ஆகும்

பிறர் மீது நம்பிக்கை வைக்காமல் நீயும் உன் மீது நம்பிக்கை வைத்து தன்னம்பிக்கையுடன் போராடி முயற்சி செய் . நிச்சயம் மகிழ்ச்சி எனும் ஆயுதம் உன்னை வந்தடையும்...



ஷகீனா ஷாகிர்
ஹானி

# சிவகாமி பாட்டி

**அயாத் அக்பர்**

கவலையா ஒரு மூலையில் உட்கார்ந் திருக்கிற என்னை ஏன் ஒரு மாதிரியா பார்க்குறீங்க. என் பெயர் சிவகாமி. இந்த வீட்டில நான் தனியாத்தான் இருக்கேன். என்ன மறுபடியும் அப்படி பார்க்கிறீங்க. ஓ இதை வீடுன்னு சொல்லிட்டேனா? பத்தாயிரம் சதுர அடியில் கட்டி யிருக்கிற அரண்மனை, மாளிகை... நீங்கள் எதுவேண்டு மென்றாலும் நினைத்துக் கொள்ளலாம். எனக்கு மட்டும் இது ஒரு சாதாரண வீடுதான்.

என்னைப் பற்றி தெரிந்து கொள்ள மிகவும் ஆவலாய் இருப்பது போல் தெரிகிறது.

இந்த பாட்டியின் கதையை... குழந்தையிலிருந்து தொடங்குகிறேன். எங்களது பெரிய கூட்டுக்குடும்பம். எங்க அப்பா... அப்பா கூட பிறந்த மூன்று தம்பிகள்... தாத்தா பாட்டி... இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

எங்க வீட்ல பெண் குழந்தைகள் என்றால்... ரொம்ப பிடிக்கும். எங்க பாட்டிக்கு ஒரு பெண் குழந்தையும் பிறக்கல. நான்குமே ஆண்பிள்ளைகள்... நாலு பேருக்கும் கல்யாணம் ஆச்சு. மூன்று தம்பிகளுக்கும்... தலா இரண்டு ஆண் பிள்ளைகள். எங்க அப்பாவுக்கு... நான் ஒரே பெண். அதற்குமேல் குழந்தைகள் இல்லையா... எனக் கேட்கிறீங்களா?

நான் பிறந்த போது பிரசவத்தில் எங்க அம்மா... உயிர் போயிடுச்சி. ஆனா அந்தக் குறையே தெரியாமல் இருக்கிறதுக்கு எங்க சித்திகள் மூன்று பேரும்... மூன்று அம்மாக்களாக என்னை வளத்தாங்க.

எங்கப்பா எவ்வளவு வற்புறுத்தியும் இரண்டாவது கல்யாணம் செஞ்சுக்காம... என்னை தேவதைபோல் பாத்துகிட்டார். அப்பாக்களின் மீது இருக்கும் பாசம் பெண் பிள்ளைகளுக்கு மட்டுமே தெரியும் மாய உலகம்.

எங்க தம்பிங்க... என்னை காவல் தெய்வமாய் இருந்து... காப்பாத்தண எல்லை வீரனுங்க. இப்பேர்பட்ட பாசமான கூட்டுக் குடும்பத்தில் என் வாழ்க்கை கூண்டில் அடைக்கப்படாத பறவையாய் மிகவும் சந்தோஷமா போய்க்கிட்டு இருந்தது.

கல்யாண வயசு... வந்தது என்று சொல்லி... ஒரு பெரிய இடத்து வரன் என்ன தேடி கிட்டு வந்தது. நான் கல்யாணமே வேண்டாமென்று அடம் பிடித்தேன். என் சித்திகள், சித்தப்பா, தம்பிங்க, தாத்தா, பாட்டி, கடைசியா அப்பா... இந்த ஊரிலேயே யாருக்குமே கிடைக்காத பெரிய இடத்து சம்மந்தம் உனக்கு கிடைச்சிருக்கு. நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி அப்படி என்று திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தார்கள்.

என் திருமணம்... ஊர் திருவிழா மாதிரி ரொம்ப சிறப்பா நடந்துச்சு. பட்டணத்திற்கு போனேன்... அங்க என் மாமனார், மாமியார் கணவர் மட்டுமே. எங்க அத்தையும், மாமாவும் என்னை மருமகளா பார்க்கல மகளாகத்தான் பாத்தாங்க. சும்மா சொல்லக்கூடாது என்னை தாங்கு தாங்கு என்று தாங்கினார்கள்.

சொல்ல மறந்துட்டேனே... அந்த காலத்திலேயே அத்தையும், மாமாவும் காதலிச்சி கல்யாணம் செஞ்சவங்க. அதனால அவங்க ரெண்டு வீட்டு தொடர்பும் இவங்களுக்கு இல்லாமலே போயிடுச்சி.

எங்க குடும்பம் பெருசு என்பதினால... எங்க அத்தைக்கும், மாமாவுக்கும் ரொம்ப சந்தோஷம். அதனாலதான்... அவங்க வசதிக்கு நாங்க ரொம்ப குறைச்சலா இருந்தாலும் பெரிய மனசு பண்ணி என்னை அவங்க வீட்டுக்கு மருமகளா ஏத்துக் கிட்டாங்க.

என்ன இவ கல்யாணம் ஆனதி

லிருந்து... மாமனார் மாமியார் புராணமே பாடுற... புருஷன பத்தி ஒன்னுமே சொல்லல... அப்படி என்று தோணுதா உங்களுக்கு.

என்ன சொல்ல... அவர் தனிமை விரும்பி. பெரிய படிப்பெல்லாம் படித்திருக்கிறார். அவருக்கு கூட்டம் என்றாலே பிடிக்காது. அவருக்கு தேவையானபோது மட்டும் நான் இருக்க வேண்டும். மற்ற நேரங்களில்... வீட்டில் உள்ள எல்லாப் பொருள்களைப் போலத்தான் நானும்.

மாமனார் சம்பாதித்து வைத்திருக்கிற சொத்தே... இன்னும் மூன்று தலைமுறைக்கு வரும். இருந்தாலும் இவர் இன்னும் சம்பாதித்துக் கொண்டே இருக்கிறார். அதுதான் அவருக்கு அடையாளமாம்.

எங்க அப்பா வீட்டில எனக்கு தெரிஞ்சு கல்யாணம் ஆனதிலிருந்து அவர் இருந்தவரை ரெண்டு நாளைக்கு மேல அவர் தங்கனதே கிடையாது.

எங்க வீட்டில் தம்பிகளுக்கு கல்யாணம்... என்றால் கூட என் கணவர் வர மாட்டார். ஆனால் மாமனார், மாமியார் நான் ஒரு வாரத்திற்கு முன்பே ஊருக்கு சென்று விடுவோம். என் அத்தையும், மாமாவும் வாழ்க்கையில் பணத்தால் சம்பாதிக்காத மகிழ்ச்சியை... சொந்தங்களால் அடைந்து விட்ட முழு திருப்தி அவர்களின் முகத்தில் தெரியும்.

இதுவெல்லாம் என் கணவருக்கு சுத்தமாக பிடிக்காது. எங்கள் வீட்டிற்கு என் சொந்தங்கள் வந்தால்... வாங்க என்று கூட அழைக்கமாட்டார் ஒரு புன்சிரிப்போடு சரி. அதாவது செய்தாரே என்ற திருப்தியில் நான்.

இதற்கு நடுவில் நான் நான்கு மாத கர்ப்பம்.என் பெரிய தம்பி பிள்ளைகளுக்கு காது குத்து விழா. டாக்டர் கண்டிப்பாக என்னை பயணம் செய்யக்கூடாது என்று கூறிவிட்டார். நீ ஏம்மா வருத்தப்படுற... உனக்கு பதிலா நாங்க போயிட்டு வரோம்... அத்தையும், மாமாவும் கிளம்பினார்கள்.

என் வாழ்வில் சோகம் ஆரம்பமானது. அவர்கள் சென்ற வண்டி விபத்துக்குள்ளாகி அந்த இடத்திலேயே இருவரும் இறந்து விட்டார்கள். அந்த சோகத்தில் இருந்து

# ஹைக்கூ

●
ஊரடங்கு சட்டம்
வீதியோரங்களில் கூட்டமாக,
வளர்ந்த புற்கள்!

●
பரவும் தொற்று
இடைவெளி பேணாமல் நெருக்கமாக,
நெல் நாற்றுக்கள்!

●
சமூக இடைவெளி
சட்டப்படி பேணும்,
நட்சத்திரங்கள்!



●
மலர்கள் அணிந்திருக்கும்
முகக் கவசம்,
பனியின் தயாரிப்பு

●
ஊரடங்கு சட்டம்
வெறிச்சோடிக் கிடக்கிறது,
பட்ட மரம்!

●
பயணத் தடை
கடற்கரைக்கு வருவதும் போவதுமாக,
அலைகள்!

●
பயணத் தடை
விதித்தும் ஊர் சுற்றுகின்றன,
மலர்களின் வாசனை!

●
சமூக இடைவெளி
பேணாமல் ஒட்டி நிற்கின்றன,
நகரத்து கட்டடங்கள்!

- எம்.எல்.எம்.அன்ஸார்

மீளமுடியாத எனக்கு இன்னொரு இடியும் விழுந்தது.

என் அம்மாவும், அப்பாவும் இறந்த தற்குநீங்கள்தான்காரணம்.எந்தஒருசின்ன பங்க்ஷன் ஆனாலும்... என் பெற்றோர்கள் செய்யும் சீர் பணத்திற்கு ஆசைப்பட்டு அவர்களை அழைத்து அழைத்து... கொன்று விட்டீர்களே. இனிமேல் உங்க வீட்ல இருந்து யாரும் இந்த வீட்டிற்கு வரக்கூடாது. அப்படி அவங்க வந்தா நீயும் அங்கேயே போய்விடணும்.

கணவரின் சுடு சொற்கள் இரணமாய் உடலை சுட்டுக் கொண்டி ருந்தது. வாசற்படியில் என்னை பார்க்க வந்த என் அப்பா இந்தச் சொற்களை கேட்டுக் கொண்டிருந்தார் போலும்... என்னிடம் பேசாமலேயே திரும்பிச் செல்வதை அப்போதுதான் கவனித்தேன் நான்.

என் பிரசவத்தில் மகனும் பிறந்தான். அவன் வளரும் வரை... அவன்தான் என் ஒட்டுமொத்த சந்தோஷம். அவன் பள்ளி செல்லும் பருவம் வந்தவுடன். என்னிடம் இருந்தால் கெட்டு விடுவான் என்று கூறி அவனை ஹாஸ்டலில் சேர்த்து விட்டார். அவன் வரவுக்காக விடுமுறை காலம் எப்போது வரும் என ஏங்கி தவமிருந்தேன். இவர் வியாபாரம் என்னும் பெயரில்... வருடத்தில் 360 நாளும்... வீட்டில் தங்கியது கிடையாது. ஐந்து நாட்கள் மட்டும் தான். அதுவும் அவருக்கு உடல்நிலை சரியில்லாத நாட்களில் மட்டும்.

மகனை படிப்பதற்கு வெளிநாடு அனுப்பினார். இன்னும் என்னுள் வெறுமை குடிகொண்டது.

இந்த இடைப்பட்ட காலங்களில்... என் அப்பா, தாத்தா, பாட்டி காலமானார்கள். அங்கே செல்வதற்கு கூட எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஒரு நாள் என் கணவர் என்னை கட்டிப்பிடித்தார்.உனக்குநான்எவ்வளவோ துரோகம் செய்துவிட்டேன். நான் பணம் சம்பாதிப்பதுதான்... வாழ்க்கையென்று ஓடி ஓடி உழைத்தேன். அப்படி உழைத் ததன் விளைவு எனக்கு இரத்தப் புற்றுநோய்... என் நாட்கள் எண்ணப் படுகின்றன என்னை மன்னித்துவிடு. அவர் சொன்ன கடைசி வார்த்தைகள் அதுதான். வாழ்க்கை முடிந்த பிறகு என்ன நான் மன்னிப்பது.

அவரும் என்னை விட்டு சென்ற பிறகு. பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்பட வில்லை. கழுத்தில் இருந்த தாலிப்போய் ஒரு சாதாரண தங்கச் சரடு தொங்கியது அவ்வளவுதான்.

மகனை வெளிநாட்டிலிருந்து வரச் சொன்னேன். இங்கேயே எனக்கு நன்றாக இருக்கிறது. உனக்கு பணம் எவ்வளவு வேண்டுமோ சொல் நான் அனுப்பி வைக்கிறேன். நீ பத்திரமாக இரு அப்படி என்று ஆறுதல் கூறினான்.

நான் கேட்டது பணமா? இவனும் என்னை புரிந்து கொள்ள மறுத்தான். அங்கேயே ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு எனக்கு புகைப்படத்தை அனுப்பி வைத்தான். வாழ்க்கையில் பல மகிழ்ச்சிகளை இழந்த எனக்கு என் மகனின் திருமண மகிழ்ச்சியும் தொலைந்தது பெரிய வருத்தமாக தோன்றவில்லை.

சித்தப்பா, சித்திகளையாவது... பார்க்கலாம் என்று போனால்... அவர்கள் வயது முதிர்ந்து தனித்தனி குடும்பங்களாக பிரிந்து நடைபிணமாய்வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பலரின்இறுதிச்சடங்கிற்குவராததால்என்மீது அவர்களுக்கு உண்டான கோபம் இன்னும் குறைய வில்லை.அது பாசத்தின் வெளிப்பாடு என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அதை அவர்களுக்கு எவ்வளவு உணர்த்தியும் ஒரு பயனும் ஏற்படவில்லை.நான் பெரிய இடத்து மருமகள் ஆகிவிட்டதால் அவர்களை மறந்து விட்டேன் என்பது அவர்களின் வாதம். தம்பிகளுக்கும் திருமணமாகி வெவ்வேறு ஊர்களில் குடியேறி விட்டார்கள்.

நான்சிறியவயதாகஇருக்கும்போது வாழ்ந்த அந்த வீடு சுத்தமாக இடிந்து போயிருந்தது. வீடு மட்டுமா?

அதையெல்லாம்... கண்ட என் கண்கள் கலங்கிக் கசிந்தன. வண்டியில் வரும்போது... ஒரு மரத்தின் நிழலில்... பத்து பேர் கொண்ட ஒரு நாடோடி குடும்பம்... நாளை பற்றி கவலைப்படாமல் இன்றைய வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த மகிழ்ச்சி அவர்களின் பேச்சின் ஆரவாரத்தின் மூலம் வெளிப்பட்டது. அந்த ஒலி என்

காதுகளுக்கு தேன்வந்து பாய்வது போல பாய்ந்தது.

கூட்டுக்குடும்பங்கள் இன்று தனித் தனி கூடுகளாகின... ஏதோ... ஒரு பண்டி கைக்கும் திருவிழாவிற்கும்... சேர்ந்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது அதுவும் போய்... திருமணத்திற்கும், இறப்புக்கும் மட்டுமே என்றாகிவிட்டது.

நான் வாழ்ந்த அந்த அழகிய மழலை வாழ்வை எண்ணுகிறேன். என் மனத்தில் ஏதோ ஒரு சக்தி பிறக்கிறது. அதற்குள் வீட்டை அடைகிறேன். மறுபடியும் வெறுமை ஆட்கொள்கிறது.

அப்போது வேலைக்காரி ஸ்டோர் ரூமில் இருந்த எங்கள் கல்யாணத்தில் பிடித்த குடும்ப படத்தை துடைத்துக் கொண்டிருந்தாள். அந்தப் படத்திலிருந்த என் பாட்டியை என் கண்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தது. அதை பார்த்தவுடனே நடு வில் இருக்கிற பாட்டியா என்னை கற்பனை செஞ்சுகிட்டேன்... என்னை சுற்றி பிள்ளைகள், பேரக்குழந்தைகள்... என்னவோ பேரானந்தத்தை அடைந்த திருப்தி கிடைத்தது. முதல் முறைய ரொம்ப நாட்களுக்கு பிறகு என் உதடுகள் என்னை அறியாமல் சிரித்தது.

அந்த ஆனந்தம் கொஞ்ச நேரம்கூட நிலைக்கில... வெறிச்சோடிய இந்த வீட்டைப் பார்த்த பிறகு... என் கனவு கலஞ்சு போச்சு. வெறுமை மட்டும்தான்... எனக்கு தெரிஞ்சது. ஆனந்தம் என்பது... படத்திலயோ, இதைப் போல பெரிய வீடுகளிலோ... இல்லை... மனங்களில் இருக்கிறது... அன்பாய் இருக்கிறது... ஆதரவாய் அரவணைக்கிறது. அந்த வெளிச்சம் எனக்கு இந்த வயசுலயாவது கிடைக்குமா?

வேலைக்காரி கதவுகளை சாத்தி னாள். சிவகாமி பாட்டி படுத்தாள்.வேலைக் காரி சிவகாமி பாட்டியின் உடல் முழுக்க போர்வையைப் போட்டு மூடினாள்.

என் கண்களில் மட்டும்... அந்த குடும்ப படத்தை பார்த்த ஆனந்தம்... கனவாய்... காட்சிகளில் தெரிகிறது.

ஆனந்தத்தில்... கனவில் சிரித்துக் கொண்டே உறங்குகிறேன். ■

# புலிகள் நாங்கள்

இருபதாம் நூற்றாண்டுத்
தொடக்கத்தில் மிக இருந்தோம்

அருகிப் போனோமே
அற்பரின் செயல்களால்

யாம் வாழும்
வனத்தினுள் உயிர்கள்

யாவும் சேமமுற
வாழ்ந்திடும் என்றுமே

புல்வெளி சுருக்கிடும்
மான்களைச் சாப்பிட்டு

நல்லதோர் இயற்கைச்
சமநிலை பேணுகிறோம்

உணவுச் சங்கிலியின்
உச்சத்தில் நாங்க!

வளமான காட்டின்
குறியீடு நாங்களே!

நாடு செழித்திடவே
காடுகள் காத்திடுவீர்!


காசுக்கு ஆசப்பட்டு
காட்டை அழிச்சிட்டு

மாசினைப் பெருக்கி
மூச்சுக்குத் திணறி

கலங்குற நீங்க
கவலைகள் போக்கியே

நலமாக வாழ்ந்திட
இயற்கைச் சமநிலை
இனிதே காத்திடுவீர்!

**குளோரிசக்தி**
கரூர்



## கனவு பலிக்கும் காலம் வரவேண்டும்!

உலகம் நம்மைப் பணிய வேண்டும்!
உணவை நம்மிடம் பெற்றிட வேண்டும்!
கலகம் இல்லா உலகம் வேண்டும்!
கடிதில் உலகைச் சுற்றிட வேண்டும்!
உலவும் வேளை கவிதைகள் வேண்டும்!
உடன்வரும் மயில்களின் நடனம் வேண்டும்!
புலரும் காலை பொன்மழை வேண்டும்!
போதுமென மக்கள் கூறிட வேண்டும்!
வலம்வரும் தலைமை தாயாக வேண்டும்!
வாழ்வும் மடங்காய் உயர்ந்திட வேண்டும்!
துலங்கும் கலைகள் ஓங்கிட வேண்டும்!
தூய்மையில் நம்நாடு முதலிடம் வேண்டும்!
குலவும் மாசிலாக் காற்றும் வேண்டும்!
கொரோனாத் தொற்று ஒழிந்திட வேண்டும்!
நிலவைத் தொட்டு மகிழ்ந்திட வேண்டும்!
நீள்கடல் நீரில் தேன்சுவை வேண்டும்!
பலவாய் இலக்கியம் படைத்திட வேண்டும்!
பாரில் என்பெயர் நிலைத்திட வேண்டும்!
நலமும் வளமும் செழித்திட வேண்டும்!
நாட்டில் மதங்கள் இணைந்திட வேண்டும்!
மலர்கள் பேசிச் சிரித்திட வேண்டும்!
மண்ணில் உழவர் உயர்ந்திட வேண்டும்!
என் கனவினைக் கேள் நண்பா!
எதுவும் வெல்லும் உலகில் அன்பால்!
இன்றுள யாவும் என்றோ கண்ட
இனிய கனவின் நனவே அன்றோ!
வென்றிடுவோம் நாம் விடியல் கண்டு
வீரம் கல்வி துணையாய்க் கொண்டு!
கனவும் பலிக்கும் காலம் வருமே!
கைவசம் வானம் வசப்படும் பாராய்!



ஒசூர் மணிமேகலை
தமிழ்நாடு

# காத்துக் கிடக்கும் பள்ளிக்கூடங்கள்

குழந்தைகளின்
காலடிச் சத்தத்தை
தொலைத்து விட்ட
நின்று போன இதயமாக
பள்ளிக்கூடங்கள்!

சருகுகளை
உதிர்த்து விட்டு
புன்னகைத் தென்றல் வீசும்
வசந்தகாலத்திற்கு
காத்துக் கிடக்கும்
மரங்களாக
பள்ளிக்கூடங்கள்!

சுவற்றுக் கரும்பலகையில்
சுண்ணக்கட்டியில்
குழந்தைகள் கிறுக்க...
இருண்ட வானில்
நரம்பு புடைக்கும் மின்னல்
இன்றோ!
கிடக்கிறது
உணர்வற்று!

குழந்தைகள்
இல்லாததால்
மாற்றி மாற்றி
முகம் பார்த்து
வெறுத்துக் கிடக்கின்றன
பள்ளிக்கூட சுவர்கள்!

தூசி ஆடையணிந்த
கற்றல் உபகரணங்கள்
கைரேகைப்பட்டு
ஆடை துறக்க
தவங்கிடக்கின்றன

மரத்திலிருந்து
தலையில் விழுந்து
வரவேற்கும் பூக்கள்
தரையில் விழுந்து
ஏக்கத்தோடு எதிர்பார்க்கின்றன
குழந்தைகளை!

கூடு கட்டி
தொங்கி விளையாடும்
சிலந்திகள்
பட்டா கேட்காது
நிரந்தரமாக
குடி கொண்டன
வகுப்பறையில்!

ஈராண்டாக
எரியாத
சமையற்கூட அடுப்பால்
எத்தனை
பிஞ்சு வயிறுகள்
எரிந்து கொண்டிருக்கிறதோ
பசித் தீயில்!

மாய வலையில்
கைகால் கட்டப்பட்டு
குழந்தைகள்
கைதிகளாக
வீட்டுச் சிறையில்
ஆன்லைன் வகுப்பில்!

டேப்லெட்டுகளை
பெரியவர்கள் விழுங்க...
சிறியவர்களை இன்று
டேப்லெட்டுகள்
விழுங்கிக் கொண்டிருக்கின்றன

குழந்தைகளின்
வாழ்த்தொலிகளைக் கேட்காமல்
கவலையோடு
காத்துக் கிடக்கிறாள்
பிரார்த்தனை கூட்ட அறையில்
தமிழ்த்தாய்!

மணி ஓசையும்
மழலை ஓசையும்
தொலைந்து போன
பள்ளிக் கூடத்தின் வெளியே
கொரோனா
களவாடிச் சென்றுவிட்டது
கடை விரித்த
பாட்டியின் உயிரையும்!

கொரோனா
அலைகளைத் தாண்டி
குழந்தைகளின்
அலையைத் தொட
காத்துக் கிடக்கும்
பள்ளிக்கூட வாசலோடு
நானும்
திறந்தே வைத்திருக்கிறேன்
இமையையும்
இதயத்தையும்!

சா. கா. பாரதி ராஜா
செங்கல்பட்டு

# திருமண விருந்து




## இராம வேல்முருகன்
வலங்கைமான்


அன்று குணாவுக்கு திருமணத்துக்கு முந்தைய நாள். இணையருடன் சேரப்போகும் மறுநாளைக்கு முந்தைய நாள். தனித்தியங்கும் இளைஞர்களுக்கு விருந்தளிக்கும் நாள். ஆம் அன்று பேச்சிலர் பார்ட்டி எனப்படும் இளையோர் விருந்து நாள். தன்னுடன் படித்த நண்பர்கள் உடன் பணியாற்றும் தோழர்கள் அனைவரும் ஒன்றுகூடி கும்மாளமிடும் நாள். அனைவரும் குணாவின் அறைக்கு வந்தனர்.

“டேய் குணா என்னடா கல்யாண மாப்ளே எங்களை ஒன்னும் கவனிக்கலையா எவ்ளோ நேரம்டா வெயிட் பண்றது மணியைப் பாரு இப்பவே ஒன்பது ஆயிட்டு” என்று நண்பர்கள் சீண்ட குணாவுக்கோ தர்மசங்கடம் ஆனது.

இந்த மாதிரியான விருந்துகளில் மது ஒரு தவிர்க்க இயலாத இடம் பிடித்துவிட்டது. சமீப காலமாக நமது சமூகத்தில் தெரிந்தோ தெரியாமலோ மதுவும் ஒரு அங்கமாகி விட்டது. ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த மதுக் கடைகளெல்லாம் தற்போது தேநீர்க்கடைகளைப் போல எங்கும் பரவி விட்டது. பயந்து பயந்து ஒளிந்து ஒளிந்து மதுக்கடைகள் பக்கம் செல்வ தெல்லாம் இன்று கிடையாது. பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலேயே சாலை யோரமாக மது அருந்தத் தொடங்கி விட்டனர் இக்கால இளைஞர்கள். சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடு எதுவும் இன்றி மக்கள் மனத்தில் நீக்கமற நிறைந்து கிடக்கிறது இறைவனைப் போலவே. கடவுள் மறுப்பாளர்களைப் போல மதுஅருந்தாதவர்கள் ஒரு சிலரே.

குணாவும் அத்தகைய நபர் தான். மதுவென்றால் சுத்தமாகப் பிடிக்காது. அதற்காக அவனது நண்பர்களும் அப்படியா என்றால் இல்லை. அவர்களில் மது அருந்துபவர்கள் உண்டு. புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் உண்டு. கெட்டப் பழக்கம் இல்லாதவர்களும் உண்டு. சமுதாயம் அனைவரையும் உள்ளடக்கிய கலவைதானே.

கல்லூரி காலங்களில் மது அருந்தும் நண்பர்களுடன் விருந்துகளில் கலந்து கொண்டவன்தான். ஆனால் மது அருந்த மாட்டான். சிகரெட் பிடிப்பவர்களுடன் சென்றால் தனக்கு கடலைமிட்டாய் வாங்கித் தரவேண்டும் எனக் கேட்டுப் பெற்று விடுவான்.

“நீ ஆண்பிள்ளையாடா” என்று கேட்டவர்கள் உண்டு.

மது அருந்தி சிகரெட் பிடித்து “ஆண்பிள்ளையென நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை” என அவர்களிடம் பதிலுரைத்து விடுவான்.

கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு படித்தவன் குணா. கல்வி கல்வி கல்வியைத் தவிர வேறொன்றுமில்லை என்று கடமையே கண்ணாகக் கொண்ட

தனால்தான் பட்டப்படிப்பு முடித்தவுட னேயே போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று 23 வயதிலேயே வேலைக்கு வந்து விட்டான்.

வேலைக்கு வந்து நான்கு வருடங்கள் ஓடி விட்டன. அடுத்தடுத்து பதவி உயர்வு பெற வேண்டி துறைத்தேர்வுக ளெல்லாம் எழுதித் தேர்ச்சியும் பெற்று விட்டான். சரியான வயதில் திருமணம் செய்யவேண்டும் என அம்மா வற்புறுத் தியதால் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்து நாளை திருமணம் செய்யக் காத்திருக்கின்றான்.

நண்பர்களின் வேண்டுகோளை நிறை வேற்றுவதா வேண்டாமா என்ற குழப்பத்தில் அவர்களிடம் பேச ஆரம்பித்தான்.

''ஃப்ரெண்ட்ஸ் நீங்க நினைப்பது போல் மது விருந்து என்னால் தர இயலாது மன்னிக்கவும்'' என்றான்.

"என்னடா குணா பணத்தை மிச்சப் படுத்துகிறாயா" என்றான் கோபால். அவனது பால்ய காலம் முதல் நண்பனாக இருப்பவன். கொஞ்சம் வசதியான குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் இத்தகைய பழக்கம் அவனிடம் தொற்றிக் கொண்டதில் எந்தவிதமான ஆச்சரியமும் இல்லை.

"ஏன்டா குணா பணம் வேண்டு மானால் நான் தருகிறேன்டா பார்த்துக் கலாம்'' என்றான் ரவி. இவனும் இன்னொரு நண்பன். சொந்தமாகத் தொழில் செய்பவன். காசு கைகளில் எப்போதும் புரள்வதால் மதுப்பழக்கம் வந்ததில் ஆச்சரியம் இல்லை தான்.

''என்னதான்டா உன் பிரச்சினை? ஏன் தரமுடியாதுங்கறே?'' இது இன்னொரு நண்பன்.

ஆளாளுக்கு குணாவை பிய்த்து எடுக்காத குறைதான். கேள்விக் கணை களால் துளைத்து எடுத்து விட்டனர். ஆனால் எதற்கும் பதற்றப்படவில்லை. பொறுமை யாகவே பதிலுரைத்தான் குணா.

''இத பாருங்க ஃபிரெண்ட்ஸ், நான் எனது முடிவில் உறுதியாயிருக்கேன். அதற்கான காரணத்தையும் நான் சொல்லித் தான் ஆக வேண்டும். சொல்றேன்.'' எனப் பேச ஆரம்பித்தான் குணா.

''உங்க எல்லோருக்கும் அப்பா அம்மா ரெண்டு பேரும் இருக்காங்க. ஆனா எனக்கு அம்மா மட்டுந்தான் இருக்காங்க. தெரியும்ல?.'' என்றான்

''ஆமா தெரியுமே அது எப்படி தெரியாம இருக்கும்? நாம பத்தாம் வகுப்பு படிக்கும் போதேதான் உங்கப்பா இறந்து போய்விட்டாரே'' என்றான் கோபால்.

''எப்படி இறந்தார்னு தெரியுமா?'' கேட்டான் குணா.

''அதான் மஞ்சள்காமாலைன்னு சொன்னதா ஞாபகம் இருக்கிறது சரிதானே?'' எனக் கேட்டான் ரவி.

"ஆமா ரவி காரணம் மஞ்சள் காமா லைன்னு சொல்லப் பட்டது. ஆனா உண்மை யான காரணம் அது இல்லை. மதுதான் உண்மையான காரணம்.'' என்றான் குணா.

''என்னடா சொல்றே? குடியினால தான் உங்கப்பா இறந்தாரா?'' எனக் கேட்டான் கோபால்.

''ஆமாம்டா இந்தப் பாழாய்ப் போன குடிதான் எங்கப்பாவை எங்க குடும்பத்திடமிருந்து பிரித்தது. உங்க ளுக்குத் தெரியுமா எங்கப்பா ஒரு அரசு ஊழியர். அவர் பணியாற்றிய துறையில் கூட்டுறவு பண்டகசாலைப் பொறுப்பும் அவரிடத்தில்தான் இருந்தது. தினமும் காசு கைகளில் புழங்கும். மது அருந்தும் நண்பர்கள் அவரை மெல்ல அந்தப் பழக்கத்தில் இழுத்துத் தள்ளி விட்டனர்.

ஆரம்பத்தில் அவருக்கு இலவசமாக மதுவை வழங்கிப் பழக்கிவிட்டனர். அவரிடம் காரியம் சாதிக்கவும் அவரிடம் கடன் பெறவும் மது வாங்கிக்கொடுத்தனர். காலப்போக்கில் மதுவுக்கு எங்கப்பா அடிமையாகிவிட்டார்.

இந்த கெட்டப்பழக்கங்கள் ஆரம்பத் தில் சிலந்தி வலைபோல எளிதில் அறுக்கக் கூடியதாக இருந்தாலும் பிறகு அது அளிக்க முடியாத இரும்பு வலையாகி விடும் என்பது எங்க அப்பா விசயத்தில் உண்மை யாகிப்போனது.

ஒருநாள் கூட அவர் மது அருந்தாமல் இருக்க முடியாது என்ற நிலைக்குப் போனார். காலையில் எழுந்தவுடனேயே அவரது கைகால்கள் நடுங்க ஆரம்பித்து

விடும். மது உள்ளே சென்றால்தான் அவர் இயல்பு நிலைக்கே வருவார். மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுவிட்டார்.

பண்டகசாலைப் பணத்தை தன் விருப்பம் போல் செலவழிக்க ஆரம்பித்து விட்டார். இருப்புக் கணக்குப் பார்த்து தணிக்கை செய்த போது நிறைய தொகை அவர் அரசுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. அதனால் பணியிடை நீக்கமும் செய்யப்பட்டார்.'' மெல்ல குணாவின் கண்கள் கலங்கின. மேலும் தொடர்ந்தான்

''வீட்டில் வந்து அமர்ந்த பிறகு அவர் பணத்துக்காக எங்க அம்மாவை தொந்தரவு செய்ய ஆரம்பித்துவிடடார். அம்மாவின் நகைகள் ஒவ்வொன்றாக அடகுக்கடைகளுக்குப் பயணித்து அங்கேயே மூழ்கித் தொலைந்து போயின.

அப்புறம் அம்மாவை அடிக்க ஆரம்பித்து விட்டார். அம்மாவுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. வீட்டிலிருந்த அண்டாக்களும் குண்டான்களும் கூட எங்களைவிட்டு ஒவ்வொன்றாக பிரிந்து சென்றன எங்களது உறவினர்களைப் போல'' என்று சொல்லி நிறுத்தினான்.

''அடடா இதெல்லாம் எங்களுக்குத் தெரியாதடா. ரொம்ப சாரிடா.'' என்ற கல்லூரித்தோழனான சந்துரு ''இதெல்லாம் எங்களிடம் நீ ஒரு நாளும் சொன்ன தில்லையேடா ஏன்டா?'' என்று கேட்கவும் செய்தான்.

நமது எல்லா விசயங்களையும் சொல்ல முடியாதே சந்துரு. அதுவுமில்லா மல் நான் கல்லூரிக்கு படிக்க வருவதற்கு முன்பே எங்க அப்பா இறந்துவிட்டார். அதனால் அவரைப் பற்றி பேச இயலாமல் போய்விட்டது» என்றான் குணா.

''சரி அப்புறம் எப்படி உங்க அப்பா இறந்து போனார்?'' எனக் கேட்டான் சந்துரு. எப்படி என்பது கோபாலுக்கும் ரவிக்கும் தெரியும் என்றாலும் குணாவே சொல்லட்டும் என அவன் முகத்தைப் பார்த்தனர் இருவரும்.

''சொல்றேன்டா. தினமும் குடித்த தால் அவரது கல்லீரல் ரொம்பவும் பாதிச்சிடுச்சு. இந்த கல்லீரல் இருக்கு பாரு அது ஒரு அருமையான உறுப்பு எவ்வளவு அடிச்சாலும் தாங்கும் உறுப்பு. தனக்கு எவ்வளவு பாதிப்பு நேர்ந்தாலும் அதனை வெளிக்காட்டாது வாழும் தன்மையுடையது. பாதிப்பைக் காட்டிவிட்டால் அதனை சரி செய்வது ரொம்பக் கடினம். அப்படித் தான் எங்கப்பாவுடைய கல்லீரல் கெட்டுப் போனது. கூடவே குடல்புண் வேறு. மருத்துவமனையில் சேர்த்தோம். எங்க வீட்டை விற்றுச் செலவு செய்ய வேண்டியதாயிற்று. இருந்தும் குணமாக வில்லை. அவரைக் காப்பாற்ற முடியவில்லை. ஒருநாள் இந்த உலகைவிட்டே போய் விட்டார்.'' இப்போது அவனது கண்களில் கண்ணீர் வழிந்தது.

நண்பர்களுக்கு இப்போது தர்மசங்கட மாகி விட்டது. அடடா திருமணத்துக்கு முதல்நாளே நண்பனை அழவைத்து விட்டோமே என்று.

''சாரிடா குணா ஏதோ தெரியாம கேட்டுட்டோம்டா'' என்ற சந்துரு

''அது சரிடா குடியால் காலமானதை ஏன்டா மஞ்சள் காமாலைன்னு சொல்ல னும்?'' என்று அடுத்த கேள்வியையும் வைத்தான்.

அது சமூகத்துக்குப் பயந்துதான்டா. குடித்து விட்டுச் செத்தார் என்றால் இந்த சமூகம் சதா நம்மைத் தூற்றும். எனவே மஞ்சள் காமாலை என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டால் இந்த சமூகம் ஒரு பரிதாபப் பார்வை பார்க்கும் அதனால்தான் அவ்வாறு சொல்லிவிட்டோம் « என்றான் குணா.

''அப்புறம் நாங்க பட்ட கஷ்டம் சொல்லி மாளாது. கோபாலுக்கும் ரவிக்கும் தெரியும். பத்தாம் வகுப்பை எப்படியோ முடித்தேன். பதினொன்று பன்னிரண்டாம் வகுப்புகளில் படிக்கும் போது தினமும் மாலை வேலைகளில் ஹோட்டல் மளிகைக் கடைகளில் வேலைபார்த்து வந்தேன். எங்க அம்மா விவசாயக் கூலியாகச் சென்று சம்பாதிக்க வீட்டில் இருந்த பசுமாடும் எங்கள் பொருளாதாரத்துக்கு உதவியது.'' சொல்லிக் கொண்டிருக்கும் போதே உறவினர் ஒருவர் மணமகன் அறையை எட்டிப்பார்க்க , சற்றே நிறுத்தினான் பேச்சை;

வந்தவர் ஏதோ ஒன்றைத் தேடி

எடுத்துக்கொண்டு வெளியில் சென்றார்.

“யாரடா அவர்? அவர்பாட்டுக்கு வந்தார் அவர்பாட்டுக்குச் செல்கிறார்.” கேட்டவன் சந்துரு.

“அவர்தான் எங்க மாமா; அம்மாவின் தம்பி”

என்ன செய்றாரு?

“அவர் அரசுத் துறையில் அதிகாரியாக இருக்காரு; ரெவின்யூ துறை”

“அப்புறம் எப்படி கஷ்டப்பட்டதா சொல்றே”

“அதுவா இந்த உலகம் எப்பவுமே நாம கஷ்டப்பட்டா உதவாது; நல்லா இருக்கும் போது ஒட்டிக்கவும் மறக்காது. எங்கப்பா இறக்கும் போது ஏகப்பட்ட கடன்; அந்த கடனையெல்லாம் அடைக்க எங்க மாமாகிட்டே தான் கடன் வாங்கி அடைச்சோம். அதற்கு பதிலா எங்க அம்மாவுக்குச் சேர வேண்டிய சொத்தை ஈடாக வைத்துக்கொண்டதோடு எங்களுக்கும் அவருக்கும் ஒன்று மில்லைன்னு எழுதியும் வாங்கிக் கொண்டார்.

அதனால்தான் நான் கல்லூரியில் படிக்கும் போது மார்க்கெட்டிலும் மளிகைக் கடையிலும் வேலை பார்க்க வேண்டிய தாயிற்று.”

வேலைக்குச் செல்வதொன்றே எனது குறிக்கோளாக வைத்துப் படித்த தாலும் எங்கப்பாவுக்கான நிலை எனக்கு வரக்கூடாது என்ற கொள்கையும்தான் என்னை இந்த உயரத்துக்குக் கொண்டு வந்தது. எனது உறவுகளையும் திரும்பத் தந்தது.

எங்க அப்பா குடியினால்தான் அழிந்தார்; தான் அழிந்ததோடு தனது குடும்பத்தையும் நட்டாற்றில் விட்டுவிட்டுச் சென்று விட்டார்.

எங்க அப்பா இறக்கும் போது அவருக்கு வயது நாற்பதுதான். நாற்பது வயது இறக்கக் கூடிய வயதா? நமது நாட்டில்தான் இளைஞர்கள் அதிகம். வயதானவர்கள் அதிகம் இல்லை. இளம் வயதிலேயே இறந்துவிட்டால் வயதானவர்கள் எங்கே இருப்பார்கள்.

நாமாவது இருக்க வேண்டாமா ஃப்ரெண்டஸ். அதனாலதான் இந்த மாதிரியான வழக்கத்தை நிறுத்தி விடுவோம். இன்றைய நாள் அதற்கு நாம் எடுத்து வைக்கும் முதல் அடியாக இருக்கட்டும்.

முதல் அடியை நாம் எடுத்து வைப்போம்

நாம் செல்லும் பேச்சிலர் பார்ட்டிகளில் மது அருந்துவதை விட்டு விடுவோம். திருமண நாள் பிறந்தநாள் போன்ற அனைத்து விழாக்களிலும் மது அருந்துவதை விடுவோம் நம்மால் இயன்ற வரை மற்றவர்கள் மது அருந்து வதையும் தடுப்போம்.

என்ன ஃப்ரண்ட்ஸ் நாம முதல் அடியை எடுத்து வைப்போமா? என்று குணா கேட்க

அவனது நண்பர்கள் அனைவரும் சரிடா குணா அவ்வாறே செய்வோம் என்று சொல்ல அறைமுழுக்க ஒரு புதிய அலை பரவியது.

ஏதோ பொருளை எடுக்கவந்து குணா சொல்வதை மறைந்திருந்து கேட்ட அவனது அம்மா கண்களில் நீர்கசிய மகனை நினைத்துப் பெருமிதம் அடைந்தார்.

நாமும் குடியை விட்டொழிப்போமா?

■

## ஹைக்கூ

- துண்டு விரித்து
  படுத்திருக்கிறது
  விழுந்த சில்லறைகள்.

- ஷவரிலிருந்து
  தண்ணீர் கொட்டுகிறது
  இடியாப்பம் பிழிகையில்.

- ஒவ்வொன்றாய்
  தொட்டுப் பார்க்கிறார்
  எண்ணிப் பார்ப்பவர்.

- சாம்பார் இறக்கி வைத்த
  கரித்துணி முழுக்க
  மீன்குழம்பு வாசம்.

**- பா.சிவா**




உனக்கென தொடங்கிய
என் தேடுதல்களில்.,
அத்தனையும் கண்டேன்,
சுற்றங்களின் அர்த்தமற்ற
வசைகளில் அகராதியும்
அர்த்தம் தேடுகையில்
உன் பிம்பம் மட்டுமே
நிழலாடிய என் இமைகள்..,
வழிநெடுக நெடிதாய் வளர்ந்து
காய்த்த அரளிகளில்
சிலவற்றை எனக்குப் படையலிட்டு
உனக்கு வேடிக்கைகாட்டியதை..,
கூட்டங்களுக்கிடையே உன்முக
சுருக்கங்களில் பல சகிப்புகளை
உனக்குள் விதைத்து
நான்கடி தூரத்தில் நின்று
உள்ளுக்குள் புழுங்கியதை..,
கண்ணாடிகளுக்குள்
உன் முகத்தை உடைத்து உடைத்து
தனிமையில் ஒட்டவைத்து
ஒத்திகை பார்ப்பதை உணர்ந்தும்
சலனமற்ற பொம்மையாய்
நகரக் கற்றேன்..,
உன் காலங்களில் எல்லாம்
பாதியை அழுத்தங்களும்
மீதியை நானும்
பெற்றுக் கொண்டதில்
உன் தியாகத்தின்
விலை நிர்ணயிக்காமல்
எதைக் கொண்டு கூறுவேன்
காதலின் பங்களிப்பை..!

- கவிமலர் த.சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
கேரளம்.

## கொரோனாக் காலத்தில்

கொரோனாவை ஒழிப்பதற்கு
மாஸ்க் போடச்சொன்னால்
நாடியிலே அதைப்போட்டு
நல்வர்கள்போல் நடிக்கிறார்கள்.

பி.எச்.ஐ.மாரைக் கண்டால்
பாசாங்கு செய்கிறார்கள்
ஆமியைக் கண்டுவிட்டால்
பதறியடித்து ஓடுகிறார்கள்

மனைவியை ஏற்றிக்கொண்ட
வீதி வீதியாச்சுத்துகிறார்கள்
கொரோனாவை மறந்து
கும்மாளம் அடிக்கிறார்கள்.

கண்டபடி சுத்தித்திரிந்து
கடுப்பேத்தினர் ஆமிக்கு
பிரம்படி பட்டுங்கூட
ரோசம் இன்னும்வரவில்லை.

பிசிஆர் எடுக்கவந்தால்
பின்கதவால் ஓடுகிறார்கள்
தடிமல் காய்ச்சலென்றால்
தயங்கி நிற்கிறார்கள்.

பள்ளியும் மூடியாச்சு
படிப்பும் இல்லாமலாச்சு
பஞ்சமும் கூடிப்போச்சு
பசியும் நிரந்தமாச்சு.

கொடிய விஷமாகி
கொன்று குவிக்கும்
கொரோனாவை ஒழிப்பதற்கு
கொஞ்சமும் அக்கறையில்லை.

கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ.காதர்

# கருப்பு நிறமென்றால் பலருக்கு அலர்ஜிக்

## பஹ்ரியா பாயிஸ்

இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை உயிரங்கிகளும் அழகானவை. அதிலும் மனிதக் குல படைப்புகளிலே அனைத்து மனிதர்களையும் அழகாக இறைவன் படைத்துள்ளான்.

இன்று பலருக்கு கறுப்பு நிற மென்றால் அலர்ஜிக்காக அதாவது ஒவ்வாமையாக இருக்கின்றது.

இன்று குழந்தை ஒன்று பிறப்பது முதல், அப்பிள்ளையை திருமணம் முடித்து வைப்பது வரைக்கும் அவளை பல இடங்களில் (அவளை அல்லது அவனை) வெறும் நிறத்தை வைத்து அவர்களை ஒரு வித்தியாசமான இழிவான பார்வையில் பார்க்கிறார்கள். உதாரணமாக எடுத்துக் கொண்டால்...

''இப்ப பிறந்திருக்கிற பிள்ள வீட்ல எல்லார விடவும் கொஞ்சம் கறுப்பு''

''அந்த பிள்ள கொஞ்சம் கறுப்பு .இந்த டான்ஸ்க்கு சரிவராது''

''அந்த பிள்ள எல்லாம் நலம். ஆன கொஞ்சம் பிள்ளைட கலர் தான் கேஸ்'', ''பிள்ளை கொஞ்சம் கறுப்பு என்டதால கொஞ்சம் மேலதிகமாக ரொக்கம் குடுத்தால் பேசி முடித்து விடலாம்''

இப்படி பல கதைகள் சமூகத்தில் பேசப்படுகின்றது. முக்கியமாக ஆண்களை விட பெண்கள் இதில் பாதிக்கப்படுவது அதிகம்.இதனால் பெண்கள் சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கும், மனஅழுத்தங்களுக்கும் இயற்கையாகவே தள்ளப்படுகிறார்கள். மேலதிக ரொக்கம் கொடுத்தால் கறுப்பு நிறத்தை மறைத்து இல்லையில்லை மறந்து விடுவார்களாம். அப்போது பணம் என்பது இவர்கள் பெரிதாக பாரதூரமாக நினைக்கும் கறுப்பு நிறத்துக்கும் வெள்ளை நிறத்துக்குமிடையில் சமாந்திரக் கோடிட்டு இணைத்து விடுகிறதா என்ன?

இதையும் தாண்டி நம் சமூகத்தில் இன்னுமொரு கூட்டம், நீங்க இந்த கிரீமை (cream) ஐ வாங்கி பூசுங்க. சீக்கிரமா (quick) வெள்ளையாகுவீங்க என விளம்பர உத்திகளையும் கையாள்கிறதை என்னவென்று சொல்வதோ? இந்த கிரீம்களினால் (cream) ஏற்படுவது வெறும் நோய்கள் மட்டுமே.

ஏன் கறுப்பான மனிதர் அழகிலோ அறிவிலோ குறைந்தவர்களா? அவர்கள் நிறத்தில் என்ன குறைபாடு? ஏன் கறுப்பிலும் அழகு என்பது இல்லையா? விலைமதிக்க



முடியாத வைரம் கூட பூமியிலிருந்து தோண்டியெடுக்கையில், கறுப்பு நிறம்தான் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? வெள்ளை என்பது வெறும் நிறம்மட்டுமே.அதை மட்டுமே அழகென்று வரையறுப்பவர்கள் மனம் கறுப்பாக அதாவது இருளடைந்து தான் இருக்கமுடியும்.

உலகில் எங்கு தேடிப்பார்த்தாலும் கறுப்பு நிறத்தவர்கள் சாதனையாளர் பட்டியலில் நிறைந்திருப்பதைக் காணலாம். உலக அழகியென பெரும்பாலான மக்களால் புகழப்பட்டு, பெரும்பாலான ஆண்களின் கனவுக்கன்னியாகத்திகழ்ந்தகிளியோபாட்ரா கூட கறுப்பானவள்தான் என்ற உண்மையை எத்தனை பேர் அறிவீர்கள்? நிறம் எனப்படுவது ஒரு மனிதனின் அழகை நிர்ணயிக்கும் அளவுகோல் அல்ல.

வெள்ளை மனிதனுக்கும் கறுப்பு மனிதனுக்கும் இரத்தம் சிவப்பு நிறம் தான். உணர்வுகள் என்பதும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதே! கறுப்பு மனிதனுக்கு ஒருவிதமாகவும், வெள்ளை மனிதனுக்கு வேறுவிதமாகவும் உணர்வுகள் இருப்பதாக அளவீடுகளேதும் உள்ளதா என்ன? ஆகவே, நிறத்தில் உயர்ந்தவர்,தாழ்ந்தவரென எவருமில்லை. எல்லோருமே ஒரு இறைவனின் படைப்பில் உருவானவர்களே! இன்றைய நவீன விஞ்ஞான உலகில், கறுப்பு மனிதன்கூடத் தனைப் பார்த்து எள்ளி நகையாடும் மாந்தரைக் கருத்தில் கொள்ளாமல் ஆகாயத்தில், அண்டவெளியில், ஆழ்கடலில், அகிலத்தில் என எங்கு திரும்பினாலும் வரிசையாய் சாதித்து வருகிறான். நம்மில் ஒருசிலரோ ஒன்றுக்கும் உதவாத இந்த நிறவேற்றுமைக்கு மனதுள் உருவம் கொடுத்து ஊட்டி வளர்க்கிறோம். இனிவரும் காலங்களிலாவது தகுதியையும் தகைமைகளையும் நிறம் கொண்டு நிர்ணயிக்காது, தரம் கொண்டு நிர்ணயிப்போமாக!

■

# இருந்தும் இல்லாமை

பணம் இருந்தாலும்
அதை பயனுள்ளதாய்
பயன்படுத்தாமையும்
உடலில் ஆரோக்கியம் இருந்தாலும்
உன் வெற்றிக்கான முயற்சியை
மேற்கொள்ளாதிருப்பதும்

கவலைகள் சூழ்ந்து கொள்ளும் போது
உனக்கு நீயாகவேனும்
ஆறுதல் கூறாமல் இருப்பதும்
கண்ணீர் வருகையில்
துடைக்க உன்னிடம்
கை இருப்பதை மறந்து
பிறர் கைகள் துடைக்க
ஏங்கிக்கிடப்பதும்

உன்னிடம் சுயமாய்
சிந்திக்கும் திறன் இருந்தும்
அடுத்தவர் சிந்தனையில்
உன் வாழ்வை வாழ்வதும்
நேரத்தை உன்னுடன்
வைத்துக் கொண்டு
நேரமில்லை என புலம்புவதும்

உன் வாழ்வை தீர்மானிக்கும்
மிகப்பெரும் திறமை
உன்னிடம் இருந்தும்
என்னிடம் திறமை இல்லையென
புலம்பித் திரிவதும்

உன்னிடம் இருக்கும் திறமையை
பயன்படுத்தாது அடுத்தவர் உதவியை
எதிர்பார்த்து காலங்களை
கடத்தி விடுவதும் என
உனக்கான வாழ்வின் வெற்றிக்கு
உன்னிடமே எல்லாமும் இருந்தும்
எதையும் அறியாது
எதுவுமே இல்லையென புலம்புவதே
சில மனிதர்களின் புலம்பல்கள்

- மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி
இலங்கை.

"முயல் வளை"



# ரேபிட் ஹோல்

## Dr. ஃபஜிலா ஆசாத்

**(International Life Coach – Mentor – Facilitator)**

சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நீங்கள் கடைசியாக எப்போது கலப்படம் இல்லாமல் ஒருவரை பாராட்டி னீர்கள்?!

பாராட்டக் கூடிய விஷயத்திற்கு நிச்சயம் பாராட்டி தான் இருக்கிறேன் ஆனால் பாராட்டில் என்ன கலப்படம் இருக்கப் போகிறது எனக் கேட்கத் தோன்றுகிறதா..?!

பொதுவாக பலர் பாராட்டும் முறையே அலாதியானது. உங்கள் மகனை நேற்று பார்த்தேன். மிக நல்ல பையனாக இருக்கிறான். ரொம்ப அடக்கமாக தெரிகிறான். ஆனால் ஏன் இப்படி, எதைக் கேட்டாலும் தெரியாது என்கிறான். இன்னும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்க பையனுக்கு கத்து தரக் கூடாதா.. என்பது போல் போகும் சிலர் சொல்லும் பாராட்டு.

இன்னொரு வகையான பாராட்டு இருக்கிறது. யாரையேனும் மட்டம் தட்ட வேண்டும் என்றால், அவரிடம் வேறு ஒருவரை பாராட்டி ஒப்பீடு செய்து கூறுவது.

முதல் வகை பாராட்டை கேட்கும் அந்த தந்தைக்கு, தன் பையன் அடக்க மானவன் என்று பாராட்டப் பட்டான் என்ற எண்ணம் வருமா, அல்லது, சுறு சுறுப்பு இல்லாமல் இருக்கிறான். எதுவும் தெரியாதவனாக இருக்கிறான் என்று மற்றவர்களால் கணிக்கப் படுகிறான் என்று தோன்றுமா. நிச்சயமாக சுறு சுறுப்பு இல்லாமல் இருக்கிறான் என சொன்னது தான் மனதை அழுத்தும்.

இரண்டாவது வகை பாராட்டில், பாராட்டப் பட்டவருக்கு எந்த பலனும் இருக்காது. ஏனென்றால் அவர் பாராட்டப் பட்டதே அவருக்குத் தெரியாது. தவிர,

குறை கூறப் பட்டவருக்கு ஒருவரோடு ஒப்பிடு செய்து அவரை பாராட்டி இவரை மட்டம் தட்டுவதுபோல் பேசும்போது தன் குறையை சீர் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்தைவிட மற்றவரைவிட தான் குறைந்தவன்எனும்தாழ்வுமனப்பான்மையும் மனஅழுத்தமும் ஏற்படும். அது அவர் செயல்திறனை இன்னும் அதிகமாக பாதிக்கும். உறவிலும் விரிசல் விழும்.

கலப்படம் இல்லாத பாராட்டு என்பது ஒருவரின் நல்ல உணர்வுகளைத் தூண்டி விடவேண்டும். காய்ந்த மணலை யும் பதப்படுத்தக் கூடிய ஆதார நீராக இருக்க வேண்டும். எந்த பூட்டையும் திறக்கக் கூடிய சாவியாக செயல்பட வேண்டும். பாராட்டும் போது அதனுடன் எந்த எதிர்மறையான கருத்தையும் tag செய்யாமல் ஸ்பெஸிஃபிக்காக இருக்க வேண்டும்.

பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் திறமை மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இரண்டு பிரிவாக பிரித்து ஒரு ஆய்விற்கு உட்படுத்தினார்கள். இரண்டு பிரிவினருக்கும் ஒரே விதமான சில பணிகள் கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பிரிவினரை அவர்கள் செய்யும் செயல்களுக்காக இதமாக பாரட்டிக் கொண்டே இருந்தனர். மற்ற பிரிவினர் அதே செயல்களை இன்னும் சிறப்பாக செய்திருந்தால் கூட அதை கண்டு கொள்ளாமல் இருந்தனர். ஆய்வின் முடிவில், ஆரம்பத்தில் இருந்ததை விட பாராட்டப் பட்ட குழுவினரின் செயல் திறன் 50 சதவீதம் அதிகமாகி இருந்தது.

அதன் காரணம், ஒருவர் நேர்மறை வார்த்தைகளால் பாராட்டப் படும்போது அவருடைய மூளையின் ஒரு பகுதியான ஹைப்போதலமஸ்தூண்டப்பட்டு happiness harmone சந்தோஷ ஹார்மோன் எனப்படும் டோபமைன்(dopamine) சுரக்கிறது. அதன் காரணமாக மனம் மகிழ்ச்சியால் நிரம்புகிறது. அது அவரது செயல் திறனை மேலும் மேலும் அதிகரிக்கிறது என்கிறது அந்த ஆய்வு.

உங்களுக்கு தெரியுமா... பாராட்டக் கூடியவர் ஒருவரின் (Rabbit hole ) 'முயல் வளை' யாக இருக்கிறார் என்கிறது உளவியல். முயலையும், அதன் இருப்பிடமான 'முயல் வளை'யையும் பற்றி அறிந்திருப்பீர்கள். உங்களுக்கான முயல் வளையையும் நீங்களே பிறருக்கு 'முயல் வளை'யாக மாறுவதன் மூலம் நீங்கள் பெறும் மகிழ்ச்சியையும் பிறருக்கு உங்களால் கிடைக்கும் மகிழ்ச்சியையும் பற்றி அறிவீர்களா..

ஒருகுழந்தைதவறிகீழேவிழுந்தாலோ அல்லது யாரவது அதை மனவருத்தப் படுத்தி விட்டாலோ தாயின் மடியைத் தேடி தஞ்சம் புகும். அது அந்த குழந்தைக்கு பாதுகாப்பாகவும் இதமாகவும் மகிழ்ச்சி தரக் கூடியதாகவும் இருக்கும். அது போல ஏதாவது மனம் சஞ்சலப் படும்போது வருத்தமாக உணரும்போது, நமக்கான பாதுகாப்பான, மகிழ்ச்சியான, நிம்மதியான விந்தை உலகம் விரியாதா என ஏக்கமாக இருக்கும்.

ஏதாவதுஒருநூலையோபாடலையோ நல்ல நட்பையோ உறவையோ அதற்காக மனம் நாடும். அதில் மனம் மகிழ்ச்சியான உணர்வை பெறும். the last resort எனப்படும் பாதுகாப்பு உணர்வு தரும், புத்துணர்ச்சி அளிக்கும், அந்த உறவோ நட்போ பொருளோ எதைத் தேடி உங்கள் மனம் தஞ்சம் புகுகிறதோ, எது உங்கள் மனதில் இடம் பிடித்து உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை தருகிறதோ அதுவே உங்களது 'ரேபிட் ஹோல்' எனப்படுகிறது.

டெக்ஸாஸில் உள்ள அந்த ப்ரைமரி ஸ்கூல் டீச்சர் தன் வகுப்பில் உள்ள அத்தனை மாணவர்களின் பெயரையும் ஒரு பேப்பரில் கொஞ்சம் இடைவெளி விட்டு எழுதி அதை பல காப்பிகள் எடுத்து ஒவ்வொன்றையும் அத்தனை மாணவர்கள் கையிலும் கொடுத்து ஒவ்வொரு மாணவனின் பெயருக்குக் கீழும் அந்த குறிப்பிட்ட மாணவனிடம் உங்களுக்குப் பிடித்த, உங்களைக் கவர்ந்த மூன்று நல்ல விஷயங்களை எழுதுங்கள் என்கிறார். பின் ஒவ்வொரு மாணவனையும்

முன்னால் வந்து அவனைப் பற்றி மற்றவர் கள் எழுதியவற்றை சத்தமாக வாசிக்க சொல்கிறார்.

ஒவ்வொருவரை பற்றியும் மூன்று மூன்று நல்ல விஷயங்களாக முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் சொல்லியுள்ளதை வாசிக்க வாசிக்க ஒவ்வொரு மாணவனும் நெகிழ்ந்து போகிறான். அதோடு நிற்காமல் அந்த ஆசிரியை ஒவ்வொரு மாணவனிடமும் அவனைப் பற்றி மற்ற மாணவர்கள் சொன்னதை தொகுத்து அவனையே வாய் விட்டு சொல்லிக் கொண்டே ஒரு பேப்பரில் எழுதச் சொல்கிறார்.பின் அந்த பேப்பரை அவர்களிடம் கொடுத்து தினம் அதை ஒரு பயிற்சியாக வாசிக்க செய்கிறார்

அதை வாசிக்குக் போது, ஒவ்வொரு மாணவனுக்குள்ளும் தன்னைப் பற்றி மற்ற மாணவர்களுக்கு உள்ள சிறப்பான அபிப்ராயம் மகிழ்ச்சியை கொடுக்கிறது. அந்த சக மாணவர்களிடம் அன்பு பாராட்ட செய்கிறது. தன்னிடம் பாராட்டக் கூடிய இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா என தனக்குள் உற்று நோக்க செய்கிறது. மிகைப்படுத்தி சொல்லப் பட்டவகளை நிஜத்தில் அடையத் தூண்டுகிறது. அந்த வருடம் அந்த மாணவர்கள் அனைவரும் நல்ல மதிப்பெண்கள் பெற்று அந்த பள்ளிக்கே பெருமை தேடித் தருகிறார்கள். அந்த ஆசிரியை அந்த மாணவர்களின் 'ரேபிட் ஹோலாக' போற்றப் படுகிறார்.

அங்கு படித்த மாணவன் ஒருவன் பிற்காலத்தில் ராணுவத்தில் வீரசாகசம் புரிந்து நாட்டின் மிக உயர்ந்த விருது வாங்கும்போது தன் பர்சில் பத்திரப் படுத்தப்பட்டிருந்த ஒரு காகிதத்தை எடுத்துக் காட்டி, பள்ளியில் படிக்கும் போது சக மாணவர்களால் சூட்டப்பட்ட அந்த பதக்கமே இன்று தான் பெறும் இந்த பதக்கத்திற்கான மூலம் என்று தன் அன்பான ஆசிரியையை நினைவு கூறுகிறான்.

பிறரின் திறமைகளைத் தேடி பாராட்டக் கூடியவராகவும் நேர்மறை யான சிந்தனைகளும் சொல்லும் செயலும் மிக்கவராக இருந்து பாருங்கள். தன் 'ரேபிட் ஹோலாக' உறவும் நட்பும் உங்களைத் தேடி வரும். உங்களை சுற்றிலும் மகிழ்ச்சி மலரும்.

## மனப் பயிற்சி:

ஒவ்வொரு நாளும் உறங்க செல்லுமுன் அன்று நடந்த பாஸிடிவான சில விஷயங்களை நினைவு கூறுங்கள். உங்களுடைய உண்மை யான பலம் என்ன என்பதை உங்கள் மனதிற்கு அடையாளப் படுத்துங்கள். அடுத்து உங்களுக்கு உறுதுணையாக இருந்தவர்களை தினம் நினைவு கூறுங்கள் என மகிழ்ச்சியான மனநிலைக்கான பயிற்சியாக மூன்று விஷயங்களை முன் வைக்கிறது மனஇயல்.

பொதுவாக ஒருவருடைய மனம் தாழ்வான பகுதியை நோக்கி ஓடும் தண்ணிர் போல், பலகீனமான நேரம், இயலாமையாக உணர்ந்த விஷயம், போன்றவற்றிற்கு எண்ணங்களைக் கொண்டு சேர்த்து அதையே சுழற்றி சுழற்றி வர செய்யும்.

அது போல் எத்தனை பேர் உறு துணையாக இருந்தாலும் யாரவது ஒருவரால் காயப் பட்டிருந்தால் கூட அவரையே மனம் மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து தன்னை சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் சுயநலவாதிகள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விரக்தியை தரும். அது மற்றவர் களோடு சேர்ந்து செயலாற்ற விடாமல் தடுக்கும்.

தவிர, சிறு பிரச்னை என்றாலும் உங்கள் பலம் உங்கள் கண்ணுக்குத் தெரியாமல் செய்து உங்கள் பலகீனத்தை உங்கள் முன்னிறுத்தும். அதனால் அதற்கு எதிர்பதமாக இந்த மூன்று நேர்மறை விஷயங்களை ஒரு பயிற்சியாக தினம் செய்யப் பழகிக் கொண்டால் அது மனஅழுத்தம் வராமல் தவிர்க்கும். மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். ■

# அம்பாள்



கதையின் நாயகன் கோபாலகிருஷ்ணன்
கதையின் நாயகி லலிதா
மாமனார் சீதாராமன்
சிறுவன் அன்வர்
மற்றும் பலர்......




சுமதிசங்கர்
சென்னை


கோபாலகிருஷ்ணன் அலுவகத்தில் தன் செகரட்டரிக்கு லெட்டர் டிக்டேட் பண்ணிக் கொண்டிருந்தான்... அவனுடைய மொபைலில் அழைப்புப் பாடலுடன் காதலில் தீபமொன்றை ஏற்றினாளே என் நெஞ்சில்... அவனின் தர்மபத்தினி லலிதா தான்...

பைல்களுக்கு நடுவில் சிக்கியிருந்த மொபைலை எடுப்பதற்குள் கட்டாகி விட்டது... கோகி (கோபாலகிருஷ்ணனின் சுருக்கம்) அலை பேசியை பார்த்து தானாக பேசினான்... எடுக்கலைனா அர்ச்சனை, எடுத்தா லட்சார்ச்சனை தான் ...

செகரட்டரியை அனுப்பி விட்டு, மொபைலில் ரீக்கால் செய்தான் கோகி. அந்தப்பக்கம் ,உனைவிட இந்த உலகத்தில் வொசந்தது ஒண்ணுமில்ல பாடல்..... லல்லி (லலிதாவின் சுருக்கம், ரொம்ப பெரிய பெயர் பாருங்க. நல்லவேளை ஜலிதானு வச்சியிருந்தா ஜல்லினு கூப்பிடனுமோ) என்னம்மா கூப்பிட்டியா, செகரட்டரிக்கு லெட்டர் டிக்டேட் பண்ணிண்டு இருந் தேன்... அதானே போனை எடுக்காதப்பவே நெனச்சேன், ஈனு அவள பார்த்துண்டு இருந்தேளாக்கும்...(ஈனு பார்த்துண்டு இருந்தா வாயை திறந்து எப்படி டிக்டேட் பண்றது)

கோகி, லல்லி எதுக்கும்மா கூப் பிட்ட அதை சொல்லு என்றான்... மொதல்ல பர்மிஷன் போட்டுட்டு கிளம்பி வரேள்... உங்க அப்பா பண்ணியிருக்கற வேலையை வந்து பாருங்கோ... இந்த ஆத்துல ஒன்னு அவர் இருக்கனும் இல்லை நானிருக்கனும்... என்னம்மாச்சு என்று கோகி கேட்க, உங்க ஆபிஸ் பைலெல்லாம் மூட்டை கட்டி வைச்சிட்டு (அது என்ன துணியா) அரைமணி நேரத்துல இங்கிருக்கனும் என்று மொபைல் பேச்சை துண்டித்தாள் லல்லி...

பர்மிஷன் சொல்லிவிட்டு, அரக்க பரக்க தன் காரில் கிளம்பினான் கோகி... அரைமணி நேரத்துக்கு முன்பாகவே அபார்ட்மென்ட்ஸ் பார்க்கிங் ஏரியாவில் காரை பார்க் செய்துவிட்டு லிப்டை

கூட எதிர்ப்பார்க்காமல் மூன்றாவது மாடியிலிருக்கும் தன் பிளாட் முன் நின்று காலிங்பெல்லை அழுத்தினான்....

கதவை திறந்த லல்லி வந்துட்டீங்களா கோபால்ல் என சொல்வாங்கனு நீங்க நினைச்சா அதுக்கு நான் பொறுப்பில்ல...

மசமசனு நிக்காம டிபன் பாக்ஸை தேய்க்கப் போட்டுட்டு ரிப்பிரஷ் பண்ணிண்டு வாங்கோ காபி கலந்துண்டு வரேன் என்று சமையலறைக்குள் சென்றாள்....

கோகி ரிப்பிரஷ் பண்ணிண்டு ஹால் சோபாவில் காபிக்காக வெயிட்டு பண்ணான்.. சூடான காபி டபுள் சூடாக (கோபத்தின் கொதிப்பு) கொண்டு வந்து தந்தாள் லல்லி...காபி குடிச்சிண்டே கோகி கேட்டான் என்னம்மா பிரச்சனை உனக்கும் அப்பாவுக்கும்...

ஸ்வாமி ரூம் கிட்ட பாருங்கோ என லல்லி சொல்ல திரும்பி பார்த்த கோகி அங்கு ஒரு அம்பாள் சிலையிருப்பதை பார்த்தான்.. அருகே சென்றவன் சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்ணி, ஆஹா ஏது இந்த சிலையென கேட்டான்... அதை தொட போனவனை, தொடாதீங்கோ உங்க கைரேகை ஏதாவது பதியப் போறது என இழுத்தாள் லல்லி...

எப்படி லல்லி இது நம்மாத்துக்கு வந்தது என மீண்டும் கேட்டான்... சொல்றேன் இருங்கோ... இன்னிக்கு காத்தால உங்கப்பா பெசன்ட்நகர் அஷ்டலக்ஷ்மி கோயிலுக்கு போறேனு போனார்... கோயிலுக்கு போனமா, ஆத்துக்கு வந்து கிருஷ்ணா, ராமானு இருப்போம்னு இல்லாம பீச்சுல போய் நின்னிருக்கார். அங்க யாரோ குடுத்தானு தூக்கிண்டு வந்துட்டார்...

கோகி லல்லியை பார்த்து, இப்ப அப்பா எங்க என கேட்க.... ரூம்ல இருக்கார்... கூப்புட்டு கேளுங்கோ.. ஐயோ பாவமா மூஞ்சை வைச்சிண்டு வருவார் பாருங்கோ...அப்பாவை எதுவும் சொல்லாத லல்லி அவர் பாவம் என சொல்லிண்டே அப்பா அப்பா என அழைத்தான் கோகி...

கோகியின் அப்பா சீதாராமன்(அவர்



## கண்ணீரில் எழுதிய கவிதை

உடைபடும் அவசர
ஊர்திச் சத்தத்தில்
பெருமூச்சிடுகிறது
உயிர்ப் பறவை...

வெண்ணிற ஆடை
தேவதைகள் புடைசூழ்கையில்
சொர்க்கத்தின் நிழல்
கவிழ்கிறது அறைக்குள்...

கத்தியின் நுனிநாக்கு
கீறுகையில்
மரத்துப் போன
வலியால் விழியோரம்
கசிகிறது ஈரம்...

உதரம்பிளந்து
குருதியில் கரங்கள்
நனைந்து நிம்மதிச் சுவைத்து
'பொண்ணு பிறந்துருக்கா '

சொந்தக்காரங்க கிட்ட
சொல்லுங்க
உதிரும் மருத்துவரின்
வார்த்தைகள் உள்ளிறங்குகிறது
அரை மயக்கத்திலும்...

தொட்டிலில் கிடக்கும்
குழந்தையைத கட்டிலில் கிடத்தி
மார்பூட்டுகையில்
பிறவிப் பலனடைந்த
மகிழ்வில் வழிகிறது கண்ணீர்.,
கவிதையொன்று பசியாறுகிறது.

- கார்த்திகா

மனைவி சீதா இறந்தபின் வெறும் ராமனாகவே வாழ்ந்தவர்) ஊட்டி வரை உறவு பாலையா போல் ஒரு சால்வையை போர்த்திக் கொண்டு மெதுவாக நடுங்கியபடியே ஹாலுக்கு வந்தார்...

கோகி அவரை தன் பக்கம் அமர வைத்து ஏதுப்பா இந்த அம்பாள் சிலை என பொறுமையாக கேட்டான்...

சீதாராமன் நடந்ததை சொல்ல ஆரம்பித்தார்... கோயிலுக்கு போயிட்டு அப்படியே பீச்ல கொஞ்ச நேரம் நிக்கலாமேனு போனேன் பா...திரும்பி வரும் போது ஒரு பையன் இந்த சிலையை என்கிட்ட கொடுத்து, தாத்தா நேத்து நான் விளையாட வந்தப்ப இது கரையில் ஒதுங்கியிருந்தது... நான் இதை வீட்டுக்கு எடுத்துட்டுப் போனேன்... நாங்க முஸ்லிம் என்பதால் இதை வைத்துக் கொள்ள முடியாதுனு அம்மா கிடைச்ச இடத்திலேயே வைச்சிட சொன்னாங்க... இதை வைக்க தான் வந்தேன். உங்களை பார்த்தா ஐயர் தாத்தா மாதிரி தெரியுது... நீங்க எடுத்துட்டு போய் பூஜை செய்ங்க என்றான் அந்த பையன் அன்வர்... ஏன்பா அவன் சொன்னா நீங்க எடுத்துண்டு வரலாமா... போலீஸ் ஸ்டேஷன்ல போய் கொடுனு அந்த பையன்கிட்ட சொல்ல வேண்டியது தானே...

சொல்லாம இருப்பேனா கோகி... அதுக்கு அன்வர் சொன்னான்... அவங்ககிட்ட கொடுத்தா நம்மகிட்ட ஆயிரம் கேள்வி கேட்டு துளைச் செடுப்பாங்க.... நீங்க உங்க வீட்டுக்கு எடுத்துப் போய் பூஜை செய்ங்க தாத்தானு சொன்னான்... எனக்கும் இந்த சிலையை பார்த்ததும் சாட்சாத் அந்த லலிதாம்பிகையே நேரில் வந்து என்னை எடுத்துண்டு போய் பூஜை பண்ணேனு சொல்ற மாதிரியிருந்தது என ஈனஸ்வரத்தில் சொல்லி முடித்தார்...

கோகி அப்பாவை மெல்ல அரவணைத்து, அடுத்து தன் பகுதி யிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கும், ஊடகங்களுக்கும் போன் செய்து வரவைத்தான்... அவர்கள் அனைவரும் வந்தவுடன் விஷயத்தை கூறி அதை தொல்பொருள் ஆராய்ச்சி அலுவலகத்தில் ஒப்படைக்க சொன்னான்.

சிலைக்கு பக்கத்தில் நின்று போட்டோக்கு போஸ் கொடுத்த லல்லியை பார்த்து போட்டோகிராபர், மேடம் அம்மன் சிலைக்கு பக்கத்துல நீங்க நிக்கும் போது எது அம்மன் சிலைனு தெரியலனு ஒரு பிட்டை போட்டான்... அதில் பூரித்த லல்லி, அம்பாள் ஆத்துக்கு வந்தவுடனேயே அதுக்கு பாயசம் எல்லாம் செய்ததாக ஒரு உருட்டு உருட்டினாள்... கோகியும் , அவன் அப்பாவும் சிலையை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியானார்கள்...

அடுத்த நாள் பக்கத்து வீட்டு பிச்சுமணி, மாமா எல்லா பேப்பர்லயும் உங்கள பத்தி தான் போட்டிருக்கா என்று இரண்டு மூன்று பேப்பரை கோகி கையில் கொடுத்தான்... அதை வாங்கி பார்த்த கோகி மூர்ச்சையாகி சோபாவில் பொத்துனு விழுந்தான்...

ஏன்னா என்னாச்சு என்னாச்சுயென ஓடிவந்த லல்லி அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து தெளிய வைத்தாள்....

கோகி மூர்ச்சையானதற்கு காரண மென்னனு தானே யோசிக்கறீங்க... இதுதான்...

கொட்டை எழுத்தில் லல்லி (எ) லலிதா (வினுசக்ரவர்த்தி குருசிஷ்யன் படத்தில் இனிஷியல் ரொம்ப முக்கியம்னு மனோரமாவை சொல்ற மாதிரி, லல்லி ரொம்ப முக்கியம்) மாமியிடம் பீச்சில் வந்து சேர்ந்த லலிதாம்பிகை சிலை.... கமிஷனர் பாராட்டு என்று மற்ற விபரங்களுடன் லல்லி சிரித்தப்படி சிலையை பிடித்தப்படி போஸ் கொடுத்த மாதிரி போட்டோ... அடப்பாவிகளா இதுதான் சொல்வதெல்லாம் உண்மையா ஊடகங்களே என நினைத்து மயங்கினான்...

லல்லி கோகியை பார்த்து நாளைக்கு நாம இரண்டு பேரும் மெரீனா பீச் போவோமென கூற விட்டான் ஜூட் கோகி...

■

## வேதனை

இற்றுப்போய் ஏங்கும்
இதயத்தின் வேதனையை
முற்றும் அறிந்து
முகைசூடிப் - பற்ற
உளமில்லா மன்னவனே
உள்வெப்பம் தீர்த்துக்
குளந்தானே தாருங்
குளிர்.

**ஏடி வரதராசன்**



# மரணமென்பது நிச்சயம்

சவால்களின் வால்களை வெட்டி விடாதே நீ
மேலேறிச் செல்ல - அது உன்னைத் தாங்கிப் பிடிக்கலாம்

அழுகின்ற சந்தர்ப்பங்களில் அழுகையை அடக்கி வைக்காதே
தனிமையிலேனும் அழுதுவிடு மனச்சுமையாவது குறையட்டும்

சந்தர்ப்பங்களை நழுவ விடாதே அவமானப்பட நேர்ந்தாலும்
பயன்படுத்திவிடு அச்சங்களேனும் விலகட்டும்


அவமானங்களை மறந்து விடாதே அவைதான்
உன் உயர்விற்கு உயிர் கொடுக்கும்

ஏழ்மை தந்த ஏளனத்தை மறந்துவிடாதே
உன் வீண் செலவின் வீரியத்தை அது கட்டுப்படுத்தலாம்

பணம்தான் வாழ்க்கை என்று இருந்து விடாதே
பணம் இருப்பவனுக்கும் மரணம் உண்டு மறந்து விடாதே...

**- தீபா**

# நூல் மதிப்புரை
## கோ.லீலா




நூல் : பூரண பொற்குடம்
ஆசிரியர் : கவிஞர் பழநிபாரதி
விலை : ரூ 140/-
பதிப்பகம் : கொன்றை வெளியீடு

குளிர்கால அதிகாலையின் சூடான
தேநீரின் சுவையென என் கைகளில்
தளும்பி வழிகிறது இப்பெருவனம்.

எப்பெருவனம் என்போருக்கு
பூரண பொற்குடம் எனுமோர்
அடர்வனம் என்பேன்.

எங்ஙனம் நூலென்பேன் ?

நூறு கிளைநீட்டி
ஆயிரம் பூப்பூத்து
இலட்ச இலையசைத்தால்
எங்ஙனம் துயிலும் என் மனக்குருவி....

இப்படிதான் பிரபஞ்சமென
அசைந்துக்கொண்டே இருக்கிறது பூரண
பொற்குடம்...

அகத்திலிருந்து புறத்திற்கா,
புறத்திலிருந்து அகத்திற்கா என கவிஞரை
போலவே எனக்குமோர் மயக்கம்
தருகிறது இவ்வடர் வனம்.

சுவையான தேநீரை அழகிய
கோப்பையில் நுரை ததும்ப தரும்
அழகியலை ரசிக்கின்ற மென் ரசனைக்கு
ம.செ அவர்களின் ஓவியம் விருந்து...

அட்டைப்படத்தில் வான்நீலம் கடல்நீலம்
பெருக, தலைக்கோதும் சரக்கொன்றை
நிறம் பூசி மோன நிலையில் தாழ்திறவா
இமையோடு புறாவின் குனுகலில்
விரிந்திருக்கும் மலரென பூத்திருக்கும்
தேவி...
காண காண
ஆயிரங்கண்ணுடையாளாக அசைகிறது
என் ஆவி.

அடடா ! அவ்வளவு பேரழகு...

வனத்தினுள் நுழையும் சிலிர்ப்போடு

நுழைகிறேன்... கவிஞரின் சொற்கள்
வனத்தின் ஈரத்தை பச்சைய
நறுமணத்தோடு கசிய விடுகிறது.

முப்பாலில் மூன்றாம் பாலை
காதலென்று நான்கு வகை குணங்களிலே
நல்விருந்தாய் படைக்கிறது இந்நூல்...

காதலின் நினைவாய், தவிக்கும்
மொழியாய், மழையின் உணர்வாய்,
பிரிவின் துயராய் எதிலும் எங்கும்
இயற்கையின் கோப்பையில் காதல்
ரசத்தை ஊற்றி ஊற்றி தருகிறார்
பக்கத்திற்கு பக்கம்....

பூரண பொற்குடம் எது என என்னை
கேட்டிருந்தால் மரங்கள் நிறைந்த அடர்
வனம் என்றுதான் சொல்லியிருப்பேன்
என்பதை கவிஞர் பழநி பாரதி அறிவார்.

அதனாலேயே, பூரண பொற்குடம் என்
மனதிற்கு நெருக்கமானதாக இருக்கும்
என்பதையும் அறிவார்.

இயற்கையை காதலிப்பதும்,
காதலென்பது இயற்கை என்றுணர்ந்தும்
இயல்பாய் வாழும் பெருவாழ்வுதானே
பூரண பொற்குடம்.

அடடா ! ஒவ்வொரு கவிதையிலும்
உறைந்திருக்கும் படிமங்கள் வியக்க
வைக்கின்றன, சில படிமங்கள் மெல்லிய
புன்னகையை இதழிடையில் விரிய
செய்கிறது, சில ஆச்சரியமூட்டுகின்றன.

நவரசம் ஏந்திய படிமங்கள் கவிதை
தோறும் அசைகிறது அதில் குறியீடுகள்
முத்தாய்ப்பு ஆகின்றன...

படிமம், குறியீடு, முரண் சொல்
அத்தனையிலும் இயற்கையாய்
நறுமணமூட்டி வழிகிறது வசீகர காதல்.

காற்று வெளியிடையில் காதல் செய்து
நிலவூறி ததும்பும் விழிகளும் என்று
காதலியின் கண்களிலே நிலத்தை கண்ட
மகாகவியின் பாரதிக்கு ஒப்பு கவிஞர்
பழநி பாரதி எனில் அது மிகையல்ல.

✶

இறுகிய பாறையின்
ஈரக்கசிவை
கண்களறியாது கடந்து வந்தாய்

உன்னை பின்தொடர்ந்த
அதுதான்
இப்போது
உனக்குமுன் பூத்திருக்கிறது
ஒரு பனிமலராக

✶

இக்கவிதையில் மிளிரும் இயற்கையின்
பேரழகை வர்ணிப்பதா? கவிஞரின்
அவதானிப்பை போற்றுவதா? மறைந்து
கிடக்கும் அறிவியலை வியப்பதா?
அல்லது படிமத்தை கொண்டாடுவதா?

ஈரம் கசியும் பாறைகளின் பேரழகை
தினமும் ரசிக்க வாய்த்தவள் நான்....
ஒவ்வொரு முறை கடக்கும் போதும்
கல்லுக்குள் ஈரம் என வாய்விட்டு
சொல்லியிருக்கிறேன்.

அப்பாறைகளின் ஊடாக வசீகரிக்கும்
பெயர் தெரியாத பூக்களின்
மலர்ச்சியையும் கண்டு ரசித்து
இருக்கிறேன்.

இந்த மலைக்காட்சியில் இயற்கையின்
ஆட்சியை அனுபவிக்கலாம். அத்தகைய
காட்சியொன்றை விரித்திருக்கிறது
இக்கவிதை.

இக்காட்சியினை
அவதானித்த கவியுள்ளம்
போற்றுதற்குரியது.

நீரின் வழி ரகசியமானது... எங்கும்
பயணித்து, எதையும் கரைத்துவிடும்
இயல்புடைய நீரினை தன்னுள்ளும்
அனுமதிக்கும் பாறை என்பதும்...
பாறையிலும் பூ முளைக்கும் நீர் இருந்தால்
எனும் அறிவியலும் பொதிந்து கிடக்கும்
இக்கவிதை வியப்புக்குரியது.

இதில், வெறும் பாறையும்,நீரும், பூவும்
மட்டுமா தெரிகிறது.

இறுக்கமானவர் என்று அறியப்படும்
ஒருவரிடம், பாறையில் கசியும் நீரென

கசியும் காதலும், ஓசையின்றி கசியும்
பாறையின் ஈரத்தை கண்கள் அறியாது
கடந்துவிட...

கடந்து விட்டவரின் முன்பாக யாருக்கும்
மலர்ந்து விடாத ஒரு காதல் மலைப்பூவாக
மலர்ந்து இருக்கிறது என சொல்லும்
இக்கவிதையின் கவித்துவமும்,
பன்முகத் தன்மையும் ஒரு வசந்தத்தின்
நறுமணத்தை வாசகன் மீது தூவுகிறது.

✶

அன்பிலான எதையும்
அகழ்வாயாதே

✶

எவ்வளவு ஞானம் நிறைந்த வாழ்வியலை
சுமந்து நிற்கின்றன இவ்வரிகள்.

அன்பினால் உலகளப்பவருக்கே
தோன்றும் இவ்வரிகள்.

அகழ்வாயாத பெருமனமுடையவர்
கவிஞர் என்பதை உணர்ந்தோர்
உணர்வர்.

அறம் சார்ந்து வாழும் உன்னத கவிஞன்
என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று
வேண்டும்...

✶

சிறு இறகைப் புறக்கணித்தாலும்
உன் நினைவெளியெங்கும்
குறுக்கும் நெடுக்கும்
நிறையும் பறவைகள்

✶

இக்கவிதையில் கவிஞன் என்பதை
கடந்து ஒரு உன்னத மனிதனாக உயர்ந்து
நிற்கிறார்.

✶

அசையும் செங்கனிகள்
மௌனமாக ஒலிக்கின்றன
வானத்து மணிகள்

✶

இக்கவிதை அடர்வனத்துள் இயல்பாக
ஹைக்கூவின் இசை கசிந்தபடி
இருக்கிறது

வானத்து மணிகள் ஒப்புமை புதிது....
யாரும் சொல்லாத சிந்தனை.

✶

ஓரிலை தத்தளிக்கிறது
உன் இதயத்தின்
திரைச்சீலையாக

✶

பிறர் அறியாது மறைக்கும்போது
தத்தளிக்காத இதயம் ஏது
திரைச்சீலையான இலை இனிமை.

கவிஞர் ஒரு பறவையினளராக
வனத்தில் சிறகு விரித்து தேன்சிட்டாக,
மாம்பழச்சிட்டாக, கொண்டலாத்தியாக,
உழவாரக் குருவியாக உலா
வருகிறார்... நம்மையும் விரல் பிடித்து
அழைத்துக்கொண்டு...

இனி வரும் சமூகத்துக்கு பறவைகளின்
பெயர் தாங்கிய பூரண பொற்குடம்
போதும் காடறிய.

மகாநதியைப் போல கிளைபிரியும்
வழியைக் கண்டு புல் அசைய பூ மலர
தாழ்வாரக் காற்றில் அகங்குழைய
நின்றது தினைக்குருவி மட்டுமல்ல
நானும்தான்...

ஒரு வாசகனை குருவியாக்கி விடுகிற
பெருங்காடு பூரண பொற்குடம்.

கோடிட்டு காட்ட கோடி இருக்கிறது,
எனினும் அத்தனையையும் சொல்லிவிடல்
முறையன்று... சொல்லாமல் செல்வதும்
முடியாத ஒன்று...

தினைக்குருவியாக நிற்கதான் வேண்டும்
சிறிது நேரம்.

✶

இடம்விடுவது போல
அதற்குச் சற்றுமுன்
உதிர்கிறது
ஓரிலை.

✶

ஆகா ! வனத்தின் சமன்நிலையை
பாடுகிறது...
கூடவே காத்திருத்தலின் நீளத்தை
எவ்வளவு நாசூக்காக சொல்கிறது
கவிதை.

உதிரும் இலைக்கு இத்தனை அழகை
சேர்க்க முடியுமா? என வியக்க
வைக்கிறது.

இலையை பறவையாக, பறவையை
இலையாக கண்ட காட்சிப்பிழை
கணங்கள் தவறில்லை என
தோன்றுகிறது.

✶

அந்த மலைவஞ்சியை
கண்ணுற்றபொழுது
:
:
:
அவளின்றி அமையாது காடு

✶

பெண் எனும் பெருவனம் வளர்த்து
பசுந்தழல் சுடர ஞானம் மிளிர்கிறது
கவிதையெங்கும் பச்சைய நறுமணம் வீசி.
கூந்தலருவி அழகிய ரசனை.

✶

எழுத
எழுத
ஓயவில்லை மழை
கனியின் வட்டத்திலிருந்து மலரின்
விளிம்பில்
மலரின் விளிம்பிலிருந்து இலையின்
நேர்கோட்டில்
சரிந்து
உயிர் தளும்பும் துளிகளை
முத்தத்தின் நகரும் படிமமாக்குகிறாய் நீ

சொற்களற்ற மழையில் சடசடவென
பொழிகிறது
கவிதை

✶

அட ! மழை நழுவும் காட்சி முத்தத்தின்
நகர்வு என்பது ரசனையின்
உச்சமல்லவா...

இதில் உள்ள படிமத்தை விளக்க
வேண்டுமோ... புரிந்து ரசித்து
படியுங்கள்... ஒரு மெல்லிய புன்னகையை
உங்கள் வானின் ஓயாத மழை
பரிசளிக்கும்.

✶

நீருளிகள் செதுக்கும்
நின்னழகுக்குப் பூ நீட்டி பாறைக்குள்
உறைந்திருக்கிறான்
கல்தச்சன்.

✶

அடடா ! யாரும் சிந்திக்காத சிந்தனை...
எவ்வளவு அவதானிப்பு,
கையாண்டிருக்கும் உத்தி மலைக்க
வைக்கிறது.

கற்பனையின் வற்றாத ஜீவநதியென
மிளிர்கிறது கவிதையின் வனப்பு.

✶

கூழாங்கல்லை எடுத்தபோது
வேண்டாம்
தண்ணீரிலிருந்து
அதைப் பிரித்துவிடாதே
ஒவ்வொரு கல்லும்
ஒரு காதல் என்கிறாய்

அப்போது
உன் பாதங்களை
மீன்கள்
முத்தமிட்டுக்கொண்டிருந்தன

✶

கனிவில் கனிந்த ரசனை.

✶

மலரற்ற
காம்பின் பாலில்
வழிகிறது
நீயற்ற
தனிமை

✶

ஒரு பிரிவின் ஏக்கத்தை உணர்த்த
இதைவிட வலிமையான உவமை
உண்டா ?

காதலின் மனநிலை காண்பவற்றில்
எல்லாம் அதையே காணுமன்றோ.

✶

நீரற்ற போதும்
இந்தக் கோப்பையில்
வரையப் பட்டிருக்கும் மீன்கள்
அங்கேயே நீந்திக்கொண்டிருக்கின்றன
நெடுநேரமாக

✶

நீரற்ற போதும் அங்கேயே நீந்திக்
கிடக்கும் மீன்கள்...

ஆகா ! நல்லதொரு ஹைக்கூவிற்கான
காட்சி விவரணை.

எனினும், நீரற்ற போதும் கண்ணீரில்
கயலாக நீந்தும் துயரினை சுமந்த
கோப்பை...

காதல் ஒரு முறை நிரப்பிவிட்ட பின்
அக்கோப்பை வெறுமையாவதே
இல்லை....

நினைவோ, தவிப்போ, உணர்வோ,
பிரிவோ ஏதோ ஒன்று அவளிடம் காற்று
வடிவம் பெற்றதை போல வடிவம்
கொண்ட காதலால் நிரம்பி வழிந்துக்
கொண்டேயிருக்கிறது கோப்பை.

✶

அன்பு இருத்தலுக்கும்
இல்லாமைக்குமிடையில்
அலையும்
ஒரு மாசற்ற சுடர்

✶

அந்த சுடரில் மின்னி மிளிர்கிறது பூரண
பொற்குடம்.

காதல் இலக்கிய வரிசையில் தொன்மமும்
நவீனமும் கைகோர்த்த பூரண பொற்குடம்
என்றென்றும் முதலிடத்தில் வேர்விட்டு
நூறு கிளைநீட்டி
ஆயிரம் பூப்பூத்து
இலட்ச இலையசைக்கும்
அழகிய பிரபஞ்சமாக.

வாசிப்போரின் மனதில் எல்லாம்...

வாழ்த்துக்கள்

---

அன்பானவர்கள் அனைவருக்கும் ...

முயற்சிகள் கொரோனாவால் பலமுறை தடைபட்டு முடக்கப்பட்ட நிலையில் எப்படியும் இப்போதாவது சிறப்பான குடும்பப்பொறுப்பை நழுவவிட்டுவிடக் கூடாதென்ற எண்ணத்தில் எனது மகன் ஃபரிதுக்கு இல்லற வாழ்வின் இணைவிழாவை ஏற்பாடு செய்து குறிப்பிட்ட நாளில் (21.08. 2021) விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. இங்கே பிரான்ஸிலும் அதிகமானவர்களை அழைக்க முடியவில்லை. வெளிநாட்டிலிருக்கும் எனது உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மணவிழா செய்தியை அறிவிக்கவில்லை. காரணம் உலகமே கதிகலங்கி நிற்கும் வேளையில் இனியசெய்தியைக்கூட சொல்லிக்கொள்ள மனம் இணங்கவில்லை. என்னை உணர்ந்தவர்கள் என்னை நிச்சயம் மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கையுண்டு. வந்திருந்தோர் வாழ்த்தளித்தோர் அனைவருக்கும் நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

## என்னைத்தான் பார்க்கவில்லை!

காசு பணம் சரி பார்த்தேன்
நகை நட்டு சரி பார்த்தேன்
சொத்து சுகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

பட்டி தொட்டி சரி பார்த்தேன்
பற்று பாசம் சரி பார்த்தேன்
பங்கு பாகம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஆட்டம் பாட்டம் சரி பார்த்தேன்
தோட்டம் துரவு சரி பார்த்தேன்
அக்கம் பக்கம் சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

ஊர் உலகம் சரி பார்த்தேன்
உறவு முறை சரி பார்த்தேன்
வரவு வரை சரி பார்த்தேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

நடந்து வந்த பாதையிலே
கடந்து வந்த பயணத்திலே
எத்தனையோ பார்த்துவிட்டேன்
என்னைத்தான் பார்க்கவில்லை!

– முனைவர் மு. அ. காதர்
சிங்கப்பூர்

## ஈர நினைவுகள் ... !

தொப்புள்கொடி உறவென்று
நினைத்திருந்தேன் .
அறுத்தெறிந்துவிட்டுப் போய்விட்டாய்
என் ஆத்மாவையும் சேர்த்து ... !

துணை கிடைத்ததும்
தூரமாகி விடுவாய் என்று
தெரிந்து வைத்திருந்தேன் . ஆனால் ,
விண்ணிலிருந்து எரி கற்களைப்
பொறுக்கி எறிந்து
என்னை நொறுக்கிவிட்டுப் போவாய்
என்று எதிர்பார்க்கவில்லை ...

ஊன்றுகோலாக வராவிட்டாலும்
பரவாயில்லை
ஏன் ஊனமாக்கிவிட்டுப் போகிறாய் !

நான் வாங்கிக்கொடுத்த
விளையாட்டு பொம்மைகளை
பத்திரமாக வைத்துக்கொண்டு
என்னை மட்டும்
பழைய பண்டமாய்
தூக்கியெறிந்து விட்டு
ஒப்பாரி வைக்க செய்து விட்டாய் ...
என்னை உயிரோடு புதைத்துவிட்டு ... !

சிந்திப்போன உயிரை
பொறுக்கி எடுத்துக்கொண்டு
முதியோர் இல்லமொன்றின் மூலையில்
உன்னைப்பற்றி முடிந்து வைத்த
பழைய நினைவுகளை
அடிக்கடி அவிழ்த்துப் பார்க்கிறேன் ...

உனக்காக நானன்று
வானவில்லை வளைத்து
மாலை போட்டபோது
என்னைக் கட்டியணைத்து
முத்தமழை பொழிந்தாயே ...
அதுபோன்ற ஈர நினைவுகளுடன்
என் இறுதி நாட்களை
கடத்தி விடுவேன் ...!

– மரீனா இல்யாஸ் ஷாபீ
New Zealand

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

# கவிதைகள்

இதில் ஏதோ ஒரு சாயல்
இருக்கத்தான் செய்கிறது
இரசாயனக் கலவைகளில் தோய்த்து
புதிய உத்தியில் பிறப்பெடுத்து
மாறுபட்ட வடிவம் கொண்டவை
போலியானவை எப்போதும்
கண்ணைக் கவரும்
வண்ணம் தீட்டிய ஓவியம்போல்
எண்ணங்களைக் கவர்ந்தாலும்
மெல்ல மெல்ல எதிர்ப்பாற்றலின்
வீரியத்ததைக் குறைத்து
நமது இயக்கங்களுக்கு
தடுப்பணை கட்டுகின்றன
சாயலில் அசலைப்போல் இருப்பினும்
உணர்ந்துகொள்வோம்
நம்மைச் சாய்க்க வந்தவை
இந்த மரபணு மாற்றிய
உணவுப் பொருட்கள்

•••

எத்தனை முறை
வெட்டுப்பட்டாலும்
துளிர்க்கிறது முருங்கை.
வீசி எறிந்த விதைப்பந்து
மலைச்சரிவுகளில்
உருண்டபோதும்
முளைத்தெழும் ஆற்றலில்
முனைப்பு காட்டுகிறது.
இலைகள் அனைத்தையும்
இழந்தபின்னும்
துளிர்க்கும் தளிர்களில்
முகம் கண்டு சிரிக்கின்றன
சாலையோர மரங்கள் !
நலமிழந்து மீண்டெழுந்த பின்னும்
மனமே..தொய்வின்
அடையாளங்களைத் தழுவாது
உற்சாகப் படிகளை
உனதாக்கிக் கொள் ...
உள்ளங்கையில் உள்ளது
உலகம் !






ப்ரியமே...
நட்புக்கே நீ பெருமையடி
என் நெஞ்சத்தில் நீ பேருவகையடி..

விடைபெற்றன பழகிய பொழுதுகள்
விலகிச் சென்றன அழகிய விழுதுகள்.

ஆனாலும் ப்ரியமே..
உனதான நினைவுகள்
இன்றும் இனிக்கின்றன

இதயத்தில் இடம் பிடித்தவளே..
தடம் மாறிச் சென்றாலும் நட்பு
தன் தடமழித்துச் செல்லவில்லையடி
நட்பு பிரிவென்றாலும்
அன்பு குறையாதடி

விதி வரைந்த பாதையிலே
விழி நீரும் கசிகிறதே
ஒரு போதும் வெறுப்பில்லாத
உன் நினைவுகள் நிலைக்கின்றதே

நீ விதைத்த நேசங்கள்
நிழல் போல தொடர்கிறதே
நிஜம் தொலைத்த இந்நாளில்
மனதோடு மணக்கிறதே

உன் நினைவு மறப்பதற்கில்லையடி
நீ மனதோடு தினம் தினம்
ஜனிக்கும் ஓர் உறவானாயடி

- மக்கொனையூராள்

# தவம் செய்வோம் !

முனைவர் ப. கற்பகராமன்

தவம் செய்தல் என்பது மனைவி மக்கள்முதலியசுற்றத்தாரைத்துறந்துகாட்டில் சென்று தனிமையில் மேற்கொள்ளும் செயல் அல்ல. அன்றாடம் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் தவமே. ஒரு செயல் தூய்மையாகச் செய்யப் படும்போது அதுவே தவமாகின்றது. அத்தூய்மையைச் செய்யும் அனைத்துச் செயல்களிலும் கடைபிடிக்க வேண்டும். அவ்வாறு கடைபிடித்தோமானால் தவத் தினை நிதம் புரியலாம்.

அறிவு மேம்பட்டு, நல்லது கெட்டது எது என்று அறியாத குழந்தைப்பருவத்தில் நாம் செய்யும் அனைத்துச் செயல்களும் பலராலும் விரும்பப்படுவதாகவே அமை யும். ஏனென்றால் அந்நேரத்தில் மனம் எந்தவித கலப்படமுமின்றித் தூய்மையாகக் காணப்படும்.

பல்வேறு கலப்படங்கள் நம்முடைய மனதில் வந்துசேர உண்மைக்கும் போலிக் கும்கூட வித்தியாசம் காண இயலாமல், போலியை நோக்கியே செல்லும் நிலை உருவாகின்றது. இதனாலேயே நம்முடைய சுயத்தைக்கூட பிறருடைய போலியைக் கொண்டே வெளிப்படுத்தும் நிலையில் உள்ளோம். இந்நிலை மாற வேண்டுமானால் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் தூய்மையான மனத்துடன் தவம்போல் இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்குப் பெற்றோராக வாழும் வாழ்வில், அவர்களுடைய எண் ணங்களுக்கு வடிவம் கொடுங்கள். ஏற்றங்களுக்கு ஏணியாயிருங்கள், அவர் களுடைய பார்வைகளுக்குக் கண்களா யிருங்கள், அவர்களுடைய கனவுகளுக்குக் காகிதங்களாக இருங்கள். இதன்மூலம் பெற்றோர் பணியையே தவமாகச் செய்யலாம்.

மனைவிக்குக் கணவனாகவோ கணவனுக்கு மனைவியாகவோ வாழும் வாழ்வில், நெற்றிக்குப் பொட்டாக இருங் கள், கூந்தலுக்கு மணமாக இருங்கள், கற்புக்குக் காவலாக இருங்கள், தோற்பதில் முதன்மையாக இருங்கள், உணர்வுகளுக்கு உண்மையாக இருங்கள், உள்ளத்தருகில் உரிமையாக இருங்கள். இதன் மூலம் கணவன் மற்றும் மனைவி பணியையும் தவமாக மேற் கொள்ளலாம்.

பெற்றோருக்குப் பிள்ளையாக வாழும் வாழ்வில் முதலில் அன்பைக் காட்டுங்கள், வளர வளர இன்பத்தைக் கொடுங்கள். இறுதிவரை உங்கள் கூடவே அரவணைத்துச் செல்லுங்கள். மறைந்த பிறகும் மனக்கோயிலில் வணங்குங்கள். இதன் மூலம் பிள்ளை என்ற செயலிலும் தவத்தினை மேற்கொள்ளலாம்.

நல்ல நண்பர்களாக வாழும் வாழ்வில், தெளிவான புரிதலுக்கு இடம் கொடுங்கள், நட்பிலும்கற்பினைப்போற்றுங்கள்,நல்வழிப் படுத்துவதில் போட்டிப் போடுங்கள். இதன் மூலம் நண்பனாக வாழும் போதும் தவத்தினை மேற்கொள்ளலாம்.

பணிசெய்யும் இடத்தில், கடமையை கருத்தாகச் செய்யுங்கள். உங்க ளுக்கான இடத்தைக் கருவறைபோல் புனிதமாக்குங்கள், செய்யும் தொழிலைத் தெய்வமாகப் போற்றுங்கள், உங்களுக்கு மேலிருப்பவர்களைமேன்மையாகஉணருங் கள், கீழிருப்பவர்களுக்கு ஏணியாக மாறுங்கள், இணைந்திருப்பவர்களுக்கு இன்பத்தைப் பகிருங்கள். இதன்மூலம் பணி செய்யும் இடத்திலும் தவத்தினை மேற் கொள்ளலாம்.

இதனைப்போல எந்தவொரு பணி யையும் கலப்படமில்லாமல், தூய மனதுடன் செய்யும்போது அப்பணியே தவமாகின்றது. எனவேதவம்செய்வதுஎன்பதுஅனைத்தையும் துறந்து, தனிமையில் மேற்கொள்வது அல்ல. மாறாக, அனைத்தையும் அருகில் இணைத்துக் கொண்டு பரிசுத்தமான மனநிலையில் மேற்கொள்வதே ஆகும். எனவே நாள்தோறும் செய்யும் அனைத்துச் செயல்களையும் பரிசுத்த மாகச் செய்வதன் மூலம் தவத்தினை நிதம் புரி வோம். ■

# அப்பாவும் சிகரெட்டும்



பாலகுமரன் பரிதி
மன்னார்குடி

அப்பாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் சிகரெட் வாசம் அடிக்கிறது. ஆம் அப்பா சிகரெட் புகைப்பார்.

சிகரெட் பிடிப்பது என்றால் எல்லோரும் போல அவசர அவசரமாக இழுத்து அரைகுறையாக பாதியிலேயே சிகரெட்டை கீழே போட்டு மிதித்து செல்வதைப் போல் இருக்காது. அப்பா சிகரெட்டை ரசித்து புகைப்பார்!

சிறுவயதிலிருந்தே அப்பாவுக்கு சிகரெட் வாங்கி வருவது நான்தான். சிகரெட் மட்டுமல்ல வெத்தலை சீவலும் கூட. அப்பா வெத்தலையை எடுத்து காம்பை கிள்ளி வெத்தலையின் இருபுறமும் சுண்ணாம்பை தடவி சீவலுடன் மடித்து வாயில் போடுவார் அதை மென்று கொண்டே சிகரெட் பிடிப்பார். வெற்றிலை மென்று சிகரெட் பிடிக்கும்போது வரும் சிகரெட் வாசம் வேறு மாதிரி இருக்கும்.

அப்பா சிகரெட் பிடிக்க கால அட்டவணை வைத்திருப்பார் என எனக்குத் தோன்றும். ஏனென்றால் தொடர்ந்து புகைத்துக்கொண்டே இருக்க மாட்டார் அதற்கென்று நேரம் இருக்கும். காலை எழுந்தவுடன் கழிவறைக்குச் செல்லும் போது சிகரெட் உடன் செல்வார் பிறகு டீ குடித்துவிட்டு செய்தித்தாள் படித்துக் கொண்டே சிகரெட் பிடிப்பார் பின்னர் சாப்பாட்டுக்கு பிறகு ஒரு சிகரெட் எப்போதெல்லாம் டீ குடிக்கிறாரோ அப்போதெல்லாம் சிகரெட் எப்போதெல்லாம் சாப்பிடுகிறாரோ அதற்குப்பிறகு ஒரு சிகரெட் சிலநாட்களில் நள்ளிரவு வேளைகளில் தூக்கமின்றி ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டு புகைத்துக்கொண்டு இருப்பார்.

வெளியில் செல்லும்போது சிகரெட் பிடிப்பதற்கு அப்பா சில இடங்களை தேர்வு செய்து வைத்திருந்தார்.

நான் அர்பன்பங்கு தொடக்கப் பள்ளியில் படித்த போது பள்ளி முடிந்து என்னை சைக்கிளில் அழைத்துக்கொண்டு காளவாய்கரை வழியாக புதிய வீட்டு வசதி வாரியம் நோக்கி வருவோம். அப்போது வழக்கமாக ஒரு கடையில் நிறுத்தி அவருக்கு சிகரெட்டும் எனக்கு தின்பண்டங்களும் வாங்கிக்கொண்டு இப்போது இருக்கும் SBA ஸ்கூல் அருகே உள்ள பெரிய புளியமரம் (அந்த மரம் இப்போது இல்லை) அருகே சைக்கிளை நிறுத்தி என்னை சைக்கிளில் உட்காரவைத்து விட்டு சிகரெட் புகைத்து விட்டு மீண்டும் சைக்கிளை மிதிப்பார்.

இருசக்கர வாகனத்தில் நானும் அப்பாவும் திருவாரூர் நோக்கி செல்லும் போது சவளக்காரன் அருகே மரங்கள் சூழ்ந்த இடத்தில் சாலையோரத்தில் வண்டியை நிறுத்தி சிகரெட் புகைப்பார். அதுவே திருத்துறைப்பூண்டி நோக்கி சென்றால் தட்டான் கோயில் பாலத்திற்கு முன்னர் சாலையோர மரத்தடியில் சிகரெட் புகைப்பார். கும்பகோணம் சென்றால் நீடாமங்கலத்திற்கு முன்னே சாலையோர மரத்தடியில் சிகரெட். உள்ளிக்கோட்டை நோக்கி சென்றால் மேல நாகை அருகே நாவல் மரத்தின் கீழே சிகரெட்.இப்படி எல்லா திசைகளிலும் அவருக்கென்று சில மரங்கள் இருந்தன.

அவர் நினைத்தால் சிகரெட் வாங்கிய கடை வாசலிலேயே பற்ற வைக்கலாம் ஆனால் அப்படி செய்ய மாட்டார் ஏனென்றால் அப்பா ரசித்து புகைப்பவர்!

ஏன் இப்படி குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி சிகரெட் பிடிக்கிறீர்கள்? என நானும் கேட்டதில்லை அவரும் சொன்னதில்லை.

அப்பா ஆசிரியராக இருந்தார் பள்ளியில் புகை பிடிக்க மாட்டார், பணிபுரியும் பள்ளி அமைந்துள்ள ஊரில் புகை பிடிக்க மாட்டார் என அப்பாவின் நண்பர்கள் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். கொள்கையாக கூட இருக்கலாம்.

ஒருமுறை அப்பாவுக்கு தொடர் இருமல் மருத்துவரை சந்திக்க சென்றிருந்தோம் மருத்துவர் அப்பாவிற்க்கு நண்பர் என்பதால் "நீங்க எதுக்கும் டிபி டெஸ்ட் எடுத்துடுங்க" என்றார் மருத்துவர் அப்போதிலிருந்தே அப்பாவுக்கு பதற்றம் தொற்றிக்கொண்டது. டிபி டெஸ்ட் கொடுத்தோம் நெகட்டிவ் என ரிசல்ட் வந்தது அப்பாவுக்கு அளவில்லாத சந்தோஷம். வெளியில் வந்தவுடன் பெரியாஸ்பத்திரி எதிரே உள்ள டீக்கடையில் டீ குடித்துவிட்டு சந்தோசமாக சிகரெட் பிடித்தார்.

மீண்டும் மருத்துவரிடம் சென்றோம் ''எனக்கு டிபி இல்லைன்னு சொல்லிட் டாங்க'' என்றார் அப்பா.

''சரி சார் எதுக்கும் ஒரு தர ஸ்கேன் எடுத்து பார்த்து விடுவோம்'' என்றார் மருத்துவர். அதற்கு நிதானமாக «டாக்டர் 20 வயசுல சிகரெட் பிடிக்க ஆரம்பிச்சேன் 40 வருஷமா பிடிக்கிறேன், நீங்க ஸ்கேன் எடுத்துப் பார்த்தால் கருப்பா தான் தெரியும், அதனால ஒரு டானிக் எழுதிக் கொடுங்க» என சிரித்துக் கொண்டே சொன்னார்.

அப்பா சிகரெட் பிடிக்கக்கூடாது என அம்மா சண்டை போட்டதாக எனக்கு நினைவில்லை. நான் ஆசீர்வதிக்கப்பட்ட குழந்தையாக இருக்கலாம் போல ஏனென்றால் அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டு நான் பார்த்ததில்லை. அவர்களுக்கிடையே சண்டையே வராதா இல்லை எனக்கு முன்னால் சண்டை போட மாட்டார்களா எனத் தெரியவில்லை.

பணி ஓய்வு பெற்ற பிறகு

# நிரந்தரமில்லா வீட்டு முகவரி

எங்களுக்கானதொரு வீட்டு முகவரி
இப்போது வரை
நிரந்தரமில்லை...

எங்களுக்கான பயணங்களை
இப்போது வரை
நீட்டிக்க முடியவில்லை...

எங்களுக்கான தொழிலை
நிரந்தரமாக்க முடியவில்லை...

எங்களுக்கான அரசியல்
எதுவென தெரிந்தும்
எடுத்து பேச இயலவில்லை...

ஏதோ உண்ணுகின்றோம்
எதையோ உடுத்துகிறோம்
உறக்கமில்லாமலே உறங்கியதாக
கடந்து போகின்றோம்
ஒவ்வொரு இரவையும்...

வேலிகளில்லாத வளையத்திற்குள்
கூர் ஆணிகள் குத்திடாதவாறு
நெரிசலில் உலாவுகின்றோம்...

எங்களுக்கானதொரு நாடு
இப்போது வரை இல்லாததால்தான்
எப்போதும்
விலங்கு பூட்டப்படாத
கண்காணிப்பில் இருக்கிறோம்...

**- சோலச்சி**
புதுக்கோட்டை

அப்பா பொழுதுபோக்கிற்காக பின்லே மைதானத்திற்கு எதிரே ஒரு பெட்டிக்கடை வைத்தார். பேருக்குதான் கடை ஆனால் அப்பாவிற்கு அவரே வாடகைக்கு பிடித்துக்கொண்ட தனியறை என்று கூட சொல்லலாம். புத்தகங்கள் படிப்பார் ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார் நண்பர்களை கூட்டி இலக்கியம் பேசுவார் இடையிடையே சிறு சிறு வியாபாரங்களும் நடக்கும்.

கடை வைத்து பிறகு அப்பா சிகரெட் பிடிக்கும் அளவு குறைந்தது ஒருநாள் விளையாட்டாக “என்ன இப்பெல்லாம் சிகரெட் பிடிக்கிறது இல்லை?” என்று கேட்டேன். அதற்கு அப்பா ஒரு சிகரெட் பெட்டி எடுத்துக்காட்டி «இதுல பத்து சிகரெட் இருக்கும்டா பத்தையும் வித்தா ஒரு சிகரெட் விலை நமக்கு லாபம் அதையும் நானே குடிச்சிட்டா நட்டம் ஆயிரும்ல» என்றார் பரம்பரை வணிகர் போல.

பொங்கல் தினத்தில் வழக்கம் போல எங்கள் குடியிருப்பில் இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது அப்போது அப்பாவிட மிருந்து அழைப்பு “சிகரெட் வாங்கி கொடுத்துட்டு போடா» என்று அதுதான் அப்பா என்னிடம் கடைசியாக பேசியது. அப்போது நான் நிகழ்ச்சியை ஒருங் கிணைத்துக் கொண்டு இருந்ததால் உடனே நண்பன் உதயனிடம் சிகரெட் வாங்கி கொடுக்க சொன்னேன் “நான் அவனிடம் சொன்னால் உன்னை அனுப்பி இருக்கிறானா?” என அவனிடம் என்னை கடிந்து கொண்டாராம்.

நான் கல்லூரியில் சேர்ந்த புதிதில் ஒரு நாள் வழக்கம் போல அப்பாவிற்கு சிகரெட் வாங்கி வந்து கொடுத்தேன் அதை வாங்கிக் கொண்டு “டேய் பாலா சிகரெட் பிடிக்க மட்டும் கத்துக்காதடா அப்புறம் நிறுத்த முடியாது” என்றார் நானும் சரி என்று தலையாட்டினேன்.

இன்றுவரை நான் சிகரெட் புகைத்தது இல்லை ஆனால் எனக்கு அந்த வாசம் பிடிக்கும் ஏனென்றால் அதுதான் எனக்கு அப்பா வாசம். ■

## ஆசான்களாய் நாமிருந்து அகிலத்தைச் சமைத்திடுவோம்

அன்னைத் தமிழதனால்
அலங்கரித்த பிள்ளைகள் நாம்
தன்னை அர்ப்பணித்துத்
தாயகத்திற்காய் முற்படுவோம்...!

நாட்டினிலே நாள்தோறும்
நடந்துவரும் அவலங்களை
பாட்டினிலே எடுத்துரைத்து
பண்பாட்டை காத்திடுவோம்...!

நேசமெனும் கடமையினை
நெஞ்சுரமாய் ஏற்றுக்கொண்டு
ஆசான்களாய் நாமிருந்து
அகிலத்தைச் சமைத்திடுவோம்...!

புனிதமான புவியினிலே
புகழ்பெற்ற படைப்பான
மனிதரெல்லாம் ஓரினமே
மறவாது ஒலித்திடுவோம்...!

சாதிமத பேதமெல்லாம்
சகுனிகளால் ஆனதென்ற
சாட்டையடி கருத்துக்களால்
சாக்கடையில் தள்ளிடுவோம்...!

பாரமான பங்கங்களை
பக்குவமாய் எடுத்துரைத்து
ஈரமான எண்ணங்களை
இவ்வுலகில் விதைத்திடுவோம்...!

நேர்மை என்றவொரு
நேர்த்தியினை கையாள
கூர்மை யானவொரு
குறிப்புகளைத் தந்திடுவோம்...!

ஆண்டவனின் பார்வையிலே
அரங்கேறும் அனைத்துமென்று
அன்புடனே எடுத்துரைத்து
அகிம்சையதை நாட்டிடுவோம்...!

**க.இரவிச்சந்திரன்**



# சுதந்திர கீதம்

வானம் முழுவதையும்
விழுங்கிடப் பார்க்கிறாய்..!
அவ்வளவு பசியா உன் குழந்தைக்கு..?

இவளை
வாசிக்கத் துடிக்கும் நீங்கள்
தேடுமளவுக்கு இவள்
இதிகாசப் பாத்திரம் அல்ல.!

தாய்மை நிரம்பி வழியும் ஓர்
வரலாற்று மொழி.

சுதந்திரம் கிடைத்ததாக பறக்கும்
தேசியக் கொடிக்கம்பத்தின் கீழ்
சிறைப்பட்டுக் கிடக்கிறவள்.

மார்பு நிமிர்த்தி கொடியேற்றிய
அதிகாரக் கரங்களால் தெருவுக்கு
தள்ளப்பட்டவள்.

அன்று போர்க்களதத்தில்
தலைப்பாகை அணிந்த
துச்சாதனன்களால்
துகிலுரிக்கப்பட்டவள்.

தேசத்தின் நிமிர்தலுக்காக
அரும்பாக துளிர்விட்டு
கொய்யப்படுகிறவள்.

தேர்தல் காலத்தின் அழகி இவள்...

அரசியல் புத்தகத்தின் எழுத்து இவள்...

அடிமை சாசனத்தின் ஆச்சரியக்குறி இவள்...

ஆம்,
இவள் தான்
நான் இசைக்கப்போகும்
இன்றைய கீதம்.

இவளை உச்சரிக்கும் நாவுகளே..!

பிறமொழி குரல்வளையை நசுக்கி
இவளை
தமிழில் இசையுங்கள்.

உறங்கும் உங்கள் கண்களை
ஒளியூட்டும் இவளை ஒழித்துவிடாதீர்கள்.

பிரான்சிஸ் திமோதிஸ்
இலங்கை

# அவளை விட்டுவிடுங்கள்!

முன்வரிசையிலிருந்து
மும்முரமாக படித்தாலும்
அவள் மூளைக்கு
ஏறவில்லை!

விடியும் வரை
விழித்துப்
புரட்டிய பாடங்கள்
எதுவும் புரியவில்லை!

‘படி படி’ என்ற
நச்சரிப்பில்
நசுங்கித்தான்
போகிறாள்

‘பரீட்சையில் தேறிவிடு’
என்ற திணிப்பில்
திணறித்தான்
போகிறாள்

முடியாது என
முற்றுப்புள்ளியிடாமல்
மூன்று முறை
தோற்றிய பரீட்சையிலும்
தோற்றுதான் போனாளே!

அன்று
ஆர்வமாய் தைத்துக்
காட்டிய
ஆடையை
அலட்சியமாய்
அப்புறப்படுத்தினீரே!

இனியாவது
விட்டுவிடுங்கள்!
அவள் அவாவில்
கண்ட கனாவை
கரைசேர்த்து அகிலம்
கதைக்க வைப்பாள்!
அவளை விட்டு விடுங்கள்!

முபஸ்ஸரா பிர்தௌஸ்
இலங்கை

## தமிழ்நெஞ்சம் இல்லத் திருமணவிழா

செல்வன் : ஃபரித் - செல்வி : மலோவ்ரி

# மணமக்கள் வாழிய பல்லாண்டு

காரடி மழையாய் எந்தன்
கனிவுடை மகனின் வாழ்க்கை
நீரடி ஊற்றாய் நீண்டு
நிலத்தடி மண்ணாய்ப் பற்றி
ஈரடிக் குறளாய் நாளும்
இவனிணை யோடி ணைந்து
சீரடி அணியாய்ப் பண்ணாய்
சிறப்புடன் வாழ்க! வாழ்க!
.
கற்றுநான் தந்த பாடம்
கடந்திடும் துடுப்பாய் மாறி
உற்றநல் வாழ்க்கை ஓடம்
உளமெனும் நதியி லோட
சிற்றலை அன்பி லாடி
சிரித்திடும் மகவை யொன்றை
பெற்றுநீ தந்த பின்னே
பேரனாம் தாத்தா நானாம்
.

– தமிழ்நெஞ்சம் அமின்

பூக்களில் வாச மெல்லாம்
புன்னகை யாலே பாடும்
பாக்களின் வாச மெல்லாம்
பைந்தமி ழாலே கூடும்
தீக்கதிர் மோக மெல்லாம்
திருமணத் தாலி ணைந்து
தூக்கமும் பறித்தே யின்பம்
துலங்கிட வாசம் வீசும்
.
முகத்திரைப் பூவாய்த் தொங்க
முற்றிய காதல் மட்டும்
அகத்தினில் மலராய்ப் பூத்து
ஆகமம் சிலிர்க்கச் செய்து
பகரவே இயலா ஏதோ
பாவையின் நெஞ்சி ருக்க
செகத்திறை அருளால் எல்லா
சீர்களும் பெற்று வாழ்க
.

– தென்றல் கவி

காலையெல்லாம் போய்விடுமே காணாமல்; கட்டில்மேல்
வேளையெல்லாம் போகும் விலகாமல் - லீலையெல்லாம்
அங்கப் பறையடிக்க ஆர்க்கும் ஒலியெல்லாம்
இங்குவந்து கேட்கும் இருள்.
.
வாடவாடப் பூக்கள் வளரும்; இனிதேகம்
மூடமூடப் போர்வை முனகியழும் - தேடக்
கிடைக்காத தெல்லாம் கிடைக்கும்; திறந்தால்
மடைக்காதல் தன்னை மனம்.
.
பூட்டிவைத்தத் தாழ்ப்பாள் பூவை திறக்காமல்
மாட்டிவைப்பாள் பூவை மணம்வீச - போட்டியிட்டு
வெற்றிக்குப் பின்னே வெளியே வருமானால்
முற்றித் திறளுமாம் மூன்று.
,


- ஏடி வரதராசன்

## வற்றாச் செல்வம் பெருக வாழ்வீர்

அன்பிற் சிறந்த அருந்தமிழ் நெஞ்சத்தார்
இன்பச் செருக்கின் இனியநல் ஃபரீத்
பண்பிற் சிறந்த பணிவுகொள் மலோவ்ரி
கண்விழி யாகி காதலைப் பகிர்ந்து
மணவாழ் வினில்புகு மாண்புடை மக்காள்
உணர்விலும் ஓங்கி உயிரினில் இணைந்து
செல்வம் யாவும் சேர்ந்தே பெற்று
நல்வழி செல்வீர் நலம்பல சேர்ப்பீர்
எல்லாம் வல்ல இறையோன் அருளால்
நல்ல பெயரை ஈட்டி மகிழ்வீர்!
பெற்றோர் தம்மைப் பேணிக் காப்பீர்!
உற்றார் போற்ற உலகில் வாழ்வீர்!
நற்றவம் செய்த நட்பைப் பெற்று
வற்றாச் செல்வம் பெருக வாழ்வீர்!
நாட்டைக் காக்கும் நல்மக வொன்று
வீட்டைப் பேணும் வெல்மக வொன்று
இரண்டும் பெற்றே ஈட்டுவீர் புகழை!
கரங்கள் கோர்த்தே கடப்பீர் வாழ்வை!
வரங்கள் யாவும் வழங்கும்
பரம்பொருள் பாதம் பணிந்துவாழ்த் துவனே!

**- இராம வேல்முருகன்**
வலங்கைமான்






## சேரநாட்டு நங்கை - அனுராஜ்

“சேரநாட்டு நங்கை நாவலை”
படித்தேன்.. மகிழ்ந்தேன்.

சரித்திர குறிப்புகள் பலவற்றையும் படிக்க முடியும். ஆனால் படித்தவற்றை திருப்திகரமாக நாவல் வடிவத்தில் கொண்டு வருவதில்தான்வரலாற்றுநாவலாசிரியர்களின் வெற்றி அமைந்திருக்கிறது.

அந்த வகையில் சேரநாட்டு நங்கையின் ஆசிரியர் வெற்றியடைந்திருக்கிறார். கதை சொல்லும் விதங்களில் பல விதமான பாணிகள் உண்டு.

என்னைப் பொறுத்தவரை வாசகர்களுக்கு எளிதாகப் புரியும்படி எழுதும் பாணியே சிறப்பானது. அதிலும் இந்த நாவலின்ஆசிரியர்வெற்றிபெற்றிருக்கிறார்.

கற்பனை பாத்திரங்களை விட சரித்திரப் பாத்திரங்களை அதிகமாகக் கையாளுவது சரித்திர நாவல்களில் தனிச் சிறப்பு. அந்த வகையிலும் இந்த கதையில் சரித்திரப் பாத்திரங்களை அதிகமாக பயன்படுத்தி ஆசிரியர் வெற்றி கண்டிருக்கிறார்.

கதாசிரியர் தேர்ந்தெடுத்துள்ள கதைக் களம் செழுமையானது. பாண்டியர்கள் ஆட்சிக்குப் பாண்டியர்களே முடிவுரை எழுதிக் கொண்ட கதை இது.

இன்னும் சொல்லப் போனால் தலையைச் சொறிந்து கொள்ள கொள்ளிக் கட்டையை பயன்படுத்திக் கொண்ட கதை இது.

தமிழர்கள் தனக்குத்தானே சமாதி கட்டிக்கொண்ட கதை என்றும் சொல்லலாம்.

தாயாதிச் சண்டை அரசியலில் எந்த அளவிற்கு மோசமானது என்பதையும் விபரீதமானது என்பதையும் விளக்கும் கதை இது.

### நூல் விமர்சனம்
### வரலாற்று நாவலாசிரியர்
### உதயணன்.

வரலாற்று நாவலாசிரியர் உதயணன் அவர்களை கொள்கை வேந்தர் எனலாம். முன்னர் பத்திரிக்கை ஆசிரியர் ஒருவருடன் ஏற்பட்ட பிணக்கின் காரணமாய், தனது படைப்புகளை எந்த பத்திரிக்கையிலும் வெளியிடுவதில்லை என கொள்கை முடிவு எடுத்ததோடு, இதுவரை தான் எழுதியிருக்கும் 40 க்கும் மேற்பட்ட வரலாற்று நாவல்கள் அனைத்தையும் பதிப்பகம் வாயிலாகவே வெளியிட்ட ‘கொள்கை வேந்தர்’ இவர் என்பது கூடுதல் சிறப்பு. இத்தகைய பெருமைக் குரியவர் அடக்கத்தின் இருப்பிடமாய் வழங்கியிருக்கும் விமர்சனம் இது.. இறுதியில் படிக்கும் போது நான் கூறியதன் உண்மை விளங்கும்.

- அனுராஜ்

மொகலாயர்கள் என்னும் ஒரு சக்தியை தமிழகத்திற்கு மேளதாளத்தோடு வரவேற்று தங்களுக்குத் தாங்களே தீ வைத்துக் கொண்ட கதை இது.

மிகவும் அழகாகவும், தெளிவாகவும், எளிமையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது இது தான் இக்கதையின் ஆசிரியர் அனுராஜ் அவர்களின் அடையாளம் என்று கருதலாம்.

பஞ்சாயத்திற்கு வந்தவனே பதவி யில் அமர்ந்த கதையாக, பிரச்சனையைத் தீர்க்க அழைக்கப்பட்ட மாலிக்காபூர் பிரச்சனையை தீர்க்கவில்லை. அதை கைவிட்டு விட்டு வேறு மார்க்கத்தில் ஈடுபட்டான்.

இது பாண்டியர்கள் கதை மட்டுமல்ல. மாலிக்காபூரின் கதையும் கூட.

அவன் அரவாணியாக இருந்தாலும் பாண்டிய நாட்டு அரசியலிலும் தமிழகத் திலும் அதிர்வுகளை உண்டாக்கிய திறமைசாலி.

அது இந்த நாவலில் சிறப்பாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

மாலிக்காபூருக்கு பாண்டிய நாட்டு அரியணையில் அமரும் ஆசையோ, ஆட்சி செய்யும் ஆசையோ இல்லை.

பாண்டிய நாடு மட்டுமல்ல தமிழ கத்தில், குறிப்பாக அரண்மனையிலும் கோயில்களிலும் குவிந்திருக்கும் செல்வங் களைக் கவர்வதைத் தான் விரும்பினான்.

மாலிக்காபூர் தான் கவர்ந்த செல்வங் களை 612 யானைகளின் மீதும் 20000 புரவிகள் மீதும் ஏற்றிக்கொண்டு சென்றான் என்ற தகவலை சரித்திர ஆதாரக் குறிப்புடன் அனுராஜ் அவர்கள் குறிப்பிட்டிருப்பது வாசகர்களின் கண்களை அகல விரிக்க வைக்கும்.

பாண்டியர்கள் சண்டை சேரமானுக்கு ஆதாயமாக மாறியது, எம்மண்டலமும் கொண்டருளிய பெருமாள் என்று பாண்டியர் கள் அதுகாறும் பெற்றிருந்த சிறப்பு மறைந்து ‘மும்மண்டலமும் கொண்ட சக்கரவர்த்தி’ என்றச் சிறப்பை சேரமான் ரவிவர்மன் பெற்றான் என்பதும் இதில் விவரிக்கப் பட்டுள்ளது.

சிறப்புகள் பல. நான் இங்கே கூறுவது சில. தகவல்கள் மண்டிக் கிடக்கும் நாவல் இது. ஆதாரங்கள் அதிகமாக இருக்கும் நாவல். படிக்கப் படிக்க இனிக்கும்.. திகட்டாது.

அனுராஜ் அவர்கள் தமிழ்நாட்டு சரித்திரங்கள் பலவற்றை மேன்மேலும் நாவல்களாக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

வாழ்த்துவதற்கு எனக்குத் தகுதி யில்லை. அனைத்தும் இறைவனின் சித்தம்.

நாவலை சிறப்பாகப் பதிப்பித்த சீதைப்பதிப்பகத்தார் நன்றிக்கு உரியவர்கள்.

**உதயணன்.**
22.08.2021

ஆசிரியரை வாழ்த்த ..
+917010917953
anurajsowmi1966@gmail.com

நூல் விலை: ரூ.260 / - (இந்திய மதிப்பில்)
கிடைக்குமிடம் :
கௌரா ஏஜென்ஸீஸ் சென்னை.


உதயணன்

# காதல்

(இணைக்குறள் ஆசிரியப்பா)

காதல் கொண்டாய் காத்துக் கிடந்தேன்
பேதை யிவளின் பேரன்பு
போதை என்றேன்
மாதின் மனமும் மயங்க
வாதனைத் தருகிறதோ?
பேதலிக்கும் மனசு
நோதல் கொண்டேன் நொடியில்
போதும் கனவே போது மென்றேனே

– தமிழ்நெஞ்சம் அமின்

# தேடுகிறேன்

மெல்ல நனைகிறேன்
மென்பொருளான உன்நேசத்தில்
மெய்ப்பொருளாகிறேன்....

கோடி பன்னீர் பூக்களின்
அத்தர் தெளித்ததாய்
அர்த்தமாய் அகமகிழ்ந்தே...

எனக்கு மட்டும் காதோரம்
கிசுகிசுக்கும் உன் ரகசியக்குரலில்
மௌனப்பொதி சுமக்கிறேன்
மயங்கியே....

உன் பாதியாய் மீதியில்
சுந்தரமாய் சங்கமித்தே
சத்தமின்றி மனதில்
மௌனயாழ் இசைத்தே....

அமைதியாய் அர்ப்பணித்து
அடங்கிக் கிடக்கும் உனதன்புக்காய்
தேடுகிறேன் ஒற்றை வார்த்தை.....

- லீலா லோகநாதன்



நான் மௌனித்திருக்கும்
வேலையில் எங்கோ
யாரோ எனக்கான
கவிதையை எழுதிக்
கொண்டிருக்கிறார்கள்.....!!!

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர் மாவட்டம்

# எண்ணங்களே
# வாழ்வின் வண்ணங்கள் !

எண்ணங்கள் எழுத்தாகும்
எடுத்தெழுத ஏடாகும் ,
வண்ணங்கள் உருவாக்கும்
வடிவத்தைப் பெரிதாக்கும் .

மொழியாவும் பிறப்பதற்கும்
முன்னோரின் கலைகளுக்கும் ,
வழித்தடமாம் அமைந்தவையோ
வலிமையின் எண்ணங்களே !

காண்கின்ற பொருளனைத்தும்
காட்டுகின்ற வடிவனைத்தும் ,
பேணுகின்ற நலமனைத்தும்
பெருகவைக்கும் எண்ணங்களே !

அறிவியலின் மேன்மைக்கு
அறிஞர்கள் எண்ணங்கள் ,
புரிதலையும் தந்துவிட்டுப்
புவிதனையும் காத்துநிற்கும் .

நோயுற்ற உயிர்கட்கு
நொம்பலத்தைத் தவிர்ப்பதற்குத்
தாய்போல மருந்தினையே
தந்துதவும் எண்ணங்களே !

குடியிருக்கும் வீடுகளும்
கொலுவிருக்கும் ஆடைகளும் ,
முடிசூடா மாளிகையும்
முன்னழகு வாயில்களும் ,

அணிந்திருக்கும் அணிகலனும்
ஆடம்பரப் பொருளனைத்தும் ,
துணிவுதரும் ஆயுதங்கள்
துப்பறியும் சாதனங்கள் ,

படம்பிடிக்கும் கருவிகளும்
பார்க்கவைக்கும் கணினிகளும் ,
அடம்பிடித்து வாங்குகின்ற
அகம்நிரப்பும் பொருள்களும் ,

உண்ணுகின்ற உணவுகளும்
உயர்வகையின் பானங்களும் ,
மண்ணதனில் கிடைப்பதற்கு
மாமனிதன் எண்ணங்களே !

**கவிஞர். அ. முத்துசாமி ,**
தாரமங்கலம் .



பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
செப்டம்பர் 2021

## மனிதா.. மனிதா. .வா.. வா..



வாழும் வகையில் வாழ்க்கை உள்ளது..
வகையாய் வடித்து எடுப்போம்வா!
தாழுங் கைகள் தாங்கிப் பிடித்துடன்..
தரமாய் வாழ்வும் தருவோம்வா!
சூழும் மதத்தைச் சிதறும் நெற்றென..
சூட மேற்றி அடிப்போம்வா!
பாழும் உலகில் பிஞ்சைப் பிழிகிறார்..
பாவம் கங்கைப் புதைப்போம்வா!

மனதை உண்மை மருந்தால் நிரப்பியே..
மமதை வெடியை வெடிப்போம்வா!
கனவுத் தோட்ட கொத்துப் பூவிலும்..
கள்ளச் சாதி ஒழிப்போம்வா!
தினவு எடுத்தோர் திரண்டு வந்திடில்..
தீரத் துடனே சாய்ப்போம்வா!
இனத்தால் மனிதன் இளைக்காப் புனிதனே..
இணையாய்ப் பெண்ணை அமர்த்திடவா!

விடிதல் என்றும் வியர்வை எரிப்பினில்..
விடியல் விளக்காய் எரிவோம்வா!
படிகள் முதுகைப் படித்து முடித்துடன்..
படிக்கல் புதிதாய் பதிப்போம்வா!
அடிகள் ஆமை அவயம் இருத்தியே..
அசையும் மலையாய் எழுவோம்வா!
கடிதாய் ஏது? கடந்தால் கம்பளம்..
காலம் விரிக்கும் ஏறேவா!!



**கண்ணதாச முருகன்**

திருப்பூர்